தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒகஸ்ட் - 1995

# எரிமலை



எதிரியின் குண்டுகள்
எரித்திட்ட எம் உயிர்கள்
எரிக்குமா எங்கள்
உணர்வுகளை....



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# அக்கறைப்பூக்கள்

அன்புடையீர்

ஆரம்பகாலத்திலிருந்து எரிமலையின் வளர்ச்சியாலும், இதுவரை இடம்பெற்று வந்திருக்கும் மாற்றங்களாலும் மிகவும் மனங்கவரப்பட்டு வந்திருக்கிறேன்.

ஒரு வாசகனாக மட்டுமல்ல, பிராங் போர்ட் தமிழ்மன்ற வெளியீடான 'தமிழ் நாதம்' சஞ்சிகையின் ஆசிரியராகவும் கூட, எரிமலையின் அமைப்பு, உள்ள டக்கம், எங்கள் தேசத்துடன் எங்களை ஒட்டவைத்துக் கொள்ளும் தன்மை என்பவை என்னை என்றுமே கவர்ந்த வையாகும்.

இந்த நிலையில் எரிமலையின் வடிவ மைப்பில் நீங்கள் கொண்டுவர முனைந் திருக்கும் புதிய மாற்றமான வழுவழுப் பான தாளில் அட்டைப்படம் வெளியி டுவதை வரவேற்கும் அதே வேளையில், உட்பக்கங்கள் வழுவழுப்பாக இருப்பது என்னவோ போல் உள்ளது. முன்னைய எரிமலையின் உட்பக்கங்கள் கண்களுக்கு இதமாகவும், கவர்ச்சிகரமாகவும் இருந் தன என்பது என் கருத்து. யூன் மாத இதழின் அட்டைப்படம் சிறப்பாக இருந்தது. தமிழீழ பொருண்மியம் தொடர்பான ஆக்கங்கள், செய்திக ளுக்காக என்று நிரந்தரமாக சில பக்கங்களை ஒதுக்குவீர்களா?

அன்புடன்
ஆ. பூபதி பாலவடிவேற்கரன்
ஜெர்மெனி.

ஒவ்வொரு இதழும் ஒன்றையொன்று மிஞ்சி நிற்கிறது. ஆசிரியர் குழுவினருக் குப் பராட்டுக்கள்; வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு படைப்புக்களும் அதற் குரிய சிகரத்தை எட்டி நிற்கின்றன. சொந்த மண்ணையும், உறவுகளையும் விட்டு வந்த எங்களுக்கு, தாய்நிலத்து உணர்வுகளையும், நினைவுகளையும், அவ்வப்போது நிகழும் நிகழ்வுகளையும் விரிவாகவும், தெளிவாகவும், எரிமலை சுமந்து வருகிறது. எத்தனையோ செய்திக ளைக் கொண்டு வரும் எரிமலையைக் காணும் போதெல்லாம் என் இதயம் மகிழ்கிறது. என் இனத்தையும் தேசத் தையும் நேரில் கண்டுவிட்டாற் போன்ற சுயநினைவு ஏற்படுகிறது. கூடவே சந்தோசமும் வருகிறது. அலுவலகம் என்னைச் சாறு பிழிந்தாலும் உன்னைத் தொடும் ஒவ்வொரு வேளையும் நான் புதிதாகப் பிறக்கின்றேன். எரிமலையே உன் பணிதொடர என் இதயத்தால் மலர்கள் தூவுகிறேன்.

துறையூரரான்,
யாழ்ப்பாணம்.

தனக்கே உரித்தான தனித்துவமான சிறப்பம்சங்களுடன் வந்த "யூலை "இதழ் கண்டு மகிழ்ச்சி. மண்டைதீவு முகாம் தாக்குதல், சேதுக்கால்வாய்த் திட்டம், தலைவரின் சிந்தனைகள், யாழ்ப்பாணத் துப் பெண்களின் கல்விப் பாரம்பரி யம், சாந்தனின் நேர்முகம் என்று பல தளங்களிலே தன்னைப் பரப்பி வரும் "எரிமலை" சஞ்சிகையை இது தான் எரிமலை என்று வார்த்தைகளுக்குள் அடக்க முடியாமல், எல்லைகளைக் கடந்து எல்லாமே எரிமலைகளாகி நிற்கின்றன என்று கூறினால் மிகையாகாது.

மேலும் நம் மண்ணுக்கே உரித்தான மரபுகளுடன் இலக்கியத் தொண்டாற்றி வரும் திரு. சாந்தனின் "நேர்காணல்" நன்று. ஈழத்து இலக்கியத்தின் பொற் காலம் என்று சொல்லக்கூடிய இன்றைய பரிமாணத்தில், முக்கிய பல விழுமியங் களை வெளிக்கொண்டு வந்து, புலம் பெயர்ந்தவரிடையே வெளிப்படுத்த வழி சமைத்தது. பல பயன்தரும் கருத்துக்களை தெரிவித்த அவர் புலம்பெயர்ந்த ஈழத் தவரிடையேயான ஒரு இலக்கியத்தின் தேவையை உதாசீனம் செய்தது குறித்து எனது உள்ளக்கிடக்கையை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

ஈழத்து இலக்கியத்தை சர்வதேச அளவிற்கு இட்டுச் செல்வது நிச்சயமாக புலம்பெயர்ந்தவர்களின் கையில் இல்லை என்ற அவரின் கருத்தை முழு மனதுடன் நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஏனென் றால் இங்குள்ள பதிவுகள் அவலங்களைச் சொல்லி நிற்கின்றனவே தவிர, அவற் றுக்கான தீர்வுகளில் ஒரு வகையான பின்வாங்கலையும். செயற்கை முறையி னையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனாலும், இத்தகைய காரணங்களை முன்னிட்டு ஒரு முக்கியமான தேவையை நாம் உதாசீனம் செய்துவிட முடியாதல் லவா?

ஈழத்து இலக்கியம் என்ற விருட்சத் தின் ஒரு கிளையாக "புலம் பெயர்ந்த வர்களின் படைப்புக்கள் பரவி நிற்க வேண்டும். இன்றைய போராட்ட சூழலில் இருந்து பிரிந்து தம் தரிப்புக்களை அந்நிய சூழலில் அடைக்கலம் கொடுத்து நிற்கும் நம் சமூகத்திடையே இது ஒரு மறுக்க முடியாத தேவையாகும். திரு. சாந்தன் குறிப்பிட்டது போல விமானத் தாக்கு தலின் கோரம் பற்றியும், துப்பாக்கி எப்படியிருக்கும் என்பது பற்றியும் எழுதும் இங்கிருந்து எழும் படைப்புக்கள் ஒரு செயற்கைத் தனத்தைக் கொண்டி ருக்கும் என்பது உண்மை. ஆனாலும் வெளிக்கொணரப்பட வேண்டிய கருக்கள் ஏராளமாகவே உள்ளன.

விடுதலைக்கான ஈகத்தையும், ஆன் மீகத்தையும், உறுதியையும், இலட்சியப் பற்றையும், சமூக விடுதலையையும் இன்னும் பலவாகி நிற்கும் எம் தமிழீழ மண்ணின் வாசனையை இலக்கிய வடிப் பாக்கி நிற்கும் எமது தாயகப் படைப் புக்கள் வேறு. அச்சம் காரணமாக அலைகடலேறி தட்டிய கரை தனிலே தஞ்சம் கோரி நிற்கும் ஈழவர்கள் ஒரு சில பொருளாதார வசதிகளை எட்டக் கூடியி ருந்தாலும் உளரீதியான ஒரு தேடல், தன்னுடைய அடையாளத்துவத்திற்கான ஒருவித அலைச்சல் அவர்களிடையே பல கேள்விகளை எழுப்பி நிற்கிறது. பனிப் படர்வுகளிடையே தம்முடைய தனித்து வத்தை தொலைத்துவிடாமல் ஒரு உள மனப்போராட்டம் - அதில் தோற்றுப் போனவர்கள் - விட்டுக் கொடாமல் எட்டி வாழ்பவர்கள் - அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்று இவர்க ளுடைய தேடல்களுக்கு இவர்களினூடா கவே ஒரு தவிப்பை ஏற்படுத்தும் படைப்புக்கள் அவசியமானவையாகும்.

ஜேர்மனியிலுள்ள ஒரு துருக்கிய நாடகக் கலைஞர் கூறுகிறார் "ஒரு தலை முறைக்கு 30 வருடங்கள் மேலாகவே இங்கு வாழ்ந்து வரும் நம்முடைய துருக்கி மக்கள் பலருக்கு இத்தகைய பிரஜா வுரிமை கிடைத்திருந்தும், இரண்டையும் இழந்த ஒரு புதிய கூட்டாக தங்கள் கலைந்து போகும் தனித்துவத்தை தொலைய விடமுடியாமல் அதே நேரம் காப்பாற்றவும் முடியாமல் ஒரு உள்மனத் தேடலுக்கு உட்பட்டுள்ளனர்." இப்படி யான ஒரு துன்பகரமான நிலை எம்ம வர்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது.

ஆகவே, இந்தத் தற்காலிகத் தரிப்பின் உண்மையை உணர்த்தி, விடுதலைக்கான விருப்பை ஏற்றி பொருளாதார வளர்ச் சிக்காரணிகளை தெளிவுபடுத்தி, யுத்த அழிவுகளால் ஏற்பட்ட நம்பிக்கையின் மையை நீக்கி, புதிய வடிவு பெற்று வரும் படைப்புக்களே, யத்தம் நீங்கிய விடுதலை பெற்ற சூழலில் வாழப்போகும் தகுதி களை புலம் பெயர்ந்தவர்களிடையே ஏற்ப டுத்த முடியும்.

பிரசாந்த், ஜெர்மனி.

www.tamileelamarchive.com

எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம்
ஆண்டு
ஓகஸ்ட் 1995

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# நீண்டதொரு யுத்தத்துக்கு நாம் தயாராவோம்

சிறீலங்கா அரசாங்கத்தின "முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கை சில விடயங்களை அப்பட்டமாக தெளிவு படுத்தியுள்ளன. ஒன்று, தமிழ் மக்களை இராணுவ ரீதியாக அடக்குவதற்கு விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்பது. இரண்டாவது, தமிழ் மக்களின் மனங்களை வெல்லுதல் என்பதை விட அவர்களைப் போரின் மூலம் வெல்லுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய தென்பது. மூன்றாவது, சர்வதேச சமூகத்தைப் போதியளவு தனது பிரச்சாரத்தின் மூலம் ஏமாற்றி விட்டோம் என்ற கருதுகோளின் அடிப்படையில், தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையையும், பாரிய மனித உரிமை மீறல்களையும் கட்டவிழ்த்து விடலாம் என்பது. நாலாவது, பொய்ப்பிரசாரத்தை வெற்றிகரமாக செய்வ தென்பது. ஐந்தாவது, கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களை சிறிலங்கா இராணுவ நடவடிக்கைக்கும், இனப் படுகொலைக்கும் பயன்படுத்திக்கொள்வது ஆறாவது, தீர்வுத்திட்டம் என்ற மாயமானை விடுதலைப் புலிகளை அழித்தோ அல்லது அழிப்பதற்கோ பயன்படுத்துவது. ஏழாவது இதன் மூலம் சிங்கள மேலாதிக்கத்தை தமிழர் மீது நிலை நிறுத்துவது, விடுதலைப் புலிகளின் "புலிப் பாய்ச்சல்" அரசின் இவ்வளவு திட்டங்களையும் சிதறடித்துள்ளது. அரச படைகள் பின்னோக்கிப் பாய்ந்ததுடன் அரசாங்கம் புதியதான சதிகாரத் திட்டங்களைத் தீட்டுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசாங்கம், சமாதனத் தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாக கூறுகிறது. விரைவில் அத்திட்டத்தை வெளியிடப் போவதாகக் கூறுகிறது. ஆயினும் சில அம்சங்களை பத்திரிகைகளுக்கு ஒழுக விட்டதாகத் தெரிவிக்கிறது. அத்திட்டம் பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் கொடுக்கப்பட்டு, கருத்தொற்றுமைக்கும், பிய்த்துப்பிடுங்கலுக்கும் உள்ளாக்கப்படும் என்று கூறப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தின் எல்லைகள் மீள வரையப்படும் என்றும், அங்குள்ள பல்வேறு இனங்களின் குடிசன விகிதாசாரப்படி அது துண்டாடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை என்பதும், பல்வேறு சமூகங்களில் ஒன்றாகவே அங்கீகரித்துள்ளதும் தெரியவருகின்றது. ஆகவே, அரசாங்கம் பாரளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்க உள்ள திட்டம், தமிழர் தாயக பூமியை முழுமையாக அங்கீகரிக்கவில்லையென்பதும், தாயகக் கோட்பாட்டையே அங்கீகரிக்கவில்லையென்பதும், தமிழ் மக்களை சுயநிர்ணய உரிமையுள்ள ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கவில்லை என்பதும் தெளிவாக உள்ளது. இத்திட்டம் பராளுமன்ற தெரிவுக்குழுவில் விவாதிக்கப்பட்டு, சகல அரசியல் கட்சிகளின் வெட்டுதல், கொத்துதலுக்கு உள்ளாகி வரும்போது, "உலக்கை தேய்ந்து உளிப்பிடி" ஆகியது போல் என்ன வடிவத்தில் வரும் என்பதும் தெரியாதுள்ளது. சமஷ்டி என்று சொல்லப்படாத சமஸ்டி வடிவமாக இது இருக்கும் என்று அரச பிரச்சாரம் கூறுகிறது. தமிழ் மக்களின் அடிப்படைக் கொள்கைகளை, அபிலாசைகளை அங்கீகரிக்காது வரையப்பட்டுள்ள இத்திட்டமானது இறுதியில் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கூடாக வெளிவரும் போது ஒற்றையாட்சி என்று சொல்லப்படாத ஒற்றையாட்சி வடிவமாகவும் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதாகவும் அமையும் என நம்பலாம்.

இந்த அடிப்படையில் நாம் பார்ப்போமானால் முன்னேற்றம் எதுவும் இல்லாது ஆரம்பித்த இடத்திலேயே விடயம் இருப்பதைக் காண்போம். எனவே சமாதானத் தீர்வுத் திட்டம் என்பது வெறும் ஏமாற்று முயற்சியாகவே இருக்கும். இதனை சர்வதேச உலகில் விற்பதற்கு பெரும் பிரச்சாரம் அரசாங்கத்துக்கு தேவையாக இருக்கும். தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் இணங்கச் செய்வதற்குப் பெரும் இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இச் சமாதானத் தீர்வத்திட்டமும் எவ் எலும்புத் துண்டையும் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கும் கொழும்புக் குழுக்களின் அனுசரணையும் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைக்கு உதவியாகப் பயன்படுத்தப்படும். எனவே இராணுவத்தின் முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கை சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு முயற்சியின் பெரியதொரு ஆரம்பம் என்று கூறலாம்.

போர் நடவடிக்கை தொடர்ந்து அரசாங்கத்தின் முதன்மைச் செயற்பாடாக இருக்கும். இதனை வெற்றிகரமாக எதிர்கொண்டு தமிழர் தம் அடிப்படை அரசியல் உரிமைகளை நிலைநாட்டுவதைத் தவிர வேறு வழி இல்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



புலிப் பாய்ச்சலின்போது தாக்கி அழிக்கப்பட்ட, வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற இராணுவ கனரக வாகம்



# புலிப் பாய்ச்சலும் பின்னோக்கிப் பாய்ந்த இராணுவமும்

சிறீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், இதுவரை காலமும் நடைபெற்ற சண்டைகளில், யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற அரசாங்கம் நடத்திய "முன்னோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை பல்வேறு காரணங்களினால் முக்கியத்துவம் பெறுகிறது. இந்திய இராணுவம் குடாநாட்டின் மீது நடத்திய "பவான்" இராணுவ நடவடிக்கையை விட இது அழிப்பிலும், ஆக்ரோஷத்திலும் குறைவாகவும், சிறீலங்காவின் "ஒப்பரேஷன் லிபரேஷனை" விடப் பாரியதாகவும் இருந்துள்ளது. "பவான்" நடவடிக்கையில் உலங்குவானூர்திகளால், ஏவப்பட்ட எறிகணைகளாலும், பீரங்கித் தாக்குதல்களாலும், முன்னேறிய படையினராலும் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் கொல்லப்பட்ட, 6000-8000-கும் இடைப்பட்ட பொதுமக்களில், "பவான்" நடவடிக்கையின் போதே பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாண வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள், நோயாளிகள் தரைப்படையினரால் கொடூரமாகக் கொல்லப்பட்டது எல்லாக் கொலைகளுக்கும் சிகரமாய் அமைந்தது. "முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கையில், ஷெல் வீச்சுக்களினாலும், விமானக் குண்டு வீச்சுக்களினாலும் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஒரு நிமிடத்துக்கு ஒரு ஷெல்லாவது விழுந்து வெடித்ததாகக் கூறப்படுகிறது. நவாலி சென்பீற்றர் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கொலைச் செயல்களுக்கு மகுடம் வைத்தது போல் இருந்தது. இந்திய அரசாங்கத்தின் பூரண ஆசியுடனேயே இக் கொலைகளும் நடத்தப்பட்டன என்பது முக்கிய விடயமாக உள்ளது. இவ் இராணுவ நடவடிக்கையின் போது 247 பொதுமக்கள் கொல்லப்பட்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். அவர்களில் 470 பேர் படுகாயம் அடைந்து உடல் உறுப்புக்களை இழந்தார்கள். கொல்லப்பட்டவர்களில், 65 பேர் குழந்தைகளாக உள்ளனர். இறந்து, காயமடைந்தவர்களில் அரைவாசிக்கு மேல் பெண்களும், வயது முதிர்ந்தோர்களும் ஆவார். தேவாலயம் மீதான தாக்குதலில் மட்டும் 120 பொதுமக்கள் இறந்தனர். அங்கு இறந்த 20 சிறார்களில் 13 பேர் கைக்குழந்தைகளாகவும் உள்ளனர்.

யாழ். குடாநாட்டில் சிறீலங்காவின் கட்டுப்பாட்டிலுள்ள பலாலியிலிருந்து அச்சுவேலி, சங்கானை, சண்டிலிப்பாய், அளவெட்டிக் கூடாக ஒரு பெரும் அணியும், மாதகலிலிருந்து இன்னொரு பேரணி, கரையோரமாக காரைநகருக்கூடாகவும், ஊர்காவற்துறையிலிருந்து அராலிக்கூடாகவும் இன்னொரு அணியும் வந்து வட்டுக் கோட்டை, துணாவி ஆகிய இடங்களில் சந்திப்பதே முதற்கட்ட நடவடிக்கையாகும். பின்னர் அராலியிலிருந்து, அனைத்து அணிகளும் கல்லுண்டாய் வெளி, பொம்மை வெளிக்கூடாக யாழ். நகரை நோக்கி வந்து அதனைக் கைப்பற்றுவதாக இராணுவ திட்டம் இருந்தது. ஞாயிற்றுக்கிழமை 9ம் திகதி காலை "முன்னோக்கிப் பாய்தல்" என்ற குறியீட்டுப் பெயருடன், 4 பிரிகேட் படைப் பிரிவுகளைக் கொண்டதான 10000-க்கும் மேற்பட்ட இராணுவத்தின் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியது. அப்போதே இப்போர் நடவடிக்கையின் தோல்வியைத் தேசியத் தலைவர் பிரபாகரன் தீர்மானித்துவிட்டதாகக் கருதுகிறேன். பின்னர், எப்படி, எங்கு, எந்த நேரத்தில் இராணுவத் தோல்வியை முற்றுப் பெறச்செய்ய வேண்டும் என்ற அம்சங்களை தலைவர் தீர்மானிப்பதும், அதனை அச்சொட்டாக நடைமுறைப்படுத்துவதுமே எஞ்சி இருந்தன.

- வளவன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


முதலில், இந்த இராணுவ நடவடிக்கை தமிழ் இனப்பிரச்சினையோடு மட்டும் தொடர்புடையதாக இருக்கவில்லை. கொழும்பில் உள்ளூர் அரசியலோடும் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. தென்பகுதியில் போர் ஆயத்தங்களின் விளைவாக ஏற்பட்ட விலைவாசி உயர்வுகள், வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றைச் சமாளிக்க வேண்டியிருந்தது. மேலும் ஜனாதிபதிப் பதவியை அகற்றப் போவதாக தேர்தல் காலத்தில் பகிரங்கமாகக் கூறிய போதிலும், சகல வல்லமை பொருந்திய அப் பதவியை விட்டுவிட ஜனாதிபதி சந்திரிகாவிற்கு மனம் ஒப்பவில்லை. யூலை 15-ம் திகதிக்குள் அதனைச் செய்வதான காலக்கெடு நெருங்கி வந்து கொண்டிருந்தது. எனவே இப் பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பவும், இராணுவ வெற்றி ஒன்றுடன் ஏனைய பிரச்சினைகளைச் சமாளித்து தனது அரசியல் நிலையைப் பலப்படுத்திக் கொள்ளவும் ஜனாதிபதி சந்திரிகா விரும்பினார். எனவே தான் உக்ரேனிலிருந்து வருவதாக இருந்த AN-32 துருப்புக்காவும் விமானங்கள் போன்ற இராணுவத் தளபாடங்கள் முழுமையாக வந்திறங்கும் முன்னரே இராணுவ நடவடிக்கையைத் தொடங்க அரசாங்கம் விரும்பியது. எனவே தான் "இந்தியா டுடே" க்கு அளித்த பேட்டியில் சந்திரிகா கூறியிருந்தது போன்று, "ஏராளமான உயிரிழப்புக்கள் ஏற்படும். அப் பகுதியே துடைத்தழிக்கப்படும்" என்று தெரிந்தும் இராணுவ நடவடிக்கையை அவர் அவசரப்படுத்தித் தொடங்கினார். இத்தகையதொரு இராணுவ நடவடிக்கை குடாநாட்டின் மீது ஆரம்பமாகப் போவது, மேற்கூறிய உள்ளூர் அரசியல் நோக்குக் காரணமாக ஏற்கனவே வெளிப்படையாகத் தெரிந்திருந்தது. எந்தத் திகதி என்பது தான் தெரியாது இருந்தது. எனவே இதனை எதிர்கொள்ள புதிய போராளிகள் ஏராளமானேரைச் சேர்த்துக் கொள்ளும் நிர்ப்பந்தத்தையும், சந்தர்பத்தையும் விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்தது. மேலும் மண்டைதீவு மீதான முன் எச்சரிக்கையான தாக்குதல், அர



"முன்னோக்கி பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சாங்கத்தின் இராணுவ தந்திரோபாயத்தில் பெரும் ஒரு அடியாகவும், ஓட்டையாகவும் அமைந்தது. (மண்டைதீவு தாக்குதல் தொடர்பான கட்டுரையை நோக்கவும்) எனவே, இராணுவம் பலாலியிலிருந்து பெரும் படை நகர்வை, கிடுக்கி போன்ற வடிவமைப்பில் (pincer movement) நடத்த வேண்டியிருந்தது. மண்டைதீவில் இருந்தோ ஏனைய முகாம்களில் இருந்தோ ஓரே நேரத்தில் புறப்படும் கடந்த கால நடவடிக்கை, இம் முறை கைக்கொள்ளப்படாது, பலாலியிலிருந்து பெரும்படை நகர்வை திட்டமிட்ட ரீதியில் வழிநடத்துவது என்ற நோக்கத்தின் பாற்பட்டதாக இருக்கலாம். இங்கு தான் இப்படை எடுப்பின் தோல்விக்கான பலவீனம் இருந்தது. அப்பலவீனத்தை தேசியத் தலைவர் மிக நுட்பமாக, அவகாசமாக பயன்படுத்திக் கொண்டதே, போர் நடவடிக்கையில் திருப்புமுனையாக அமைந்தது. அது சிறீலங்காவின் "முன்னோக்கிப் பாய்தல்" என்ற தாக்குதல் நடவடிக்கை, விடுதலைப் புலிகளின் "புலிப்பாய்ச்சல்" என்ற தாக்குதல் நடவடிக்கைக்கு வழிவகுத்தது.

போர் நடவடிக்கையில் விநியோகம் என்பது முக்கியமான இடத்தை வகிக்கின்றது. மரபு ரீதியான போர் முறையில் இதன் பங்கு இன்னும் அதிகமானது. படை எடுக்கும் இராணுவப் பேரணி, எவ்வளவு நீளமாக்கப்படுகின்றதோ, எவ்வளவு பரவலாக்கப்படுகின்றதோ அவ்வளவத்துக்கு விநியோகம் என்பதும் சிக்கலடைகிறது. புதிய துருப்புக்கள், புதிய ஆயுதத் தளபாடங்கள், வெடிபொருட்கள், உணவு வகைகள் ஆகியவை தொடர்ந்து சண்டைக் களத்துக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது படையணிகளில் சீர்குலைவு ஏற்பட்டு விடும். சிறீலங்காவை பொறுத்தவரை, கடற்புலிகளின் செயற்பாட்டால், மிகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டே விநியோகங்கள் ஓரிரு மறைகுடா நாட்டு முகாங்களுக்கு வழங்கப்பட்டன. (Avro) அவ்ரோ விமானங்கள் வீழ்ந்ததன் காரணமாக விமானப் போக்குவரத்துக்களும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தன. தரைவழிப் போக்குவரத்து முற்றாக இல்லை. எனவே ஓர் அளவில் தென் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட விநியோகங்கள், படையணிகள் கடக்கின்ற தூரம், காலம் என்பதைப் பொறுத்து குறையத் தொடங்குகின்றன. இப்படியான ஒரு நிலையே சிறீலங்கா இராணுவத்துக்கு 14-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று அதாவது நடவடிக்கை தொடங்கி 6-ம் நாள் ஏற்பட்டிருந்தது. இச் சந்தர்ப்பத்தையும், பொருத்தமான இடத்தையும் தாக்கியதில்தான் பிரபாகரனின் போர்த்தந்திரம் அடங்கியுள்ளது. தாக்கிய இடங்கள், இராணுவப் பேரணியின் கட்டளை, விநியோக மையமாக மாற்றப்பட்டு, தற்காலிக முகாங்களாக அமைந்திருந்த அளவெட்டி, சண்டிலிப்பாய் பகுதிகளாகும். இதில் அடிப்பது தலையிலும், வயிற்றிலும் அடிப்பதைப் போன்றது. இதன் போது 100-க்கும் மேற்பட்ட இராணுவத்தினர், 4 அதிகாரிகள் கொல்லப்பட்டனர். 17 கனரக கவசவாகனங்கள் இராணுவ விநியோகங்களோடு புலிகளால் கைப்பற்றப்பட்டன. அங்கிருந்த இராணுவ விநியோகங்கள் அனைத்தையும் புலிகள் எடுத்துச் சென்று விட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார். மிகவும் தேவையான நேரத்தில் தமது விநியோகங்களை இழப்பது மட்டுமல்ல, எதிரிக்குக் கொடுப்பது இரண்டு தரம் தற்கொலை செய்வதற்கு ஒப்பானது. புலிகளின் இத்தாக்குதலோடு, முதுகெலும்பு முறிந்து நகர முடியாத நிலை அரச படைகளுக்கு ஏற்பட்டு விட்டது. இதன் பிறகு, பின்னோக்கிப் பாய்தலைத் தவிர வேறுவழி இருக்கவில்லை. முன்னோக்கி மேலும் நகர முடியா நிலைமைக்கு அன்றைய தினம் புக்காரா குண்டு வீச்சு விமானம் விடுதலைப்புலிகளால் வீழ்த்தப்பட்டதும் முக்கிய காரணம். வழமையாக மரபு இராணுவங்கள் செய்வது போன்றே, முன்னேற உள்ள பகுதிகள் மீது இடைவிடாத எறிகணைத் தாக்குதல்களை நடத்தி விட்டு, சிறீலங்கா இராணுவ அணிகளும் முதல் 6 நாட்கள் முன்னேறின. அரசாங்கம் திட்டமிட்டவாறு, 3 இராணுவ அணிகளும் வட்டுக் கோட்டைப் பகுதியில் சந்தித்துக் கொண்டன. இனி மேல், யாழ்நகர் மீது தாக்குதல் நடத்துவது குறித்த ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும் போதே திருப்புமுனையான, சண்டையின் திசையையே முற்றாகத் திருப்பிவிடும்படியான விடுதலைப்புலிகளின் தாக்குதல் இடம்பெற்றது. உணவு தளபாட விநியோகம், புதிய துருப்புக்களை பொருத்தமான இடங்களில் இறக்குதல், காயப்பட்டோரை அப்புறப்படுத்தல், இராணுவ அதிகாரிகளின் போக்குவரத்து ஆகியவற்றிற்கு விமானங்களை, உலங்குவானூர்திகளைப் பயன்படுத்த முடியாத நிலை, புக்காராவின்

**"முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கையின் போது, விடுதலைப் புலிகள் மரபு ரீதியான இராணுவம் போன்று செயல்படவில்லையென்று எதிரான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் தன்னளவில், மரபுரீதியான, ஒழுங்கமைந்த இராணுவமாக வளர்ச்சிபெற்று வருகின்ற போதிலும், சிங்கள இராணுவத்துடனான பாரிய சண்டைகளின் போது கெரில்லா உத்தி ரீதியிலேயே சண்டையிட வேண்டும். எப்போதுமே ஆயுதபலம், ஆட்பலம் கூடிய நிலையில் உள்ள சிறீலங்கா இராணுவத்துடன் குறைந்த ஆள், ஆயுத எண்ணிக்கையுடனான போராளிகள் மரபு ரீதியில் மோதுதல் தற்கொலைக்கு ஒப்பாகும். இவ்வாறு சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு உத்திகளை மாற்றும் தன்மை (flexibility) கெரில்லா இராணுவத்தின் சிறப்புத் தன்மையே தவிர குறைபாடு அல்ல. விடுதைலப் புலிகள், சிறீலங்கா இராணுவம் முன்னேறிய பகுதிகளை விட்டு விலகியது உத்தி ரீதியான (tactical) பின் வாங்கலே தவிர, தந்திரோபாயத் திட்ட அடிப்படையிலான (strategic) நகர்வே. சிறீலங்கா இராணுவப் படைகள், தமது இராணுவ நடவடிக்கையின் இலக்கை அடையமுடியாது (யாழ் குடா நாட்டைக் கைப்பற்றுதல்) தமது பலாலி தளத்துக்கு பின் வாங்கியதையே நாம் தந்திரோபாயத் திட்ட அடிப்படையிலான பின்வாங்கல் என்று கூறலாம்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




நவாலி புனித பேதுரு கத்தோலிக்க ஆலயம் மீதான குண்டுவீச்சு



ஆலயத்துள் தஞ்சம் புகுந்திருந்த குழந்தைகள், குண்டுவீச்சில் பலியான காட்சி

வீழ்ச்சியுடன் ஏற்பட்டது. புக்காரா வீழ்ந்ததன் பின்னர், குடாநாட்டு களப் பகுதிகளில் எவ்வித விமானங்களும் பறக்காதது குறிப்பிடத்தக்கது.

ஒரு சண்டையின் வெற்றிக்கு, எதிர்பாராத திடீர்த்தாக்குதல் கணிசமான பங்கை வகிக்கிறது. முதற்கட்ட நடவடிக்கை பெரும் இழப்புக்களின்றி முடிவுற்ற திருப்தியில் இராணுவம் இருந்தது. இராணுவ அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் யாழ்ப்பாண நகரைப் பிடிக்கும் கனவுகளில் மிதந்தனர். "விடுவிக்கப்பட்ட" பகுதிகளுக்கு எண்ணை, மின்சாரம், உணவுப்பொருட்களை, புனர்வாழ்வு அமைச்சரை அனுப்பி அவர் மூலமே விநியோகிக்க அரசாங்கம் முடிவெடுத்தது. புலிகள் அப்புறப்படுத்தப்பட்ட பகுதிகளில் உணவுப் பொருட்களைக் கொண்டு போய் வைத்தால், சனங்கள், புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்து, அவர்களை மீறிக் கொண்டு உணவுக்காக இராணுவப் பகுதிகளுக்கு ஓடிவருவார்கள் என்ற கருத்தும் அப்போது சந்திரிகா அம்மையாரால் வைக்கப்பட்டது. புலிகள் எல்லோரும் ஓடிப் போய் அகதி முகாம்களில் இருப்பதாகவும் ஒரு கதை பரப்பப்பட்டது. பிரபாகரன் வெள்ளைக் கொடியைத் தூக்கிக் கொண்டு அரசாங்கத்தின் காலில் விழுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வாறு பலூன் போன்று பூரித்திருந்த இராணுவத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. பலாலியில் இருந்து புறப்பட்ட பிரதான அணியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, அப்பகுதிகளில் இருந்து விரட்டப்பட்ட பின்னர் கரையோரமாக உள் நுழைந்த அணிமீதும், ஊர்காவற்றுறையிலிருந்து அராலிக்கூடாக உள் நுழைந்த இராணுவ அணிமீதும் "புலிப்பாய்சல்" நடவடிக்கை என்ற பேரில் பிரபாகரனின் தலைமையில் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இச் சண்டைகள் வலிகாமம் மேற்குப் பகுதியில் நடந்தன. கடுமையான எதிர்த்தாக்குதல்களைத் தாங்கமுடியாத இராணுவம் பின்வாங்கி தமது முன்னைய நிலைகளுக்குள் சென்று முடங்கிக் கொண்டது. இச் சண்டைகளின் போது 150-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்துடன் சிறீலங்காவின் "முன்னோக்கிப்பாய்தல்" நடவடிக்கை தோல்வியில் முற்றுப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



"முன்னோக்கி பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது அகதிகளாக்கப்பட்ட மக்கள்

பெற்றது. ஆயினும் 16-ம் திகதி ஞாயிறு காலை, "புலிப்பாய்ச்சல்" இன் ஒரு அம்சமாக காங்கேசன் துறைமுகத்தினுள் தரித்து நின்ற கடற்படைக் கப்பல்கள் மீது தாக்கு தல் தொடுக்கப்பட்டன.

மண்டைதீவுத் தாக்குதல், சிறீ லங்கா இராணுவ நடவடிக்கைக்கு முன் எச்சரிக்கையாக நடத்தப்பட்டது என்று கூறினால், காங்கேசன் துறை துறைமுகத்தின் மீது நடத்தப் பட்ட தாக்குதல், பின்வரக் கூடிய தாக்குதல்களை எச்சரிக்கையாகக் கொண்டு நடத்தப்பட்டது என்று கருதுகிறேன். கடற் புலிகள் என்ற படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 4 மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்த மிகப்பெரிய கடற் சண்டை இதுவென வர்ணிக்கப் படுகிறது.

இதனை, கடற்புலிகள், கடற்கரும் புலிகள் அணி, சுலோஜன் நீரடி நீச்சல் அணி ஆகியவை இணைந்து நடத்தியுள்ளன. ராடர் பொருத் தப்பட்டு கண்காணிப்புக்கும், கட்டு பாட்டுக்கும் பயன்பட்ட "எடித் தாரா" என்ற கட்டளைக் கப்பலும், இராணுவத்தினரை கடல்மார்க் கமாகத் தரையிறக்கும் பாரிய கப்பலுமே தெரிந்தெடுத்து மூழ்க டிக்கப்பட்டுள்ளன. கடற்சண்டை யின்போது பல கப்பல்கள் சேத மாக்கப்பட்டுள்ளன. சிறீலங்காவின் கடல் வழிச்செயல்பாட்டை, இனி வரும் காலங்களில் கணிசமான அளவு குறைக்கும் நோக்குடனேயே இத்தாக்குதல் நடைபெற்றதாக ஊகித்துக் கொள்ளலாம். அரச ஆயுதப்படைகளின் மனஉறுதி இவற்றால் தளர்ந்துள்ளதையும் அவதானிக்கலாம். இவ் இராணுவ நடவடிக்கையால், அரசாங்கம் சாதித்தது ஒன்றுமில்லை. சிறீலங் காவின் முன்னைய இனவாத தலைமைகளைப் போன்றே, இரா ணுவத் தீர்வை பரிசீலித்துப் பார்த்து தோல்வி கண்ட நிலையில் சந்திரிகா உள்ளார். அவரது அரசி யல் ஸ்திரம் மேலும் பலவீனம டைந்துள்ளது. சமாதானத் தூதுவர் என்ற தோற்றம் அகன்று, மரண தேவதை என்ற உண்மைத் தோற் றம் வெளிப்பட்டுள்ளது. தமிழ் மக்களை புலிகளிடமிருந்து பிரித்து, அவர்களின் மனங்களை வென்று, அவர்கள் விரும்பும் தீர்வை வழங் குதல் என்ற அவரின் வார்த்தைகள் இரத்தக் குளிப்பால் மூழ்கடிக்கப் பட்டுள்ளன. தமிழ் மக்களை விடுதலை செய்தல் என்பது அவர் களைப் பரலோகத்துக்கு அனுப்பு தல் என்றும், அமைதி என்பது தமிழ்பகுதிகளில் மயான அமைதி யைத் தோற்றுவித்தல் என்றும் அர்த்தங்களை இந்த இராணுவ நடவடிக்கை தந்துள்ளது. இராணு வத்திற்கு எதிரான நடவடிக்கை களிலும்) அவசரகால பொதுத் தொண்டு நடவடிக்கைகளிலும், தமிழ் மக்களின் செயல்பாடுகள் பூரணமாக இருந்ததாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியே தெரிவித்துள்ளார். சர்வதேச மனித உரிமை, மனிதாபிமான அமைப்புக் கள், அரசாங்கங்கள் ஆகியவற்றின் பலத்த கண்டனத்தை சந்திரிகா அரசாங்கம் சம்பாதித்துக் கொண் டது. இனப்படுகொலையும், சிங்கள மேலாதிக்கமும் தான் சந்திரிகா அரசாங்கத்தினதும் இறுதித் தீர்வு என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகெண்டது.

நிலப்பகுதிகளை ஆக்கிரமிக்கும் அதேவேளை, கிளர்ச்சிக்காரரையும் அவர்களது தலைவர்களையும், ஆதரவளிக்கும் பொதுமக்களையும் எவ்வளவு கொல்ல முடியுமோ அவ்வளவுக்கு கொல்ல வேண்டும். இதுவே இறுதி வெற்றிக்கு வழி என்ற ரீதியில் அரச இராணுவம் செயற்பட்டது. மிகப்பெரும் இப் படை எடுப்பை மிகக் குறுகிய நாளில் மிகக்குறைந்த போராளிக ளின் (80 போராளிகள்) இழப்புக் களுடன் முறியடித்தது, போர்க் கலை பற்றிய ஆய்வாளர்களின் ஆய்வுக்கு உட்படப் போவது உண்மை. நவீன உலகின் தலை சிறந்த கெரில்லாத் தலைவர் என்ற பெருமையும் எமது தேசியத் தலை வருக்கு இது பெற்றுத்தரும் என்று நிச்சயம் நம்பலாம். ★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மண்டைதீவுத் தாக்குதல்

## ஒரு போரியல் புதுமை

மண்டைதீவு இராணுவத் தளம் மீதான தாக்குதல் வெற்றியை ஒரு போரியல் புதுமை என்றே கூறலாம். அப் புதுமை நடைபெறாது என்று நம்பியிருந்ததே அரசபடைகளின் பலவீனம். அதனைத் திறம்படப் பயன்படுத்தியதே தலைவர் பிரபாகரனின் கெட்டித்தனம்.

மண்டைதீவு யாழ். நகருக்கு மிக அண்மையில் உள்ள தீவு. குடாநாட்டின் பிரதான நிலப்பகுதியிலுள்ள யாழ் நகரை மண்டைதீவுடன் ஒரு பாலம் இணைத்தது. பாலத்துக்கு இப்பால் விடுதலைப் புலிகளும் பாலத்துக்கு அப்பால் இராணுவமும் எதிரேதிரே நிற்கின்றனர். பாலத்துக்கு இருபக்கத்திலும், ஒருவர் இன்னொருவர் படை எடுப்பதைத் தடுக்கும் நோக்கில், வாகன எதிர்ப்பு, ஆள் எதிர்ப்பு கண்ணிவெடிகள் நிறையவே விதைக்கப்பட்டுள்ளன. எனவே பெரியதொரு படை எடுப்பை அதனூடு நிறைவேற்ற விரும்பினால் ஒழிய இத் தடைகளை அகற்ற இரு பகுதியினரும் ஒப்பமாட்டார்கள். எனவே, மண்டைதீவை அடையவேண்டுமெனில், தரையினால் அல்ல, கடல்வழியாகவே முடியும் என்பது உறுதிப்பட்ட உண்மையாக விளங்கியது. மண்டைதீவுத் தளம் 800 இராணுவத்தினரைக் கொண்டது. பல கனரக வாகனங்களும், மோட்டார்களும், பீரங்கிகளும் அங்கிருந்தன.

மண்டைதீவிலிருந்து யாழ்நகரப் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சுக்களும் இடம்பெற்றன. மண்டைதீவு, பக்கத்திலுள்ள ஊர்காவற்துறைத் தீவுடன், பரவைக் கடல் வழியை இணைத்துப் போடப்பட்ட தரைப்பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்துறையில் சிறீலங்காவின் பெரியதொரு இராணுவத்தளம் உள்ளது. அருகிலுள்ள காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து தேவை எனில் கடற்படைக் கப்பல்களும், பீரங்கிப் படகுகளும் மண்டைதீவுக்கு வந்து படைகளை மண்டைதீவில் இறக்க முடியும்.

மிக அண்மையிலுள்ள பலாலி விமானத்தளத்திலிருந்து புக்காரா குண்டு வீச்சு விமானங்களும், F-7 என்ற தரையை நோக்கி தாக்குதல் நடத்தும் விமானங்களும், Bell 212 உலங்கு வானூர்திகளும் உதவிக்கு வந்து புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தவும், மண்டைதீவிலிருந்து காயம்பட்ட இராணுவத்தினரை அப்புறப்படுத்தவும், விநியோகங்களை வழங்கவும் முடியும். இவ்வளவு பாதுகாப்பும் இருக்கின்ற நம்பிக்கையில் மண்டைதீவு இராணுவத்தினர் இறுமாந்திருக்க வேண்டும்.

## ஒரு புதிய பரிமாணம்

விடுதலைப்புலிகள் கடல் வழியே வரவேண்டுமென்றால், 800 இராணுவத்தினரைக்கொண்ட பெரியதொரு படைமுகாமை வெற்றி கொள்ள 100-க்கு மேற்பட்ட படகுகளில் ஆயிரம் அளவிலான புலிகளாவது தரை இறங்கவேண்டும். இது நடைமுறைச் சாத்தியமில்லை என்ற கணிப்பில் சிறீலங்கா இராணுவம் தப்புக்கணக்கு போட்டது.

இதேவேளை விடுதலைப் புலிகள் தமிழக மீனவர்களிடமிருந்து பல மீன்பிடி "ரோலர்களை" எடுத்துக் கொண்டதாகவும், அதற்கான நஷ்டஈடு அம் மீனவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் கொழும்பிலிருந்து கிடைத்த செய்தி தெரிவித்தது. இதிலுள்ள உண்மை, பொய் தெரியாதுவிடினும், இதன் அடிப்படையில் சிறீலங்கா அரசாங்கம், விடுதலைப்புலிகள் கொழும்புத் துறைமுகத்தைத் தாக்கப் போவதாக தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டது. அவ்வேளை, வெளிநாடுகளில் வாங்கப்பட்ட ஆயுதங்கள், குறிப்பாக இந்தியா சிறீலங்காவுக்கு உதவியாக வழங்கிய ஆயுதங்கள் கொழும்புத்துறைமுகத்தில் கப்பல்களில் கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டதால், கொழும்புத் துறைமுகம், கடற்புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சம் இருந்தது. சிறீலங்கா இராணுவ உளவுப் பிரிவும் கொழும்புத் துறைமுகமே தாக்கப்படும் என்று சிறீலங்காவின் உயர்மட்ட பாதுகாப்புச் சபைக்கு அறிவித்திருந்தது. இதனாலேயே, தமிழ் நாட்டின் தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து வருகின்ற கப்பல்களையெல்லாம் கொழும்புத் துறைமுகத்துள் வரக்கூடாது என்று சிறீலங்கா அரசாங்கம் தடை செய்தது. மேலும், கிழக்கு மாகாணத்தில், விடுதலைப்புலிகள் தங்கள் தாக்குதல்களை அதிகரித்திருந்தார்கள். தென்தமிழீழத்தை மீட்டெடுக்கும் போரில், விடுதலைப்புலிகள் தமது பெரும் தாக்குதல்களை கிழக்குப் பகுதியிலேயே செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. மேலும், யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல் ஒன்று இடம் பெறுமானால், அது பூநகரி மீதானதாகவே இருக்கும் என்றும் பரவலாக நம்பப்பட்டது. சிறீலங்கா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது, பூநகரி முகாம்

**வளவன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அமைதி இழந்துபோன கொழும்பு நகரம்

சிறீலங்காவின் தலைநகர்ப் பகுதிகளில் தமிழர்கள் மிகவும் பதட்டத்துடனும், அச்சத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள். தமிழர்கள் தொடர்பாக விரோத உணர்வையும், துவேஷ உணர்வையும் ஊட்டும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. கொழும்பு நகர்ப்புறங்களில் வாழும் தமிழர்கள் திடீர் திடீர் என பொலிசாரினால் எதுவித காரணமுமின்றி கைது செய்யப்பட்டு வருகிறார்கள். போக்குவரத்து வண்டிகளிலும் ,விடுதிகளிலும், பொழுபோக்கு இடங்களிலும், உணவுச் சாலலைகளிலும் பொலிஸாரால் திடீர் திடீரென்று வகை தொகையின்றி கைதுசெய்யப்படுகிறார்கள். சந்திரிகாவை பொலிஸ் மாஅதிபர் சந்தித்ததின் பின்னரே இக் கைது நடவடிக்கைகள் மேலும் அதிகரிகதுள்ளன. கைதுசெய்யப்படுவர்கள் மிகக் கடுமையாக சித்திரவதை செய்யப்படுகிறார்கள். இவ்வாறான கைதுகள், சித்திரவதைகள் தொடர்பாக மனித உரிமைச் செயலணி அறிக்கை விட்டிருந்தபோதும் அது அடுத்த கணத்திலேயே பொலிஸாராலும், இராணுவத்தினராலும் மீறப்பட்டுள்ளது. எப்பொழுது என்ன நடக்கும் என்பதை அறியமுடியாத பகை மூட்டம் கொழும்பு நகர் எங்கும் கவிந்திருக்கக் காணலாம். அங்கு வாழும் தமிழர்கள் அனைவரும் பொலிஸ் நிலையங்களில் தமது பெயர் விபரங்களையும், தொழில் முயற்சிகள் தொடர்பான விடயங்களையும் கட்டாயமாகப் பதிவு செய்திருக்க வேண்டும். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் எந்தவிதமான விசாரணையுமின்றி படுகொலை செய்யப்படுகிறார்கள். அங்கு மீறப்படும் மனித உரிமைகள் குறித்து சந்திரிகா அரசுக்கு எதுவித கவலையும் இல்லை. சந்திரிகா அரசினால் உருவாக்கப்பட்ட குண்டர் படைகள் கொழும்பு தலைநகரில் படையினரின் உதவி ஒத்தாசையுடன் தமிழருக்கெதிரான வன்முறைகளை திரை மறைவுகளில் செய்து முடிக்கின்றனர். தமிழர்களிடம் வழிப்பறிசெய்தல், வீடுபுகுந்து கொள்ளையடித்தல், கொலை மிரட்டல் செய்தல், அவமானப்படுத்தல் சர்வசாதரணமாக சிங்களக் காடையர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இனக்கலவரம் ஒன்று மூழுமாயின் நிச்சயம் மிகப் பெரிய பேரிழப்புக்களை அங்கு வாழும் தமிழர்கள் எதிர்கொள்ள நேரிடும். பலமுறை மூண்ட இனவெறித் தீயால் முன்னர் ஏராளமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதும், பலகோடிக்கணக்கான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டதும் சிங்கள ஆட்சியாளர்களின் துணையுடனேயே நடந்தது என்பதை யாரும் எளிதில் மறந்துவிட மாட்டார்கள்.

அகற்றப்படல் முக்கிய கோரிக்கையாக இருந்தது. அது மாத்திரமல்லாமல், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்தபின்னும், பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட வேண்டுமெனில் பூநகரி முகாம் அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வந்தனர். மேலும், பூநகரி முகாம் தாக்கப்படப் போவதான பொய்த் தோற்றத்தையும் தமது பிரசாரங்கள் மூலம் விடுதலைப்புலிகள் வழங்கி வந்தனர். பூநகரி முகாம் தாக்கப்படுவதற்கு சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டு வருவதாகவும், சவப் பெட்டிகள் கூட களப்பகுதிக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் செய்திகள் பரவின. சிறீலங்கா இராணுவத்தின் பார்வை பூநகரி, கொழும்பு, கிழக்கு மாகாணம் என்றிருக்க விடுதலைப்புலிகள் மண்டைதீவைக் கைப்பற்றுவதற்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தனர். தலைவர் பிரபாகரனின் விசேட மேற்பார்வையிலேயே இத் தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டது. மண்டைதீவுத் தாக்குதல் திட்டம் முழுமையாக பிரபாகரனின் திட்டம் என்றே அறியப்படுகின்றது. இத் திட்டம் தீட்டப்படுவதற்கு, சகல உளவுத் தகவல்களும், மிக நுணுக்கமான அம்சங்கள் கூட தலைவர் பிரபாகரனால் பெறப்பட்டு, அலசி ஆராயப்பட்டு, மீண்டும் மீண்டும் உரசிச் சோதனை பார்க்கப்பட்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நிச்சயம். எனவே தான் சிறீலங்கா இராணுவ ஆய்வாளர்கள், இத் திட்டம் மிக நுணுக்கமாக வரையப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஒன்று என்று பின்னர் தெரிவித்தனர். "இரகசியம்" மிகவும் அவசியம் என்பதால், இத்திட்டம் குறித்து வெளியில் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. இவ் ரகசியம் பேணலும், எதிர்பாராத தாக்குதலுமே மண்டைதீவின் வெற்றிக்கு கணிசமான பங்களித்தன என்று துணிந்து கூறலாம். தாக்குதல் திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்ற விபரங்களை விடுதலைப்புலிகள் தரவில்லை. ஆயினும், ஒரு சில தளச்செய்திகளை வைத்து எவ்வாறு நடந்திருக்கும் என்று ஓரளவு ஊகிக்கலாம்.

18-ம் திகதி அதிகாலை, மண்டைதீவுக் கரைகளில் விடுதலைப்புலிப் போராளிகள் இறக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கான போராளிகள் கடற் புலிகளின் போர்ப்படகுகளில் மண்டைதீவுக் கரையில், இரகசியமாக, நான்கு முனைகளில் தரை இறங்கியுள்ளதாகக் கருதலாம். கடற்புலித் தளபதி சூசையின் தலைமையிலும், தரைப்படைத் தளபதிகளில் ஒருவரான சொர்ணத்தின் தலைமையிலும் தரை இறங்கிய விடுதலைப்புலிகள், காவல் அரண்களிலும், அவதான நிலைகளிலும் காவலில் இருந்த இராணுவத்தினரை இரகசியமாகவே முடித்திருக்க வேண்டும். பின்னர், நான்கு முனைகளாலும் பிரதான முகாமையும், ஆயுதத் தளபாடக் களஞ்சியத்தையும் நோக்கி இரகசியமாகவே நகர்ந்திருக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து பெரும் சண்டை. பிரதான முகாமும், ஏனைய மினி முகாங்களும் அங்கிருந்த 60 முன்னணிக் காவல் அரண்களும் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. முகாமுக்குப் பொறுப்பான லெப்டினன்ட் கேணல் சுகயீன விடுமுறையெடுத்து கொழும்பிலேயே நீண்ட காலம் தங்கியிருந்ததாகவும், கப்டன் ஒருவரே முகாமுக்குப் பொறுப்பாக இருந்தார் என்றும் அரசாங்க தரப்பு கூறுகிறது. அக் கப்டனும் கொல்லப்பட்டார். ஆயுதக் களஞ்சியம் சூறையாடப்பட்டது. 6 கோடி ரூபா பெறுமதியான ஆயுதத் தளபாடங்களை இழந்ததாக அரசு தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகள், மோட்டார்கள், RPG-கள் இயந்திரத்துப்பாக்கிகள், 300-க்கு மேற்பட்ட தானியங்கித் துப்பாக்கிகள், வெடி பொருட்கள் என்ற ரீதியில் பெருவாரியான ஆயு

www.tamileelamarchive.com

இதுவரை 300-க்கும் மேற்பட்ட சடலங்கள் கொழும்புக்கு அண்மையில், பொல்கொட வாவியிலும், கடற்கரைகளிலும், குருநாகல் வயல்வெளிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்களில் பலர் நீருள் அமிழ்த்தப்பட்டும், பட்டினி போடப்பட்டும், கழுத்து நெரிக்கப்பட்டும், கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது அடையாளங்கள் தெரியாதவாறு முகங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. ஒருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை. இவை ஆயுதப்படையினர் மீது சந்தேகம் ஏற்படாதவாறு திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆயினும் பலர், ஓரிடத்தில் கடத்தப்பட்டு வேறோர் இடத்தில் கொல்லப்பட்டு வீசப்பட்டுள்ளனர். இவ்வளவு, பாதுகாப்பு, சோதனைகள் நிறைந்த கொழும்புப் பகுதியில், அரச ஆயுதப்படைகள் தவிர்ந்த வேறு எவர் ஆட்களைக் கடத்த முடியும் என்பதே பெரும் சந்தேகத்தை எழுப்பி உள்ளது. தமிழில் பச்சை குத்திய அடையாளங்கள், அரைஞாண் கயிறு ஆகியவற்றைக் கொண்டு பல சடலங்கள் தமிழர்களுடையவை என்றே அடையாளம் காணப்பட்டுள்ளன. கொழும்பில் வீடியோக் கடையில் வேலைபார்த்துக் காணாமல் போய் சடலமாய் மீட்கப்பட்ட நிரேஸ் ராஜதுரை கடைசியாக இராணுவ வாகனமொன்றில் காணப்பட்டார் என்பது நிச்சயிக்கப்பட்டுள்ளது.

உலகில் மனித நேயம் மிக்கவராகவும், மனித உரிமைகள் மீறப்படுவதை கிஞ்சித்தும் சகித்துக் கொள்ளாதவராகவும் சந்திரிகா உலகை ஏமாற்ற முயன்றார். ஆட்சிக்கு வந்த சில நாளிலயே சிங்களப் பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிக்க "மனித உரிமைகள் செயலணி" எனும் அமைப்பினை ஆரம்பித்த சந்திரிகா, தமிழீழப் பகுதிகளில் நடந்த இராணுவ வன்முறைகள், தீவைப்புக்கள், படுகொலைகள், காணமற்போனோர் பற்றியோர் நிலைமைகள் குறித்து எதுவிதமான அக்கறையும் காட்டாதிருந்தமை மூலமே அவரை இனவாதப் போக்காளாராக கண்டிருக்க வேண்டும். உலகிற்கு பல் இனங்களைக் கொண்ட ஒரு தேசத்தின் தலைவியாகக் காட்ட முனையும் சந்திரிகா தமிழர்களை அழித்தொழித்து சிங்கள மக்கள் மட்டும் வாழும் ஒரு இலங்கைத் தீவையே தன் கனவாகக் கொண்டிருக்கிறார்.

தென்னிலங்கையில் ஜே. வி. பி. கிளர்ச்சியாளர்கள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியிருப்பதும் இராணுவத்தில் இருந்து தப்பியோடித் தலைமறைவாய் உள்ள இராணுவத்தினராலும் சிங்களக் காடையர் கூட்டத்தினாலும் இன்னோரன்ன பல்வேறு அரசியல் காரணிகளாலும் கொழும்பு நகரம் வெடிகுண்டுத் தன்மையில் இருக்கிறது.

தங்களைக் கைப்பற்றினர். இராணுவத்தினரும் 4 அதிகாரிகளும் முகாமில் வேலை செய்த சிவிலியன்களுமாக 100-க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 8 பேர் களத்தில் வீரமரணமடைந்தனர். பின்னர் காயமடைந்த போராளி ஒருவர் வீரமரணமடைய புலிகள் தரப்பு இழப்பு 9-ஆக உயர்ந்தது. இவர்களில், ஒரு லெப்டினன்ட் கேணலும், 1 மேஜரும் அடங்குகின்றனர்.

அதிகாலை தொடங்கிய சண்டை 2 மணித்தியாலங்களில் முடிவடைந்து விட்டது. ஆயினும் மத்தியானம் வரை விடுதலைப்புலிகள் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட மண்டைதீவுத் தளத்தை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தனர். சண்டை நடைபெற்ற போதோ, அதன் பின்னருமோ காரைநகர் தளத்தில் இருந்து கடற்படைக் கப்பல்கள் உதவிக்கு வரவில்லை. பலாலியிலிருந்து ஆகாய விமானங்கள் எதுவும் இராணுவத்தினருக்குப் பாதுகாப்பளிக்க வரவில்லை. விமானப்படை விமானங்கள் வரும் என்ற எதிர்பார்ப்பில், விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணியினர் தயாராக நின்றிருந்தனர். அதே போல் கடற்புலிகளின் போர்ப் படகுகளும், மண்டைதீவுக் கடலைச் சுற்றி ரோந்து சென்றதோடு மண்டைதீவில் சண்டையிட்ட போராளிகளுக்கு உதவியாகக் கடலில் இருந்து இராணுவ நிலைகளை நோக்கிச் சண்டையின் போது தாக்குதலிலும் ஈடுபட்டனர். ஊர்காவற்துறையில் இருந்து தான், இராணுவ உதவிப் படையணிகள் கவச வாகனங்களில் வந்தன. இவர்களின் வருகையை எதிர்பார்த்து விடுதலைப் புலிகளின் அணி காத்திருந்தது. கவச வாகனம் ஒன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறுண்டதுடன், இராணுவ உதவிப்படையணிகள் பின்வாங்கி விட்டன.

கைப்பற்றிய ஆயுதங்களை எல்லாம் படகுகளில் ஏற்றி யாழ் கொண்டு வந்தனர். ஆயுதங்களை படகுகளில் இருந்து இறக்குவதிலும், வாகனங்களில் ஏற்றுவதிலும் பொதுமக்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர், பெரியவர் என்ற வேறுபாடில்லாமல் கடலில் இறங்கி குதூகலத்துடன் உதவி செய்துள்ளனர். படகுகளில் கொண்டுவரப்பட முடியாத கனரக வாகனங்களும், பீரங்கிகளும் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

இவ்வளவு பெரியதொரு முகாம், மிகக் குறைந்த போராளிகளின் இழப்புக்களுடன் கைப்பற்றப்பட்டது உலக சாதனை என்றே கூறலாம். தற்கால கெரில்லாப் போராட்ட வரலாறுகளில் இப்படி ஒரு துணிகரச் செயல் நடத்தப்பட்டதற்கான சான்றுகள் இல்லை. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளில் இத்தாக்குதல் கடற்புலிகளின் முக்கியத்துவத்தை பறைசாற்றுவதாக அமைந்தது. கடல் வழி மார்க்கமான சிறீலங்காவின் விநியோகங்களைத் தடுப்பதே கடற்புலிகளின் பிரதான செயல்பாடாகக் கருதப்பட்டு வந்தது. கடல் வழி மூலமான இத் தாக்குதல் தீவுப்பகுதியிலுள்ள ஏனைய தளங்கள், தீவின் கரையோரங்களில் மேற்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மட்டு மல்ல கொழும்புத்துறைமுகம் கூடத் தாக்கப்படக் கூடிய சாத்தியக் கூற்றை சூசகமாக வெளிப்படுத்தி நின்றது.

தரைப்படையினரின், கடல் வழிச் சென்று தரையிறங்கிச் சண்டையிடுதலை AMPHIBIOUS தாக்குதல் என்று கூறுவர். மண்டைதீவுத் தாக்குதலிலும், தரைவழியைப் பயன்படுத்தாது, கடல் வழியாகப் படகுகளில் சென்று சண்டையிட்டு விட்டு கடல் வழியாகவே, கைப்பற்றிய ஆயுதங்களுடன் தமது பிரதான தளம் மீண்டுள்ளனர். இந்த இராணுவ முக்கியத்துவத்தின் அடிப்படையில், மண்டைதீவுத் தாக்குதல் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதிய பரிமாணத்தைச் சுட்டி நிற்கிறது. ★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# தமிழீழத்தில் எழுச்சி

# கரும்புலிகள் நாள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான அனைத்துச் சக்திகளுக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வெற்றிகரமான தாக்குதல்களை நடாத்தி வீரகாவியமான கரும்புலிகளின் நாளான யூலை 5, எழுச்சிகரமாக தமிழீழத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

குடா நாடெங்கும் நிறுவனங்கள், அலுவலகங்கள், வியாபார ஸ்தலங்கள், போராளிகளின் பாசறைகள் என்பன சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வீடுகளெங்கும், முன்றெல்களில் கரும்புலி வீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர்மாலை சூட்டப்பட்டிருந்தன. கரும்புலிகளின் வீரம்பேசும் பாடல்களும் யாழ். நகரெங்கும் ஒலித்துக்கொண்டிருந்தன.

மாபெரும் எழுச்சிப் பேரணி நெல்லியடி பிரதான சந்தியிலிருந்து புறப்பட்டு கரும்புலிகள் நினைவாலயம் நோக்கிச் சென்றது. பாண்ட் வாத்தியங்கள் முழங்க, வடமராட்சி, தென்மராட்சி, தீவக மக்களின் ஊர்திகள், பேரணியின் முன் ஊர்ந்து சென்றன.

நினைவாலயத்தை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை திறந்து வைத்தார்.

கரும்புலி மில்லரின் உருவச் சிலையை திரு. தமிழ்ச்செல்லவன் திரைநீக்கி வைத்தார்.

நினைவாலயத்தில் கரும்புலிகள் 43 பேரினது உருப்படங்களிற்கும், பெற்றோர், விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் மாலை அணிவித்தனர்.

தரையிலும் கடலிலும் மக்களின் நிரந்தர விடுதலைக்கும், சந்தோஷமான நல் வாழ்வுக்கும் தம் இன்னுயிரை ஈந்த கரும்புலி வீரரை மக்கள் மலர் கொண்டு அஞ்சலித்தனர்.

கரும்புலிகள் நினைவாலய முன்றலில் இருந்து புகைக்குண்டுகள் வானில் விடப்பட்டன. அட்டதிக்கும் அதிர்வுற நிறைந்து தியாகத் தீயாய் ஒளிர்ந்து மேகப் படலங்களுள் கலந்து நிறையும் கரும்புலி வீரர்களின் இறுதிக் கணங்களை மக்கள் நினைத்தனர்.

மில்லர் அரங்கிலே இத் தியாக சீலர்களின் வாழ்வு பற்றிய பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

வடமராட்சியில் சிறீலங்கா அரசாங்கத்தின் ஒப்பரேசன் லிபரேசன் தாக்குதல் நடவடிக்கையின் போது மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களுக்கெல்லாம் பதிலடியாக, தகர்ந்து போன தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு மீண்டும் தெம்பு கொடுப்பதாக நெல்லியடி மகாவித்தியாலயத்தில் குடிபுகுந்திருந்த ஆக்கிரமிப்பாளர்களை, வெடி மருந்து ஏற்றிய வாகனத்தில் சென்று தகர்த்தெறிந்தான் கரும்புலி மில்லர்.

நெருக்கடியான போர்ச்சூழ்நிலைகளில் எதிரியை திணறடித்து வெற்றிக்கு வழி வகுத்தவர்கள் கரும்புலி வீரர்கள்.

வடமராட்சி மண்ணில் மண்ணின் மீதான ஆக்கிரமிப்பு இராணுவத்தை உயிராயுதத்தால் வெற்றி கொண்ட முதல் கரும்புலி வீரன் ஆயிரம் விதைகளாய்ப் பரவி விழுந்த இடத்திலேயே கரும்புலி வீரர்களது கதை பேசும் நினைவாலயம் அமைந்திருக்கிறது.

கரும்புலி வீரர்களின் நினைவை சதா கிளர்த்துவதாகவும், அவர்களின் நினைவை எழுப்புவதாகவும், அவர்களின் கதை பேசிக்கொண்டிருப்பதாகவும் இது என்றுமிருக்கும்.

★★

www.tamileelamarchive.com

# தமிழ் மாணவர் எழுச்சிநாள்

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் வட தமிழீழ மெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இத்தினத்தை முன்னிட்டு பேரணிகள், பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், கல்விமான்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டார்கள்.

"நாடும் மொழியும் நம்மின எழுச்சியும் கூடுக உங்களின் கூட்டு முயற்சியால்" எனப் பல கோஷங்களை ஒலித்தார்கள்.

மாணவர்களின் கல்வி மற்றும் போராட்ட நிகழ்வுகளை சித்தரிக்கும் பதாதைகளும் எடுத்துவரப்பட்டன.

தமிழீழத் தேசியத்தலைவரின் முழு அளவிலான உருவப்படத்தினைத் தாங்கிய ஊர்தி பேரணியின் முன் வந்து கொண்டிருக்க பேரணி எழுச்சிகரமாக நகர்ந்து கொண்டிருந்தது. இந்த மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள், தமிழீழ மண் எந்த அடக்குமுறைகளுக்கும் அராஜகங்களுக்கும் பணிந்து போகாது என்பதை வெளிப்படுத்துவதாய் இருந்தன.

இன ஒடுக்குமுறையின் கொடூர முகத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலையை தமிழ் மாணவர் சமூகமானது பல தசாப்தங்களாகவே அனுபவித்து வருகிறது.

சந்திரிகா முன்னைய சிங்களத் தலைமைகளின் அடித்தடம் சற்றும் மாறாது நடக்கின்ற பேரினவாதி. இந்தப் பேரின வாதிகள் எமது சமூகத்தின் சகல உயிர்த்தளங்கள் மீதும் ஆறாத கொடும் துயரவடுக்களை ஏற்படுத்தினர்.




இந்த இறுக்கமான போர்ச் சூழல் மாணவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள் சொல்லும் தரத்தன்று.

அடக்குமுறைகளைத் தகர்த்துவிடும் கோபாவேசம் அவ் எழுச்சிப் பேரணிக்குள் ஓங்கி நின்றது. கல்வியும், போராட்டமும் அவர்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்தே கிடப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

# கல்விப் பயிரைக் கருகாது காப்போம்

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது நிறைமொழி. கல்வி வாழ்வின் கண்களாகத் தொழிற்படுவது. மனித வாழ்வை மேம்படுத்துவது. தமிழீழ மண்ணில் கல்வி என்ற அடிப்படை சிங்கள இனவாத அரசால் திட்டமிட்டே பறிக்கப்பட்டு வந்தது; பறிக்கப்பட்டு வருகிறது. சிறீலங்கா அரசால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட போரின் முக்கிய தந்திரோபாயம் தமிழ் மக்களின் கல்விக் கண்களைக் கட்டிப் போடுவதில் குறியாய் இருந்தது. பாடசாலைகள் இராணுவ முகாம்களாயின. எத்தனையோ பாடசாலைகள் குண்டுவீசித் தகர்க்கப்பட்டன. ஆசிரியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். நூலகங்கள் எரியூட்டப்பட்டன. இந்திய ஆக்கிரமிப்புக் காலத்திலும் தமிழீழத்தின் புத்திஜீவிகள், மருத்துவர்கள், கவிஞர்கள் என்போர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆக்கிரமிப்பாளர் அனைவரதும் நோக்கு கல்வியை அழிப்பதாகவே இருந்து வந்திருக்கிறது.

இன்று புதிய சந்திரிகா அரசும் முன்னைய அரசுகள் போலவே இனவாத முகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. எரிபொருள், மின்சாரத் தடை, பொருளாதாரத் தடை இவற்றால் தமிழ் மாணவர்களின் கல்வி பாழடைகிறது.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் கல்வியை எமது தமிழீழச் சந்ததி தங்குதடையயின்றிப் பெற உழைப்பது உணர்வுள்ள அனைத்து தமிழ் மக்களதும் கடமையாகும்.

உறுதியான தமிழீழ மாணவர் சமுதாயத்தின் கல்விப் பயிரை கருகாது காப்பதும் - அதற்கான பெருநிதியத்தை வாரி வழங்குவதும் புலம்பெயர்ந்து வாழும் தமிழராகிய நாம் சுமக்கவேண்டிய வரலாற்றுக் கடமைகளில் ஒன்று.

இந்த உயர்ந்த இலட்சியத்தினை திட்டமிட்டு வழிநடத்தி வரும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிதியத்துக்கான நிதி உதவிகளையும் வேறுபல உதவிகளையும் செய்ய விரும்புபவர்கள் ஒரு வழியும் இல்லையே என ஓய்ந்து போகவேண்டாம். தத்தம் நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் காரியாலயங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி தமிழீழக் கல்வி மேம்பாடடைய அயராது உழையுங்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# படைப்பு நிலையில் பிரச்சனைகளும் விமர்சனமும்

**- சி. சதாசிவன் -**

கலை, இலக்கியம் சார்ந்த தொடர்ந்த அவதானிப்பில் கண்டுணர்ந்த சில விடையங்கள் தொடர்பாக சிறு குறிப்புரையொன்றை எழுதலாமென்ற எண்ணமேற்படுகின்றது. இந்த எண்ணக்கருவை விஸ்தாரமாக்கி இன்னும் சிலவற்றையும் இணைத்து முன்வைக்க வேண்டுமெனத் தூண்டியது அண்மையில் நடந்த கலை, இலக்கியக் கருத்தரங்குதான்.

விடுதலைக்கான தொடுமைய நெருங்கி வருவது மிக ஆழமாக உணரப்படுகின்ற இத்தருணத்தில், எமது தேசத்தினது மக்களினது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட கலை, இலக்கியம் பற்றிய கருத்தரங்கு விடுதலைப்புலிகள், கலைபண்பாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடந்த இக்கருத்தரங்கில் கலை, இலக்கியம் பற்றிப் பல விடயங்கள் பேசப்பட்டன. போராட்ட காலத்தில், மனித வாழ்வில் கலை, இலக்கியங்களின் தேவை, அவற்றின் முக்கியத்துவம், தொழிற்பாடு எனறெல்லாம் கருத்துரைகள் நடந்தேறின.

சிறுகதை, நாவல், ஓவியம், இசை, கவிதை, பாரம்பரியக் கலை வடிவங்கள், அரங்கியல் என்ற விடையங்களில் வாழ்வியலோடு இவை இணைந்துள்ள முறைமை பற்றி அந்தந்தத் துறை சார்ந்தவர்கள் உரையாற்றினார்கள். இந்த உரைகளைக் கேட்டபின்பு சில விடயங்களை நாம் யோசித்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகியது.

இன்றைய தமிழ்ச் சிறுகதைகளில் நமது சிறுகதைகளின் தன்மையும் போக்கும்.

- ★ **போராட்டமும் வாழ்வும் இணைந்த நமது கவிதைகள்.**
- ★ **போராட்டத்துடன் இணைந்து புதிய திசையில் பாச்சலெடுத்துவரும் ஓவியம்.**
- ★ **புதிய பரிமாணங்களையும் கவனிப்பையும் பெற்றுவரும் நமது இசை.**
- ★ **முனைப்பும் திறனும் கொண்டியங்கும் நாடகங்களும் நாடகவியலாளரும்.**
- ★ **போராட்டப் பரிணமிப்புடன் வெளிப்பாடடைய முனையும் நாவல்கள்.**

இந்த விடையங்கள் தனித்தனியாக மிக ஆழமாக ஆராயப்பட வேண்டியவை. இவை ஒவ்வொன்றின் மீதும் நியாயமான விமர்சனங்கள் முன்வைக்கப்படவேண்டும். போராட்டம் முனைப்படைந்து அது பல பரிமாணங்களில் விரிவாக்கம் பெற்றுவருகின்ற யதார்த்தத்துடன் கலை, இலக்கியங்கள் இணைந்து இயங்கும் தன்மை பற்றி அவசியம் நோக்கியே தீரவேண்டியுள்ளது. இவை கலை, இலக்கிய அக்கறையுடன் செயற்படும் ஒவ்வொருவரினதும் சிந்தனைக்கும் பொதுச் செயற்பாட்டுக்கும் உரியவையாகும். எனினும் மேற்சொன்ன ஆறு பிரதான விடையங்களையிட்டு பொதுவான சிலகருத்துக்களை மட்டும் மிகச் சுருக்கமாக இங்கு நோக்கலாம்.

இன்றைய நமது இலக்கியம் என்ற பொதுவான தன்மையின் கீழ் ஈழத்தமிழ் இலக்கியம், புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்ற இரு தளங்களில் இந்தச் செயற்பாடு நிகழ்கிறது. இந்த இரண்டுக்குமிடையில் சில ஒத்ததன்மைகளும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன. எனினும் இன்றைய ஈழத்து இலக்கியம் என்பது போராட்ட வாழ்வுடன் ஒன்றித்ததாகவே இருக்கின்றது. இது தவிர்க்கமுடியாத இயல்பு. போர் ஒன்று நிகழும் போது எல்லா மனிதரும் ஏதாவது

## சுதந்திர ஈழம் உன்னைத் துதித்திடல் மறக்கிலேனே

**- துறையூரான் -**

**கடும் சிறை யதனில் பூட்டி**
**கழுத்தினை நெரித்திட்டாலும்**
**கண்களை இரண்டும் தோண்டி**
**கால்களால் மிதித்திட்டாலும்**
**கைகளும் காலும் கட்டி**
**காட்டினில் புதைத்திட்டாலும்**
**சுதந்திர ஈழம் உன்னைத்**
**துதித்திடல் மறக்கிலேனே.**

**எந்தையர் தேசம் தன்னை**
**எதிரிகள் எரித்திட்டாலும்**
**எறிகணை வந்து எந்தன்**
**இதயத்தில் வீழ்ந்திட்டாலும்**
**சிறந்த நல் வளங்கள் எல்லாம்**
**சிங்களம் அழித்திட்டாலும்**
**சுதந்திர ஈழம் உன்னைத்**
**துதித்திடல் மறக்கிலேனே**

**ஆயிரம் துகள்களாகி**
**அங்கங்கள் அறுந்திட்டாலும்**
**ஆலகால விடத்தை உண்டு**
**ஆவிதான் பிரிந்திட்டாலும்**
**காற்றோடு எந்தன் மூச்சு**
**கந்தகமாய் கலந்திட்டாலும்**
**சுதந்திர ஈழம் உன்னைத்**
**துதித்திடல் மறக்கிலேனே**

**படை பல சூழ்ந்து நின்று**
**தடைபல அமைத்திட்டாலும்**
**தரைவழி பயணம் செய்ய**
**சாவடி தடுத்திட்டாலும்**
**சாலைகள் தெருக்கள் எங்கும்**
**தரைப் படை நகர்ந்திட்டாலும்**
**சுதந்திர ஈழம் உன்னைத்**
**தொழுதிடல் மறக்கிலேனே.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஒரு வகையில் அதன் அழுத்தம், பாதிப்பு என்பவற்றுக்கு உட்பட்டே ஆகவேண்டியிருக்கும். யுத்தத்துக்கு எதிராக முகம் கொடுக்கவும் வேண்டியிருக்கும். இதுவே இன்று நமது வாழ்வு. போரினால் ஏற்படும் பாதிப்புக்கள், நெருக்கடிகள், மற்றும் போராட்ட இலட்சியம், அதற்கான செயற்பாடு எல்லாம் அனுபவத்தின் ஊடாக கலையாகிறது; இலக்கியமாகிறது.

நமது இன்றைய வாழ்க்கையும் எண்ணப்பாடுகளும் எமது இலக்கியத்தின் உள்ளொலிப்பாகவும் முகமாகவும் தெரிவதை பொதுவாகக் காணக்கூடியதாகவுள்ளது. எனினும் பெரும்பாலான படைப்புக்கள் ஆழமற்றனவாகவும் தீவிரத் தன்மை குறைந்தனவாயும், கலை நுட்பம், சூழலின் ஆழ்ந்த கவனிப்பு என்பவற்றில் கவனம் கொள்ளாதிருப்பதுமாகவே வெளியாகின்றன. இவை வாசகர் மனதில் ஒருவித சலிப்புணர்வை ஏற்றிவிடும். இந் நிலைதான் மனக் கஷ்டமாகவும் வேதனையாகவும் இருக்கிறது. இவற்றை நிதானமாக அவதானிக்கும் பொழுது சில உண்மைகளையும் கண்டறிய முடிகிறது. தேடல் முயற்சி, சிருஷ்டி ஆற்றல் விருத்தி, வாசிப்புக் களம் போன்றவற்றில் படைப்பாளிகள் கவனஞ் செலுத்துவது குறைவு என்றே எண்ணமுடிகிறது. ஆனால், எமது மண்ணிலிருந்து படைப்பாகவும் பெறுகின்ற கலை, இலக்கியங்கள் ஒரே குரலில் ஒருமித்த இலட்சிய நோக்கத்தை கொண்டனவாக ஆவேசத்துடன் வெளிப்பாடடைகின்றன. இலக்குகளைப் பொறுத்த வரையில் சிறிதேனும் மயக்கமற்ற நிலையில் அதனை அடைவதற்கான பாதையும் பயணமும் தெளிவாகவே இருக்கின்றது. இதனைப் புலப்படுத்தும் இலக்கியங்கள் வருவது உண்மை. புதியவர்களும் இளையவர்களும் இந்தப் படைப்பாக்கங்களில் கூடிய கவனம் கொண்டு இயங்குகின்றனர். மிக அதிகளவிலானோர் முனைப்புடன் எழுதுகின்றனர். இவற்றை ஈழநாதம், வெளிச்சம், ஆதாரம், கவிதை, தாயகம், மல்லிகை போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளிலும் புலிகளின் குரல் வானொலியிலும் காணமுடியும். இவர்களிடம் போராட்டப் பற்றுணர்வும், மண்ணினதும் மக்களினதும் மீதான அக்கறையும் நிரம்பியுள்ளன. ஆனால் இவை கலையாக்கமாகுவதிலேயே பிரச்சினையாக இருக்கின்றது.

அனுபவம் சார்ந்த படைப்புக்களே தரமான கலை, இலக்கியப் படைப்புக்களாக உருவாகின்றன. இந்த அனுபவம் வாழ்க்கையிலிருந்தும் சூழலிருந்தும் படைப்பாளியால் உள்வாங்கப்படுகிறது. தான் பெற்றுக்கொள்ளும் அனுபவத்தையும், தன்னுள் ஏற்பட்டிருக்கும் உலக நோக்கையும் சிருஷ்டிப்பு ஆற்றலையும் இணைத்தே ஒரு படைப்பாளி நல்ல இலக்கியப் படைப்பை உருவாக்க முடியும். சிருஷ்டிப்பு ஆற்றலில்தான் நம்முடைய படைப்பாளிகள் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. பெரும் அனுபவங்களையும் தன்னுள் இருக்கும் சமுதாயப் பார்வையையும் அவ்வாறு சிருஷ்டிப்பில் கொண்டுவருவது என்பதே ஒரு படைப்பாளி புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விடயம். தன்னுள் இருக்கும் படைப்பு உந்துதலுடன் தரமானவற்றை வாசித்தல், புதிது புதிதான தேடல், புதியனவற்றைப் படைக்கவேண்டும் என்ற அவா; நுட்பமான அவதானிப்பு, படைப்பு மனநிலையை வளர்த்தல் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

இந்த அம்சங்களில் முழுமையான கவனம் கொள்ளும் போது மிகத்தரமான நவீன தமிழ் இலக்கியத்தை நாம் பெற வாய்ப்புண்டு. இந்தச் சாத்தியப்பாடு இன்று நம்மிடமே அதிகளவில் உள்ளது. தமிழ்ச் சூழலில் வேறெங்கும் இன்றில்லாத வாழ்க்கை முறையும் போராட்ட நிகழ்வும் புதியதாக நமக்கே வாய்த்துள்ளது

இங்கே இன்னுமொரு விடையத்தையும் குறிப்பிட்டாக வேண்டுமெனத் தோன்றுகிறது. நமது விமர்சகர்கள் இன்றைய இலக்கியம் தொடர்பாக எத்தகைய முன்வைப்புக்களை, விமர்சனங்களை வெளிப்படுத்தியுள்ளார்கள்? இன்றைய சூழலில் நமது வாழ்நிலை அனுபவங்களை, நமக்கெல்லோருக்கும் புதியனவான போராட்ட யதார்த்தங்களை, தியாக உணர்வுகளை, அர்ப்பணிப்பு உண்மையும் நிறைந்த மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டெழும் இந்தக்கலை, இலக்கியம் பற்றிய விமர்சனப் பார்வை என்ன? இவற்றை எமது விமர்சகர்கள் முன்வைக்க வேண்டும். இன்றைய நிலையில் விமர்சனம் தளர்ந்த நிலையிலும் படைப்பிலக்கியம் முன்னிலையிலும் நிற்கின்றது. படைப்பிலக்கியத்துடன் விமர்சனமும் சரியாக இணையும் போதே வாசகர் முழுமையான தெளிவையும் புதிய திசையையும் காணமுடியும். இலக்கியத்தின் பொது நியதியான படைப்பாளி - விமர்சகர் - வாசகர் என்ற தொடர்புச் சுழற்சியில் விமர்சகனின் பங்கு அவசியமானது. இதைத் தமது இலக்கிய வரலாற்றுக் கடமையாகவும் விமர்சனப் பொறுப்புணர்வுடனும் விமர்சகர்கள் மேற்கொள்ள வேண்டும். இலக்கியம் வாழ்வை, வாழ்வினடியாக எழும் மனித உறவுகளை, இவை நிகழும் காலத்தை தன்னுள் ஏற்று பல பரிமாணங்களுடன் வெளிப்படுத்தும் உயர்ந்த வடிவம் என்பதால் இத்துறை சார்ந்த அனைவரும் இவற்றில் கவனமெடுக்கவேண்டும்.

## கயிறு உற்பத்தி நிலையம் ஆரம்பிப்பு

**தும்புத் தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் விசுவமடு வட்டத்திலுள்ள வள்ளுவர்புரம் கிராமத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கயிறு உற்பத்தி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**தும்பு உற்பத்தியில் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் உற்பத்தி நிலையத்தில் தற்போது நாளொன்றுக்கு நூறு கிலோ கயிறு உற்பத்தி செய்யப் படுகின்றது.**

**இவ் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதினூடாக இருபது பேர் வரை வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புதிய சர்வதேச ஒழுங்கும் தமிழீழமும்

**வே. பாலகுமாரன்**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தருக்கரீதியான படிமுறை வளர்ச்சிக்கு 3-ஆம் கட்ட ஈழப்போரின் பின்னான தற்போதைய நிகழ்ச்சிகள் தக்க சான்றுகளாகின்றன. உள் வீட்டுப் பிரச்சினையாக, பிராந்தியப் பிரச்சினையாக இருந்து தற்போது சர்வதேசப் பரிமாணம் பெற்ற உலகச் சிக்கலில் ஒன்றாக மாறிவிட்டது எமது தேசிய விடுதலைப் போராட்டம். எதிர்காலத்தில் உலகின் போர்கள் குறித்து அமெரிக்கா, இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைப்புகட்கு ஆலோசனை கூறும் பிரபல இஸ்ரேலிய இராணுவ வரலாற்றாளர் ஒருவர் 21-ம் நூற்றாண்டின் போர்களுள் இதனையும் ஒன்றாக கருதுகின்றார். எனவே இம்முறை மோதல்கள் தொடர்கின்ற போது, முன்னெப்போதுமில்லாத வகையில், இது வரைகாலமும் தமிழீழ விடுதலைப்போராட்டம் குறித்து ஒரு சொல்லுத் தன்னும் விளம்பாத உலக நாடுகள் பல விழுந்தடித்துக்கொண்டு அறிக்கைள் வெளியிட்டன. அமைதிப் பேச்சுக்கள் ஏன் முறிந்தன என்பது பற்றி கவனம் செலுத்தாத இவர்களது அறிக்கைகள் புலிகளின் போக்கை மெலிதாகக் கண்டிப்பதாகவும் அதேவேளை பேச்சுக்களைத் தொடருமாறு கோரிக்கையாகவும் அமைந்தன. அமெரிக்கா, ருஷ்யா, ஐ.நா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, யப்பான், அவுஸ்ரேலியா, கனடா என்கிற முன்னணி நாடுகளும் அமைப்புக்களும் மட்டுமன்றி, தெற்காசிய, தென்கிழக்காசிய, கிழக்காசிய நாடுகளும் மோதல்கள் ஆரம்பமானது குறித்து, தாம் அதிர்ச்சியும், துயரமும் அடைந்ததாகக் கூறியதைக் கண்டு தமிழீழ மக்களுக்கோ பெருத்த வியப்பே ஏற்பட்டது. அத்தோடு சார்க் நாடுகளான நேபாளம், மாலைதீவு, பாகிஸ்தான், பங்காளதேசம் போன்றவை அறிக்கைகள் வெளியிட்டபோதும், இந்தியாவும் அதன் எடுபிடியான பூட்டானும் இது வரை ஒன்றுமே நடவாதது போல் மௌனம் காக்கின்றன. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது என்பது ஒரு புறமிருக்க, இந்தியாவின் சவுத் புளொக்கின் (South Bloc)உயர்குடி வெளிவிவகார அமைச்சினர், இக் கட்டத்தில் பேச்சுக்களைத் தொடருமாறு அறிக்கைவிடுவது, தமிழர் தரப்பில் புலிகளையே பேச்சுக்கு அழைப்பதாகி விடுவதால், புலிகட்கான மறைமுக அங்கீகாரமாக அது மாறி விடும் என, தந்திரமாக யோசித்திருப்பர் என்பதில் ஐயமே இல்லை. ஆனால் இந்தியாவின் இத்தகைய நிலைப்பாடு குறித்து இப்போது உலக நாடுகள் பெரிதும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. எதற்கும் பிடிகொடுத்துப் பேசாத நரசிம்மராவின் “தந்திரம்” புரியாத சந்திரிகா அம்மையாரே இரு தடவை ராவைச் சந்தித்த துணிவில், இந்தியாவும் நம் பக்கம், சர்வதேசமும் நம் பக்கம் எனத் தம்மையும் ஏமாற்றி, வழமைபோல சிங்கள மக்களையும் ஏமாற்றி வருகின்றார். எல்லா வகையிலும் கையறு நிலையிலிருக்கும் அம்மையாருக்குக் கிடைத்த ஒரே பிடி சர்வதேச நாடுகளின் அறிக்கை மட்டுமே.




ஆனால் சர்வதேசத்தின் இத்தகைய அறிக்கைகட்குப் பின்னாலுள்ள காரணங்கள் பல சுவையானவை. சில நாடுகள் சிறீலங்காவின் வேண்டுதல் அழுத்தம் காரணமாக அறிக்கைகள் வெளியிட்டாலும், பொதுவில் இந்நாடுகட்கும் சிறீலங்காவிற்கும் இடையிலான பொருண்மியத் தொடர்புகளின் எதிர்காலம் குறித்தான அச்சமும் ஒரு காரணம். அத்தோடு மேற்கு ஐரோப்பிய நாடுகட்கோ, மோதல் தவிர்ப்பு நீடித்திருந்தால் தமது நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும் எம்மவர் சிலரையாவது திருப்பி அனுப்பியிருக்கலாமே என்கிற ஆதங்கம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட, பிரதானமான காரணி, தற்போதைய புதிய உலக ஒழுங்கிலே மோதல்களை முடிந்த வரை தவிர்த்து, இயலுமான வரை இராணுவத் தலையீடுகளைக் குறைத்து, சீரழிந்து செல்லும் தத்தம் நாடுகளின் பொருண்மிய மேம்பாட்டிற்காகச் செயற்படுதலே பிரதான நோக்கமாக இருக்கின்றது. எனவே சிறீலங்கா போன்ற வளர்முக நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு மேற்குலகின் முதலீட்டை வரவேற்கத் தயாராக இருக்கையிலே, மோதல்கள் காரணமாக சிறீலங்காவில் உறுதியற்ற நிலை தோன்றுமானால், அதனைக் கைவிடவே

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இவர்கள் விரும்புவர். இதுவே இன்றைய நடைமுறை. எனவே சிறீலங்காவின் அபாய அறிவிப்புக்களோ முன்னர் போல முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அனுதாபமாக நோக்கப்படுமென எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், சிறீலங்காவைப் போல் அனேக நாடுகள் பல்வேறு காரணங்களுக்காக உதவி கேட்டு இந்நாடுகளின் கதவுகளைத் தட்டிய வண்ணமே இருக்கின்றன. இக் கசப்பான செய்தி, அண்மையில் புலிகளின் பிரதிநிதியை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென்னாசியப் பகுதிக்கான உதவித் துணைச் செயலரான திமோதி கார்ணி (Timothy Carney) சந்தித்துப் பேசுவதை தடுக்க முடியாமற் போன போது சிறீலங்கா உணர்ந்திருக்கும். "அமெரிக்காவின் இரட்டை வேடம்" இதுவென, பிரபல சிங்கள விமர்சகர் இது பற்றி எழுதினார். ஏனெனில் 3-ம் கட்ட மோதல்கள் தொடங்கிய போது, "புலிகள் சர்வதேச ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டு விட்டார்கள்", "நேட்டோ இராணுவக் கூட்டமைப்பு பொஸ்னியாவில் தலையிட்டது போல சார்க்கின் கூட்டமைப்பு இதற்கும் தலையிடும்" என மெத்தப்படித்த ஆய்வாளர்களும் ஆசை காட்டினர். சிலர், இந்தியப்படை தெற்கு நோக்கி நகர்ந்தது என்றும் தமது ஆசைகளைச் செய்தியாக்கினர். இப்போது என்ன நடந்துள்ளது? பணம் அனுப்பாவிட்டால், எவரும் பெரிதாக உதவ முன் வரமாட்டார்கள் என்பது தெரிந்து விட்டது. சில இராணுவக் கருவிகளை அமெரிக்கா, இந்தியா கொடுக்க முன் வரக் கூடும். தளநிலை புரியாத, புலிகளை அறியாத, பயனற்ற ஆலோசனை கூறும் இராணுவ ஆலோசகர்களை அனுப்பக்கூடும். எப்போதுமே பிறர் ஆலோசனைகளிலும், உதவிகளிலுமே தங்கியிருத்தல் எவ்வளவு ஆபத்தானது என்பதை இவ்வளவு காலமாக அம்மையார் புரியாதிருப்பது அவரின் துரதிஸ்டமே.

எல்லாவற்றையும் விட, சிங்கள ஆளும்வர்க்கத்திற்கும் முதலாளியப் பேரினவாத ஊதுகுழல்களான சிங்கள, ஆங்கிலச் செய்தியேடுகளுக்குமுள்ள பிரதான கவலை என்னவென்றால், இந்தியாவும் முழுமையாக உதவ முன்வரவில்லையே என்பது தான். இந்தியாவைப் பொறுத்தவரையில், அது சிறீலங்காவிற்கு உதவி செய்ய விரும்பினால் கூட, பெருமளவில் அவ்வாறு செய்ய முடியாத நிலை இன்று தோன்றிவிட்டது. தென்முனையில் புலிகளினால் தனக்குச் "சீர்குலைவு" ஏற்படும் என இந்தியா கருதுவதால், அதைச் சாதகமாக்கலாம் என அம்மையார் எண்ணியிருக்கக்கூடும். ஆனால் இந்தியாவின் கேந்திர மையங்களான வடகிழக்கு, வடமேற்கு முனைகளில் நிலைமைகள் கட்டுக்கடங்காமல் போவதும், குறிப்பாக காஷ்மீரில் 5 வருடங்களாக 5 லட்சம் துருப்புக்கள் இரவு பகலாக ஓயாது செயற்பட வேண்டியிருப்பதும், வடகிழக்கு மாநிலங்களில் முனைப்புப் பெறும் தேசிய விடுதலைப் போராட்டங்களின் உக்கிரத்தை இந்தியாவால் தணிவிக்க முடியாதிருப்பதும் இன்றைய வரலாறு. அதிலும் குறிப்பாக, அடுத்த வருடம் பொதுத் தேர்தலை அச்சத்தோடு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கும் நரசிம்மராவ், காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தி அங்கு தேர்தலை நடத்தியவன் தான் எனக் கூறுவதன் மூலமே, தனது எதிர்காலத்தை உறுதிப்படுத்தும், மக்களைத் திசைதிருப்பும் உத்தியைக் கையாளமுடிவு செய்துவிட்டார். முன்னெப்போதுமில்லாமல், அண்மைக்கால சராரே புனிதத் தல அழிவிற்குப் பின்னர், பாகிஸ்த்தானுக்கு நேரடிப் போர் எச்சரிக்கை இந்தியத் தரப்பில் இருந்து விடுக்கப்பட்டுள்ளது. உள்துறை இணையமைச்சர் ராஜேஸ் பைலட், நிலைமை இப்படியே நீடிக்குமானால் பாக் வசமுள்ள அசாத் காஸ்மீர்ப் பகுதியைத் தாம் கைப்பற்றவேண்டி வரும் என்றும் மிகக் கடுமையாக, தேர்தல் வருவதை முன்வைத்துப் பேசத்தொடங்கிவிட்டார். எனவே போலியான தேர்தல் ஒன்றை யூலையில் காஸ்மீரில் அரங்கேற்ற, முழு அளவில் முயல்வதே இந்தியாவின் ஒரே இலக்கு. ராவின் கவனம் எங்கே இருக்கிறது என்பது தெளிவு. சந்திரிக்கா அம்மையாருக்கு மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளை இந்தியா செய்யும். ஆனால் தனது முன்

**தேவர் கையிலாசபிள்ளை**
**கனடா**

**ஆனி மாத எரிமலையில் வெளிவந்த போராளியின் பேனாவில் இருந்து 'காரணம் கூறிவிடு' எனும் கவிதைக்கு பதில் அளிப்பது போல் இக் கவிதையை அமைத்துள்ளேன்.**

**நல்லது**
**நீண்ட காலமாக**
**நான் உங்களிடத்தில்**
**எதிர்பார்த்த கேள்வியிது**
**நில் அலையே**
**நீட்டுயர்ந்து ஆர்ப்பரிப்பதன்**
**காரணம் கூறிவிடு?.. என**
**நீங்கள் கேட்கும் நியாயமான கேள்வியிது**
**உங்களின் உழைப்பிற்காய்**
**உவராகி உண்மையாய்**
**நானிருப்பதை நீங்கள் அறிவீரோ?**
**அன்றெரு காலம் உம் முற்குலத்தோர்**
**புலிக்கொடியேந்தி, போர் பல புரிந்து**
**வீரர்களாய் என்மடியில்**
**விறைப்பாக வலம் வந்த காலத்திலேயே**
**நானும் வீரம் கொண்டு**
**நீட்டுயர்ந்து ஆர்ப்பரித்ததை**
**நீங்கள் அறியமாட்டீர்**
**இடையிலே உம்மவர் அடிமையாகி**
**இரவல் பேய்களுக்கு முன் கோழையாகி**
**கொத்தடிமையாய் வாழ்ந்ததினால்**
**கோபம் கொண்டு நீட்டுயர்ந்து**
**ஆர்ப்பரிக்கலானேன்**

**தொடர் கதை போல்**
**தொடர்ந்து வந்த**
**அன்னியன் முன் உம்மவர்**
**கை கட்டி தொழுது தொண்டு செய்து**
**தோப்புக்கரணம் போட்டு வாழ்ந்ததினால்**
**நான் உம்மவர் மேல் மேன் மேலும்**
**ஆத்திரம் கொண்டு நீட்டுயர்ந்து**
**ஆர்ப்பரிக்கலானேன்**

**மீண்டும்**
**அறிவு வந்தது ஆண்ட பரம்பரைக்கு**
**ஆளுமை மிக்க தலைவனின்**
**வழிநடத்தலில்**
**அன்னியனை விரட்ட ஆயுதம் ஏந்தி**
**அணிதிரண்டதையெண்ணி**
**ஆர்ப்பரிக்கலானேன்.**
**மறப்புலியாய், கரும்புலியாய்,**
**கடல் புறாவாய்**
**நீங்கள் என் மேல் களமாடுவதை எண்ணி**
**மீண்டும் வீரங் கொண்டு ஆனந்தத்தால்**
**நீட்டுயர்ந்து ஆர்ப்பரிக்கலானேன்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காந்தரூபன் அறிவுச்சோலை

காந்தரூபன் அறிவுச்சோலை 1-11-93 அன்று எமது தேசியத் தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 50 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட காந்தரூபன் அறிவுச்சோலையில் இன்று 150 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். 20 பிள்ளைகளுக்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 10 பிள்ளைகளுக்கு ஒரு தாய் வீதம் பராமரிக்க உள்ளனர்.

தாய்ப்பாச உணர்வுகளுடன் கூடி சந்தோசத்துடன் அவர்கள் வளர்ந்து வருகிறார்கள். அவர்களின் மன அமைதிக்கும், தீர்க்கமான சிந்தனைக்கும் வழிகோலும் வண்ணமாக தினமும் காலையில் யோகாசனப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

பாடசாலையில் பாடங்கள் யாவும் பாடவிதானத்திற்கு அமையவே கற்பிக்கப்படுகின்றன. பிள்ளைகளின் பல்துறை சார் அறிவை வளர்க்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு அதில் சகலரும் அவரவர் தரத்திற்கு ஏற்ப கல்வி அறிவைத் தாங்களாகப் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இதைவிட பிள்ளைகளின் எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்கத்துடன் 'இளங்கதிர்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையை ஆரம்பித்து, அதனை மாதம் தோறும் வெளியிட்டு வருகிறார்கள். இது முழுக்க முழுக்க பிள்ளைகளின் ஆக்கங்களான சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், நகைச்சுவை, கண்டுபிடியுங்கள், அறிந்துகொள்ளுங்கள் என்ற பல ஆக்கங்களைத் தாங்கி வருகிறது.

மாலை நேரங்களில் கராத்தே போன்ற தற்காப்பு சண்டைப் பயிற்சிகளையும், வாத்திய அணிநடைப் பயிற்சிகளையும் ஆர்வத்துடன் கற்று வருகிறார்கள்.

வாத்திய இசைக்கருவிகளை இசைக்கவும் கற்று வருகிறார்கள். வயலின், கிற்றார், றம்பற், மெலோடிக்கா, எக்கோடியன், ஓகன், கிளாறினற், புல்லாங்குழல், தவில், நாதஸ்வரம் போன்ற வாத்திய இசைக் கருவிகளை இசைக்கவும் கற்று வருகிறார்கள். காந்தரூபன் அறிவுச்சோலையின் விளையாட்டுப் போட்டியின் போதும், பின் மாவீரர்நாள் தின நிகழ்வன்றும் இவர்களது இசை அணிநடை நடைபெற்று மக்கள் பலரது பாராட்டைப் பெற்றது.

இவர்களது கராத்தே தற்காப்பு சண்டைப் பயிற்சி காட்சி நிகழ்வுகளாக யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

ஒவ்வொரு விடுமுறைக் காலங்களிலும் சுற்றுலாவை மேற்கொண்டு புவிசார் அறிவியலையும், அறிவுசார்ந்த பல்வேறு விடயங்களையும் கற்று வருகிறார்கள். சாரணர் அணியும் உருவாக்கப்பட்டு பல்வேறு சேவைகளிலும் ஈடுபட்டுவருகிறார்கள். மேலும் பல பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை மேற்கொள்வதில் தயாரக உள்ளனர். தற்போது இவர்களுக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், பொது அறிவு போன்ற அடிப்படைக் கல்வியும் புகட்டப்பட்டு வருகிறது. அத்தோடு அவர்களுக்கு வீடியோ தொழில்நுட்பம், ஸ்ரில் கமரா, என்பனவும் லேத் (Learth) மற்றும் இரும்பு வேலைகள் பழகுவதற்கான பயிற்சி வகுப்புக்களும் தொடங்க உள்ளன.

---

உரிமைப்பட்டியலில் இப்போதைக்கு மட்டுமல்ல, இனி எப்போதுமே முதலிடம் வழங்கும் நிலை இந்தியாவிற்கு ஏற்படாது என்பது திண்ணம். ஏனென்றால், இந்திய மத்திய அரசு என்பது மெல்ல மெல்ல தனது பலத்தை இழக்கும் இலையுதிர்காலத்தை இனி வரலாற்றில் எதிர்நோக்கும் அதே வேளை, அங்கு தலையெடுக்கும் விடுதலைப் போராட்டங்கள் மேலான நிலையிலே வீறுகொண்டு எழும். தமிழீழத் தேசியப் போராட்டம் முன்னோக்கிச் சென்றுவிடும். இது சமகால அரசியல் நிகழ்வு. வரலாற்றில் உன்னதமான வாய்ப்பு.

எனவே தமிழீழ மக்கள் முன்னர் போல சர்வதேச ஆதரவு, இந்திய எதிர்ப்பு என்கிற பூச்சாண்டிகட்கோ, வரலாற்று மாயைகட்கோ இடங்கொடுக்கவோ இவைபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளும் நிலையிலோ இன்று இல்லை. ஏனெனில் இத்தனை வருடகாலப் போராட்டம் தந்த படிப்பினைகள் அவர்களைப் பழுக்கக் காய்ச்சி, புடம் போட்ட பொன்னாக மாற்றிவிட்டது. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்பதை நிரூபிக்கும் எம் மக்கள், இன்று சர்வதேசத்தை நோக்கி ஒரேயொரு கேள்வியைத்தான் கேட்க விரும்புகின்றார்கள்.

புலிகளை மீண்டும் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடச் செய்கின்றவர்களே! உரிமைகளைக் கேட்டு, பேசிப் பார்த்துப் பெறமுடியாத போது, இரந்து வாழ விரும்பாது போராடுகின்றவர்களைக் கண்டிக்கிறவர்களே நீங்கள்.

இது வரை காலமும் பேச்சுக்கள் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பியோர்க்கு என்ன பெரிதாகச் செய்தீர்கள்? 1976-ம் ஆண்டு அப்பட்டமான ஆக்கிரமிப்புச் செய்து, பல இலட்சம் திமோரிய மக்களைக் கொன்ற இந்தோனேசியாவுக்கு எதிராகக் குற்றுயிரும் குலை உயிருமாகப் போராடி, அமைதிவழியில் பேச்சுகட்கு இணங்கி ஆண்டுகள் பலவாகியும், கிழக்கு திமோர் மக்களுக்கு அவர்கள் வேண்டிய அமைதியைப் பெற்றுக் கொடுத்தீர்களா? அப்பட்டமான ஆக்கிரமிப்பென, உங்களது அமைப்பான ஐ. நா. வே தீர்மானம் நிறைவேற்றி, தானே மூன்றாம் தரப்பாகப் பேச்சுக்களை நடத்தியும் என்ன பயன் விளைந்தது? இவற்றிற்கு இணங்காத இந்தோனேசியாவை என்ன செய்தீர்கள்? அல்லது ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலையில், உங்களது பேச்சுக்களை நம்பிப் பேச்சுவார்த்தைக்கு வந்த யாசிர் அரபாத்தை ஏன் காப்பாற்ற மறந்தீர்? பேச்சுக்கள் நடக்கும் போதே, பாலஸ்தீனிய மண்ணைத் தோலிருக்கச் சுளை விழுங்கியது போல யூதர் அபகரிப்பதை ஏன் தடுக்கவில்லை? இவர்கள் எல்லாம் உங்கள் பக்கம் நிற்பதால் அவர்களுக்கு ஒரு நீதியா? வல்லான் வகுத்ததே வாய்க்காலா? இது தான் எம் மக்கள் எழுப்பும் கேள்வி.

ஏனென்றால், புதிய உலக ஒழுங்கில் இத்தகைய முற்றும் சுயநலமான போக்கினை மறுத்து புதிய விதியை, வரலாற்றைப் படைக்கும் திறன் விடுதலைப் புலிகட்கு உண்டென்பதை எம் மக்கள் நன்குணர்ந்தவர்கள்.

**நன்றி: வானோசை**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# மைக்றோலைற் - கிளைடர் இலகு ரக விமானங்கள்

உலகில் உள்ள பெரும் பணக்காரரில் பலர் சொந்தமாகச் சிறிய விமானங்களை வைத்திருப்பது இன்று சர்வசாதாரணம். இவ்வகை சிறிய ரக விமானங்களை அவர்கள் தமது குறுகிய தூரப் பயணங்களுக்குப் பயன்படுத்துகின்றனர். இவ் வகை விமானங்களில் 'மைக்றோலைற்', 'கிளைடர்' என்பன குறிப்பிடத் தக்கன. கிளைடர் ரக விமானங்கள் பொதுவாக சாகச விளையாட்டுகளுக்கே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிலே 'தொங்கிச் செல்லும் கிளைடர்கள்' பிரபல்யமானவை. இவ்வகை கிளைடர்கள் ஜெர்மனியைச் சேர்ந்த ஒட்டோ லிசியன்தால் என்பவரால் 1895-ம் ஆண்டில் வெற்றிகரமாக செயற்படுத்திக் காட்டப்பட்டது. அவர் அப்போது 825 அடி தூரம் பறந்து காட்டினார்.

பின்னர் அவர் 1896-ம் ஆண்டில் ஒரு பறப்பின்போது விபத்துக்கு உள்ளாகிப் பலியானார். ஆனால் தற்போது பாதுகாப்பான நீண்டதூரம் பறக்கக்கூடிய நவீன ரக 'கிளைடர்' விமானங்கள் பாவனையில் உள்ளன. இவற்றில் சில சிறுபாகங்களாக கழற்றி எடுத்துச் செல்லக் கூடியவை.

'மைக்றோ லைற்' எனப்படும் சிறியரக இலகு விமானங்கள் மிகவும் பாரம் குறைந்தவை. இரு இருக்கைகளைக் கொண்ட சில ரக மைக்ரோ லைற் விமானங்களின் நிறை 300 கிலோகிராம்தான். இவற்றின் உதிரிப்பாகங்கள் அலுமினியக் கலப்பு உலோகத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

மிகக் குறுகிய தூரம் ஓடி மேலெழக் கூடியவை. இந்தியாவிலுள்ள 'பினாகி டெக்னோஜிஸ்ட்' எனும் நிறுவனம் தயாரிக்கும் இவ் வகை விமானங்கள் 50 மீற்றர் தூரம் ஓடி மேலெழக்கூடியவை. சில 100, 150 மீற்றர் தூரம் ஓடி மேலெழுவன. இத்தாலிய தயாரிப்பான 'வயேட்டர்' எனும் சிறிய ரக விமானம் 11 இருக்கைகளைக் கொண்டது. இதன் நிறை 900 கிலோகிராம். ஆனால் 4217 கிலோகிராம் பாரத்தை ஏற்றிக் கொண்டு பறக்கக் கூடியது. மணிக்கு 407 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக் கூடிய இவ் விமானத்தின் விலை எட்டுக்கோடியே அறுபது லட்சம் ரூபா. மைக்றோ லைற் விமானங்கள் சில, ஆறுமணி நேரம் பறக்கக் கூடியவை.

இவ்வகை விமானங்களை சிலர் தனிப்பட்ட பாவனைக்கு வைத்திருக்கும் அதேவேளை கடலோரப் பாதுகாப்பு, விவசாயம், சுற்றுப்புறச் சூழல் ஆராய்ச்சி, விளையாட்டு, இராணுவம் போன்ற துறைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. தனியார் தபால் சேவை நிறுவனங்கள் சில சிறிய ரக விமானங்களைப் பயன்படுத்தி வருகின்றன.

இவ் வகையான விமானங்களை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மண்டையைப் பிய்த்துக் கொள்கின்றன.

# கத்தாளையிலிருந்து கயிறு திரிப்பு

கத்தாளை இலையில் இருந்து கயிறு தயாரிக்கும் முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன. கத்தாளை வரண்ட பிரதேசங்களிலும் வளரக்கூடிய தாவரமாகும். மேலைநாடுகளில் கத்தாளையில் இருந்து ஷம்போ (SHAMBO) போன்றவை தயாரிக்கப்படுகிறது.

கத்தாளை அடிகாயங்களை ஆற்றும் சிறந்த மருத்துவ மூலிகையாக எம்மவரால் வெகுகாலமாக அறியப்பட்டிருக்கிறது. கத்தாளம் பூவும் உணவாகப் பயன்படுத்தப்படுவதை நாம் அறிந்திருக்கிறோம்.

இன்று தமிழீழத்தில் நிலவும் கயிற்றுத்தட்டுப்பாட்டால் பல் வேறு பொருட்களில் இருந்தும் கயிறு தயாரிக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே கத்தாளையில் இருந்து கயிறு தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்துள்ளது. முன்னர் பாடசாலைகளில் தொழில்கல்வி பாடபோதனைகளில் கத்தாளையில் இருந்து கயிறு திரிக்கும் முறைகள் கற்பிக்கப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியினர் இம் முயற்சிகளை தொழில் முறைப் படுத்துவதிலும் மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்தி வருவதிலும் அக்கறை காட்டி வருகின்றனர்.

# சங்கடப்படலை

வாயாலே...சொல்லவலி

அப்பன் மொழி பறித்தான்
ஆத்தாளோ உயிர் பறித்து
கொக்கரித்து எங்கள் குடிகெடுத்தாள்
இப்பவுள்ள
மகளும் தமிழருக்கு மண்போட்டு
மூடவந்தால்
அவளின் முகத்தினிலே... அடி

**

அன்று துரையப்பா
அவன் போகக் கதிர்காமர்
என்றொருவன் சேலை தோய்க்கின்றான்
இன்றிருந்து
நாயாய் கால்நக்கும் நடைப்பிணமே!
உன்நாமம்
வாயாலே... சொல்லவலி

- கோணாசலத் தேசிகர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புகழேந்தியின் “எரியும் வண்ணங்கள்”

புகழேந்தியின் “எரியும் வண்ணங்கள்” என்னும் ஓவிய நூல் பார்த்தேன். தமிழில் ஓவிய நூல்கள் வெளிவருவது என்பது சாதாரண விடயமல்ல. மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வெளிவந்திருக்கிறது என்பதை யாரும் விளங்கிக்கொள்ளாதிருக்க முடியாது. ஏனெனில் வணிக நோக்கின் அடிப்படையில் வெளியீட்டாளர்கள் முதல் முதலீட்டாளர்கள் வரை தயக்கம் காட்டுவார்கள்.

சமூகப் பிரக்ஞையும் உலகப் பார்வையும் உள்ளவர்களின் கூட்டுப் பிணைப்பால் இவ் ஓவிய நூல் வெளிவந்திருக்கின்றது என்கின்ற செய்தி மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

“கோடுகள். சும்மாயிருப்பதில்லை” என்னும் தலைப்பில் எரிமலையில் வெளிவந்த புகழேந்தியின் ஓவியங்களை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அது ஒரு சிறு அறிமுகமாகவே இருந்தது. ஆகவே புகழேந்தியின் “எரியும் வண்ணங்கள்” எனும் அவரது ஓவிய நூல் வெளிவந்திருக்கும் இவ்வேளையில், அவர் பற்றியும், அவரது ஓவியங்கள் குறித்தும் மேலதிக விடயங்களை வாசகர்கள் அறிந்துகொள்ளும் நோக்கில் இக்கட்டுரையை எழுதுவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

புகழேந்தி சமூகப் பிரக்ஞையுள்ள ஒரு ஓவியக் கலைஞர். அடக்குமுறைகளால் மிதிபடும் மனிதர்களின் துடிப்பாக அவர் தூரிகை அசைகிறது. கொடிய துன்பங்களில் துவழும் மனிதர்களின் துயர இருளை அவரது தூரிகை வெளிச்சத்துக்குக் கொணரும் ஆயுதமாகத் திகழ்கிறது.

தன் அயலில், தன் கண்ணெதிரே காண்கின்ற கொடுமைகளைக் காணமறுத்து, நிலவின் அழகை ரசித்துக் கொண்டிருக்கத் தன்னால் முடியாது என்கிறவர். அது அவரது கூற்றாக மட்டுமல்ல செயலாக மிளிர்ந்தும் இருக்கிறது. தமிழ் ஈழத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரே தன்னை ஓவியத்தின் பால் ஈடுபாடு கொள்ள வைத்தது என்கிறார். தமிழீழத்தில் நடந்த சிங்கள இராணுவக் கொடுமைகளையும் இந்தியா எனும் தேசத்துக்குள் எரிந்துகொண்டிருக்கும் சாதிக்கலவரங்களையும், மதக்கலவரங்களையும், பெண் அடக்குமுறைகளையும் அவர் தன் தூரிகையால் தீட்டியிருக்கிறார். சலக்குருத்தி, அயோத்தி, சுண்டூர் முதலானவற்றோடு தொடர்புடைய வன்முறைகளையும் அவர் தன் ஓவியத்தில் வரைந்துள்ளார்.

“கட்டறுப்பு” என்னும் ஓவியம் ஒரு பெண் ஒடுக்கப்படுவதைச் சித்தரிக்கிறது. ஒரு பொம்மையாக, ஒரு சிலையாக, உயிரற்றவளாக இந்தியப் பெண்கள் சமூகம் இருக்கிறது என்பதைக் கூறியீடாகக் காட்ட முனைகிறார். தன்னைப் பிணைத்த கட்டுகளோடும், நசிந்தும், நலிந்தும் கிடக்கின்றதையும் அவ் ஓவியம் பேசுகின்றது. அவள் அருகே ஒரு நூல் வைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடமுடியாது அவள் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. கல்வியும் அவளுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது. நிர்வாகங்களிலும் அவள் தவிர்க்கப்படுகிறாள் என்பதைத் தனித்துக் கிடக்கும் கதிரையும் விளங்கிக்கொள்ளத் துணைபுரிகிறது.



கட்டறுப்பு
எப்படி



சித்திரவதை
திசைகள் கேட்டேன்
தேம்புகின்றன

மொத்தத்தில் பெண்கள் சமூகம் இருளில், தளைகளில் சிக்குண்டு கிடக்கின்றது என்பதை புகழேந்தி வெளிச்சமிட்டுக் காட்டுகின்றார். ஆழமான சோகத்தை அவ்வாறு எம்முள் கிளரப்பண்ணுகிறார்.

இன்று எம் தேசத்தில் இத்தகைய கொடிய சமூக ஒடுக்குமுறைகளயும் இராணுவ ஒடுக்குமுறைகளையும் தகர்த்து, எழும் எம் தமிழீழ தேசத்துப் பெண்களின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




**மதம்**

**நிற வேறுபாடில்லாத குருதியில் குளிப்பது**

விடுதலைக்கான குரல்களும், அணிவகுப்புக்களும், வீரம் செறிந்த போராட்டமும் அவர்களது முதுகெலும்பை நிமிர்த்தும் என்ற நம்பிக்கைத் தீ என்று மூழுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

நிர்வாண ஊர்வலம், சலக்குருத்தி சாதிக்கலவரங்கள் போன்று தலைவிரித்தாடும் ஒடுக்குமுறைகள் என்று தீருமோ? என்று எண்ணத் தோன்றுகிறது. ஒரு பெண்ணை நிர்வாணமாகக் கூந்தலில் பிடித்து இழுத்து வரும் வெள்ளை வேட்டியும் சால்வையும் கட்டிய சாதித் திமிராளன் மீது கடுங் கோபக் கனலை வீசச் செய்கிறார். இந்த ஓவியத்தைப் பார்க்கிற ஒவ்வொருவரையும் "யாரடா இவன்?" என்ற கேள்வியை எழுப்பிவிடப் பண்ணுகிறதே! அதுவே ஓவியத்தின் வெற்றி.

அடக்குமுறையாளர்களின், காவற்துறைகளின் உதவிகளுடன் வெள்ளை வேட்டிக்காரன் நிற்பதும் பின்புறத்தில் காட்டப்படுகிறது.

இத்தகைய பெண் அடக்குமுறையாளர்களுக்கு பின்பலமாக ஒரு இயந்திரம் துணையிருப்பதும், காட்டப்படுகின்றது. யாரடா இவன்? என்று குரல் எழுப்பி, அவசரப்பட்டு, அவன் மீது முஸ்டியை உயர்த்தி விட எழும்புகிற ஒவ்வொருவனையும், உணர்வுத் தளத்துக்கு கொணர்வதோடு நீண்ட போராட்டம் தொடர்பான உந்துதலுக்கும், நெறிப்படுத்தலுக்கும் தயாராக்குகின்றது.

இந்தக் கொடுமைகளைக் கேட்கக் கூடாது; பார்க்கக்கூடாது; பேசக்கூடாது என்கிற விதமாய், ஓவியத்தின் மேற்புறத்தில் உள்ள மாந்தர்கள் காணப்படுகிறார்கள். அதன்மூலம் அந்த சமூகத்தின் இயலாமையை, போர்க்குணமற்ற தன்மையை, வீரியமின்மையை ஓவியம் கேலி செய்கின்றது. அந்தக் கேலிப் பண்புக்கூடாக அவர் மானுட நேயத்துக்கான சிந்தனையைத் திறந்து காட்டுகிறார்.

இந்தியாவில் மத வேறுபாடுகளாலும் மனிதன் கூறுபட்டு மோதிக்கொள்கிறான். அரசியல், வாதிகளால் திட்டமிட்டு மூட்டப்படும் மதக் கலவரங்களுக்குள் மக்கள் மோதியழிந்து போகிறார்கள். பாபர் மசூதி தகர்ப்பு உலகறிந்த விடயம். அந்த விடயத்தைப் பேசச் சிறந்த மொழியாக அவரது ஓவியம் அமைந்துவிட்டிருக்கிறது.

பாபர் மசூதியா? இராமர் கோயிலா? என்கிற மதப் பிரச்சினை இந்தியாவைப் படுகளமாக்கிய காலகட்டத்தில் அந்த ஓவியம் தீட்டப்பட்டிருக்கிறது.

மனிதர்களுக்கிடையில் பகைப் புலமாக பாபர் மசூதி, இராமர் கோயில் எழுந்து நிற்க கடவுள்களின் பெயரால் கத்தியுடன் மூர்க்

**நில நடுக்கம்**

இப்போது தாக்கியது நிலம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கத்தனமாக மனிதன் மிருகமாக மாறி நிற்கிறான்.

ஈழத்தில் தமிழ் மக்கள் மீது சிங்கள இராணுவ அடக்குமுறை யாளர்களால் ஏற்படுத்தப்பட்ட காயங்களை வெளிப்படுத்தும் "சித்திரவதை" என்னும் ஓவியத்தில் பொதுமை இருக்கிறது.

அடக்குமுறைச் சக்திகள் மனி தனை அடக்கி ஒடுக்கும் வதையில் வேறுபாடு காணமுடியாது. அது இந்தியாவில் நிகழ்ந்தால் என்ன? ஈழத்தில் நிகழ்ந்தால் என்ன? எல்லாம் சித்திரவதைதான்!

இவ் ஓவியத்தின் கீழ் இன்கு லாப் எழுதிய கவிதை வரியே போதுமானது.

**"திசைகளைக் கேட்டேன்;**
**தேம்புகின்றன."** என்றார்.

பல ஓவியங்களை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக இருந்தாலும் இறுதியாக "அகதிகள்" என்னும்





**அகதிகள்**

அவரது ஓவியம் கொடுமைகளா லும் அடக்குமுறைகளாலும் இன வெறிகளாலும் அலைக்கழிக்கப் பட்டு திசைகள் கெட்டுத் திரியும் மனிதர்கள் பற்றிப் பேசுகிறது.

திசைகள் எங்கும் பரந்து நின்று வாழ்வைத் தேடுகிற அவலம் தொலைந்து, நிர்மலமான வானத் தின் கீழிருந்து மகிழ்ச்சிப் பாடலை முணுமுணுக்கின்ற ஒரு நாளுக்காக ஏங்க வைத்துவிடுகிறார்.

அவரது ஓவியம், மொழிமாற்றம் அடைந்து வந்திருக்கின்றது. வளர்ந்து வருகிறது. புதிய வீச்சுக் கொள்வதற்கான கருக்கள் இருக் கின்றன.

**நிர்வாண ஊர்வலம் - சலக்குருத்தி**

**எந்தக் கொடியின் நிழலிலும்**
**சாதிப் பிணங்கள் கூந்தல் இழுக்க...**
**நிர்வாணப்பட்ட முகங்களுக்கு மேலே**
**பட்டொளி வீசும் பாரதமணிக்கொடி**

மண்ணில் மாந்தர் படுகின்ற பாடுகளை பாட, எழுத, வரைய வல்ல எல்லாக் கலைஞர்களுக்கும் உள்ள கோபமும், ஆவேசமும் அவ ருக்குள் இன்னும் அதிகமாகவே எரிகிறது.

உலகில் ஒரு நாள், புகழேந்தி என்னும் ஓவியக் கலைஞர் மிகவும் பேசப்படுபவராக விளங்குவார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தமிழக மக்களிடையே புத்தெழுச்சி பிறந்திருக்கிறது. மரணபய பீதியை தோற்றுவிக்கும் கொடிய தடா போன்ற சட்டங்கள் ஈழத் தமிழர்களுக்காகத் துடிக்கும் தமிழக இதயங்களின் துடிப்பைக் கொன்றுவிட முயன்றன. ஆனால் இன்று அந்நிலைகள் மெல்ல உடைந்து வருகின்றன என்றே எண்ணத் தோன்றுகிறது. தமிழீழ மக்களின் போராட்டத்தின் சத்தியமும், நீதியும், விடுதலைப் போர் ஈட்டி வருகின்ற வெற்றியும் காரணங்களாக இருந்து ஒரு நம்பிக்கையையும், தெம்பையும் அவர்களுக்களித்திருக்கின்றன.



# உறக்கம் கலைந்து தமிழகத்தில் எழுச்சி

தமிழக மக்களிடையே இவ்வாறான புத்தெழுச்சி பிறப்பதைத்தான் இந்திய பார்பனியம் விரும்பவில்லை. இந்தப் புத்தெழுச்சிக்கே அவர்கள் அஞ்சுகிறார்கள். செத்து மடிந்து விடும் என்று நம்பிய தமிழ் விட எழுச்சி எங்கேனும் பற்றி விடுமோ என்ற பயம் அவர்களை பல்வேறு விதமாக ஆட்டிப்படைக்கிறது. இதானால்தான் இந்திய ஆளும் வர்க்கமும், அதன் வால் பிடிகளும், மீண்டும் இந்தியப் படையை அனுப்புவது பற்றியும், தலைவர் பிரபாகரன் அவர்களைக் கைதுசெய்வது பற்றியும், இலங்கை இராணுவத்துக்கு பயிற்சியளிப்பது பற்றியும் கூச்சலெழுப்பி வருகின்றன.

இது மொழியால், இனத்தால், பாரம்பரியத்தால், பண்பாட்டால், நாகரீகத்தால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு தமிழீழ மக்களோடு சகோதர உறவு கொண்டுள்ள தமிழக மக்கள் மத்தியில் கோப அனலை வீசச் செய்திருக்கிறது.

ஈழத்தமிழர்களுக்கு விரோதமாக சிங்களப் பேரினவாத அரசுக்கு இந்திய அரசு எந்த வடிவத்தில் உதவ முனைந்தாலும் அதனை ம. தி. மு. க. தமிழ் நாட்டு மக்கள் சக்தியைத் திரட்டி கடுமையாக எதிர்க்கும். இவ்வாறு அண்மையில் ம.தி.மு.க மாநாட்டுத் தீர்மானத்தில் வை. கோபால்சாமி பிரகடனம் செய்திருந்தார். தமிழீழமே தமிழ் மக்களுக்கு நிரந்திரத் தீர்வாக அமையும் என்ற கோஷம் வலுவாக ஓங்கி ஒலிக்கிறது.

நீண்ட காலமாக கண்ணீரும் செந்நீரும் சிந்தி வரும் ஈழத்தமிழர் வரலாற்றை அருகில் இருந்து தமிழக மக்கள் கண்டு வந்தவர்கள். சிங்கள பேரினவாதத்தால் அவர்கள் அயலிலேயே அகதிகளாய் அல்லலுறும் ஈழத்தமிழனின் சோகக் கதையை அவர்கள் தினமும் பார்த்து வருகிறார்கள்.

சிறீலங்காவின் தமிழினப் படுகொலைகளைக் கண்டித்து தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தவிர ஏனைய கட்சிகள் யாவும் ஈழத்தமிழர் விடயத்தில் ஒருமித்து நிற்கிறார்கள்.

தி. மு. க. தலைவர் கருணாநிதி, திராவிடர் கழகத் தலைவர் வீரமணி ம.தி.மு.க. தலைவர் வை. கோபால்சாமி, தமிழர் தேசிய இயக்கம் பழ.நெடுமாறன் பகிரங்கமாக சிறீலங்கா அரசைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டனர். ம.தி.மு.க. சிறீலங்காவின் பிரதித் தூதுவராலயத்தின் முன்

பாக 20 ஆயிரம் பே
கலந்து கொண்ட ஊ
லம் ஒன்றை நடா
யது. டாக்டர் ராம
ஸின் தலைமையிலா
பாட்டாளி மக்கள் கட
யும் ஒன்றை நடாத்திய
எழுச்சிப் பாட
தேனிசை செல்லப்
தலைமையிலும் ஆ
பாட்ட ஊர்வலம் ஒன்
நடைபெற்றுள்ளது.

கருணாநிதியும் ஆ
ரக்கணக்கான தோழ
ளும் ஒரு நாள் அ
யாள உண்ணாவிர
போராட்டத்தை தமிழகமெங்
நடத்தினர். தமிழர் தேசிய இய
தலைவர் திரு பழ. நெடுமாற
தலைமையில் 30 தமிழீழ ஆதர
இயக்கங்கள் நடத்திய பேரணி
ஆயிரக்கணக்கான மக்கள் கல
கொண்டனர். கட்சி பேதம் இன்
அனைத்து தமிழக கட்சிகள
தமிழீழ மக்களுக்காகக் குர
கொடுத்தன.

தமிழ் நாட்டு கிறிஸ்த்தவ தி
சபை மாநாட்டில் சிறீலங்கா அ
சாங்கத்தினால் தமிழீழத்தில் மே
கொள்ளப்பட்ட படுகொலை
ளைக் கண்டித்து தீர்மானம் நி
வேற்றப்பட்டது. சென்னையி
உள்ள பல்கலைககழக, கல்லூ
மாணவர்கள், சிறிலங்காவின் தமி
னப் படுகொலையை எதிர்த்
கல்லூரிகளைப் பகிஸ்கரித்து
ளனர். மறியல் போராட்டங்க
நடத்தியுள்ளனர். இதற்கிடையி
இந்திய உளவுப் படையான
RAW ஆனது E.N.D.L.F என்
கால்வருடித் தமிழ்க்குழுவொன்
அணுகி விடுதலைப்புலிகளுக்கு
சிறிலங்கா அரசாங்கத்துக்கு
இடையில் சிக்கி தமிழ் மக்க
அழிவதைத் தடுக்கும் படி கோர
ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்
நடத்தக் கேட்டிருக்கிறது. அத
பிரகாரம் நடந்து கொண்
E.N.D.L.F-வினர் அகதி முகாங்
ளில் வாழும் தமிழீழ அகதிக
மிரட்டி சென்னையில் ஊர்வல
ஒன்றை நடாத்தியது. இந்திய உ
வுப் படையின் சதி நடவடிக்கை
ளையும், இந்திய அரசின் கொடி
தடா போன்ற சட்டங்களையு
தமிழக மக்கள் மீறி எழுகின்ற
கான உறக்கம் கலைந்து வருகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இனத்தின் துயரம்



வானமும் சிந்தி - பிரான்ஸ் -



நெதர்லாந்து -





உலகத் தெருக்களில் ஓங்கி ஒலிக்கும் உண்மைகள் - இத்தாலி -

சிறீலங்கா அரசின் இனப்படு கொலையைக் கண்டித்து உலகில் வாழும் தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஒன்று கூடல்களை, அமைதிவழி ஊர்வலங் களை, விழிப்புப்போராட்டங்களை நடாத் தினார்கள்.

சிறீலங்கா அரசின் இனப்படுகொ லைகளை தடுத்து நிறுத்துமாறும், தமிழர்க ளின் சுயநிர்ணய உரிமையை அங்கீக ரிக்கக் கோரியும் கோஷங்கள் எழுப்பப் பட்டன.

டென்மார்க், நோர்வே, கனடா, சுவிஸ், ஜெர்மனி, பிரான்ஸ், அவுஸ்ரே லியா, அமெரிக்கா, லண்டன் போன்ற உலகின் பல்வேறு நாடுகளின் தலைநகரங் களில் இவ் நிகழ்வுகள் நடந்தன.

டென்மார்க் கோபன்ஹாகன் நகர் பாராளுமன்ற முன்றலில் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சிறீ லங்கா அரசுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். அந் நாட்டு பிரதமருக் கும், வெளிநாட்டமைச்சருக்கும் படு கொலைகளை நிறுத்தக் கோரி மகஜர் கள் கொடுக்கப்பட்டன.

அவுஸ்ரேலியா மெல்பேண் நகரில் சிறீலங்கா வர்த்தக மகாநாட்டின் போது அங்கு வாழும் புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் அமைதி வழி எதிர்ப்பைத் தெரி வித்தனர். அங்கு வந்த சிறீலங்கா செய் திச் சேவை, உல்லாசத் துறை அமைச்சர் தர்ம சிறீ சேனநாயக்காவுக்கும் ஏராள மான தமிழ் மக்கள் சுலோக அட்டை களைத் தாங்கி மௌனமாக நின்று தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்தார்கள்.

கனடாவில் பல்வேறு பல்கலைக் கழ கங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்களை ஒன்றிணைத்த தமிழ் மாணவர்களின் கல்விச் சங்கம் என்ற அமைப்பு ஒட்டா வில், நோத்தரடாம் பெரிய கோயிலில் பூசை ஒழுங்கு செய்திருந்தது. பின்னர் வெளிவிவகார அமைச்சரின் காரியால யம் அமைந்துள்ள இடம் நோக்கி அமைதி வழி ஊர்வலம் நடைபெற்றது. அங்கு அடையாள உண்ணாவிரதம் நடைபெற் றது. பல்வேறு மதத்தலைவர்கள் உரையாற் றினர்.

சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையும், பொருளாதாரத்தடையும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு முரணா னவை, மனித சமூகத்திற்கு விரோதமான இக் குற்ற நடவடிக்கையை நிறுத்துமாறு பலகலைக்கழக பேராசிரியர்கள், வைத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# வெளிநாடுகளில் ஆர்ப்பரித்தெழுந்த மக்கள்

தியக் கலாநிதிகள், கல்விமான்கள் பலர் சந்திரிகாவுக்கு திறந்த கடிதங்களை அனுப்பியிருந்தார்கள்.

சுவீடனில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது பல சுவீடன் நாட்டு மக்களும் கலந்து கொண்டிருந்தார்கள். தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் குறித்தும் இனப் படுகொலை குறித்தும் பேராசிரியர் பீற்றர் சாக் அவர்கள் உரையாற்றினார்.

பிரான்சில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஒன்று கூடலில் 2000-கும் மேற்பட்ட மக்கள் கொட்டும் மழையில் நின்ற படியயே தமது உளத்துயரை வெளிப்படுத்தி நின்றனர்.

இத்தாலி பலெர்மோவில் நடந்த ஒன்று கூடலில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். வெளிநாட்டு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், இத்தாலிய மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள். பலெர்மோ மாநகர மேஜர் யூலியோ ஒர்லாந்தோ (Julio orlando) கலந்து கொண்டு உரையாற்றினார். இத்தாலிய அரசுக்கும், வத்திக்கான் மற்றும் பல்வேறு மனித உரிமை அமைப்புக்களுக்கும் சிறீலங்கா அரசின் இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்தக் கோரும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

லண்டனில் எழுச்சி ஒன்று கூடல் நிகழ்ந்தபோது ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். 65-கும் மேற்பட்ட தமிழ் அமைப்புக்களைச் சார்ந்தோரும் இதில் கலந்து கொண்டு தமிழினப் படுகொலைகளை கண்டிக்கக் கோரும் மகஜர்களை பிரதமர் ஜோன் மேஜரிடம் கையளித்தார்கள்.

போராட்டத்தைச் சித்தரிக்கின்ற ஊர்திகளுடன் நாதஸ்வர இசை ஒலிக்க மக்கள் பேரணி நகர்ந்தது. இறந்த போராளிகளின் நினைவாக சிகப்பு, மஞ்சள் நிற பலூன்கள் பறக்க விடப்பட்டன. யூலை 14, 15-ம் திகதிகளில் தமிழ் அமைப்புக்கள் இணைந்து நடாத்திய இந் நிகழ்வுகளில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இனப் படுகொலையை தடுத்து நிறுத்தவும், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் கோரும் மகஜரை அவுஸ்ரேலியா பிரதம மந்திரியின் பிரதிநிதி John panduzopolous அவர்களிடம் பேராசிரியர் எலியேசர் கையளித்தார்.



சிங்கள இனவெறித் தீயில் இருந்து தேசம் மீள...
- நோர்வே -


சுவிஸ்

சொந்தச் சகோதரர் துன்பத்தில் வாடல் கண்டு...


சுவீடன்

சுவிஸ் பேர்ண் நகரில் சிறீ லங்கா அரசாங்கத்தின் தமிழினப் படுகொலையை தடுத்து நிறுத்தும் வண்ணம் அழுத்தம் பிரயோகிக்கக் கோரி 1500-க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டார்கள்.

- தருமு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிறுகதை




"இனியவன், இண்டைக்கு எப்பிடியெண்டாலும் ஒரு வீடு பார்த்து ஒழுங்கு படுத்த வேணும். ஆஸ்பத்திரியில இருக்கிற எங்கட ஆக்களைக் கூட்டியர வேணும். அவையளைத் தங்கவைக்கக் கூடியதாக கொஞ்சம் வசதியளோட தனி வீடாக இருந்தால் நல்லது. ரோட்டுக்கரையாக இருக்கிற வீடு வேண்டாம். ஊருக்குள்ள ஒதுக்குப்புறமாக இருந்தால் நல்லது. என்ன, சொன்னது எல்லாம் நல்லாய் விளங்கினது தானே. இதுகளை அலட்டாமல் மனசில வைச்சுக்கொண்டு பொருத்தமான வீடாய் பாத்து ஒழங்குபடுத்த வேணும். தேவையெண்டா பிரதேசக் காரியாலயத்தில் இருக்கிற ரஞ்சனின் உதவியையும் கேளும்..." ஓரே மூச்சில் சொல்லி முடித்தார் முகாம் பொறுப்பாளர். இனியவனின் தோளில் ஒரு பொறுப்பு சுமப்பது போன்ற பாரம்.



யாழ்ப்பாணமே ஒரு கட்டிடக் காடு மாதிரித்தான். ஆனால் தேவைக்கு ஒரு வீடு எடுக்கிறது எண்டால் எவ்வளவு கஸ்டப்பட வேண்டிகிடக்கு. ஒவ்வொரு முறையும் இந்த வீடு எடுக்கிற வேலை எப்பிடியோ எனக்குத்தான் வந்து சேருது. இப்படி எண்ணமிட்ட இனியவன்

சாறத்தையும், துவாயையும் எடுத்துக் கொண்டு கிணற்றடியை நோக்கி நடந்தான். ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக, பல்கலைக்கழகத்தில் படிப்பவர்கள் என்று சொல்லி மாமா வீட்டின் முன் அறையில் இயக்க உறுப்பினர்கள் சிலரை தங்க வைத்த சம்பவம், நினைவுத்திரையில் பளிச்சிட்டது.

இன்னு ஒரு சமயம் பிறமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள்; இங்கு தங்கிப்படிக்க வந்தவர்கள் என்று நம்பவைத்து ஒரு வீடு வாடகைக்குப் பெற்ற சம்ப... ஞாபகத்திற்கு வந்து போனது.

இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்கள் என்று கூறி இயக்க ஆதரவாளர் குடும்பம் ஒன்றைத் தனது வீட்டுக்கு சமீபமாக குடியிருத்தி இருந்தது, எண்ணப் பதிவுகளிலிருந்து மேலெழுந்தது.

ஒவ்வொரு வாளி தண்ணீராக அள்ளி ஊற்றிக் குளிக்கும் போதும், இண்டைக்கு ஆரைப்போய் சந்தித்தால் வீடு பார்க்கிற ஒழுங்கைச் செய்யலாம் என்ற விடயத்தை சுற்றியே எண்ணம் வட்டமிட்டது. சபாரத்தினத்தாரிட்ட போகலாம் தான். ஆனால் அந்த ஆள் விடுப்புக் கேக்கிற மனுசன், 'ஆரந்த வீட்டில; எத்தனை பேர் இருப்பின; என்ன செய்யப்போகினம்?' என்றெல்லாம் ஊருப்பட்ட கேள்விகள் கேட்கும். உதுக்கெல்லாம் மறுமொழி சொல்லுறது சினம்பிடிச்ச வேலை.

ஆகவே அவரிட்டை போக வேண்டாம். மனதில் தீர்மானம் பிறந்தது.

குஞ்சண்ணயிட்டைப் போகலாம். அந்தாள் இழுத்தடிக்கும். தன்ரை வேலையெல்லாம் முடியுமட்டுக்கும் காத்துக்கொண்டு நிக்க வைச்சுப் போட்டு பிறகு, தம்பி, இதை நாளைக்குச் செய்வமே எண்டு நாக்கூசாமல் கேட்கும். தன்ரை வேலையள் செய்விக்கிறதுக்கெண்டால் மனுசன் முன்னுக்கு ஓடிவரும். உந்தாளுக்கு பல்லைக் காட்டிக் கடமைப்படுறது வீண்வேலை. தனக்குள்ளேயே முடிவு செய்துகொண்டான்.

சண்முகண்ணையிடம் போனால் அந்தாள் தன்ரை வேலை எல்லாத்தையும் விட்டுப்போட்டு எனனோடேயே திரியும். இந்த ஊரில் ஒவ்வொரு அங்குலமும் அந்தாளுக்கு தண்ணிபட்டபாடு ஆனா... இவரைக் கூட்டிக்கொண்டு திரி... சால், "தம்பி, நானும் பிள்ளை... குட்டிக்காரியடா, சீவனப்பாட்டை... இவர் தானே பார்க்கவேணும்" எனக் கண்டிப்பும் அன்பும் கலந்த தொனியில் அக்கா கதை சொல்லும். எண்டாலும் இண்டைக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இவரைப் பிடிச்சால் தான் விசய[illegible] வெற்றியாய் முடிக்கலாம். மனதுக்குள் திட்டமிட்டுக்கொண்ட போது இனியவன் குளிப்பதையும் முடித்துக் கொண்டான்.

மின்னலின் வேகத்தில் சீருடைக்குள் தன்னைத் திணித்துக்கொண்ட இனியவன் சைக்கிள் வண்டிக்குத் தாவினான்...

டிரிங்... டிரிங்... டிரிங்..., சைக்கிள் மணியின் சத்தம் கேட்டு குசினிக்குள் இருந்து வந்தாள் சண்முகத்தின் மனைவி.

"என்ன தம்பி புது நூதனமாய் வாசலுக்கை நிண்டு மணியடிக்கிறீர்'' என்றாள் இனியவனை நோக்கி.

அக்கா, தேத்தண்ணியைத் தாங்கோவன், என்றபடி வீட்டுக்குள் புகுந்து கொள்வதுதான். இனியவனின் வழமை.

"சண்முக அண்ணனைச் சந்திக்க வேணும் அக்கா. அது தான் வந்தனான்'' எனக் கூறியபடி சீற்றிலிருந்து இறங்கி, சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தான்.

"அவர், கொஞ்சம் முந்தித்தான் தோட்டம் போனவர் தம்பி"

"அப்ப நான் அங்க போய் சந்திக்கிறன் அக்கா'' என்றான் இனியவன் சைக்கிளை திருப்பியபடி.

"தம்பி கனகாலத்துக்குப் பிறகு வாறீர். ஒரு தேத்தண்ணி எண்டாலும் குடிச்சிட்டுப் போகலாமே இருமன் போட்டுத்தாறன்"

"இல்லையக்கா அவசர அலுவல் கிடக்கு. நான் போட்டு பிறகு வாறன்."

சைக்கிளை மிதிக்கத் தொடங்கிய இனியவனை நோக்கி, ஓடி வந்தான் தயாளன். சண்முகத்தின் மகன்.

"தேத்தண்ணி குடிக்காட்டா நான் போக விடமாட்டன்" சைக்கிளைப் பிடித்தபடி குறுக்க மறித்தான் தயாளன். அவனை அப்படியே வாரி எடுத்து ஒரு முத்தம் கொடுத்து விட்டு, "நான் நாளைக்கு வாறன் என்ன" என்றான் இனியவன்.

செம்மண் பரப்பில் மண்வெட்டியைத் தூக்கிக் கொத்திப் பிளந்து கொண்டிருந்த சண்முகம் இனியவனைக் கண்டது "என்ன தம்பி இந்தப் பக்கம்'' என்றார் ஒரு போலிக் கோபத்துடன்.

"உங்களிட்டைதான் அண்ணை. ஒரு அவசர அலுவல் கிடக்கு'' என்றான் இனியவன்.

"சொல்லி விட்டிருந்தால் நானே வந்திருப்பேனே?" எனக் கூறியபடி மண்வெட்டியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு, இனியவனிடம் வந்து சேர்ந்தார் சண்முகம்.

"அண்ணே, ஒரு வீடு பாக்க வேண்டும் உங்களுக்கு தெரிஞ்ச வீடேதும் எடுக்கக் கூடியதாய் இருக்குமோ'' மெல்லிய குரலில் இழுத்து... இழுத்து கூறி முடித்தான் இனியவன்

**'வீடு' எனும்**
**இளையவனின் சிறுகதைத் தொகுதியில் இருந்து, இச் சிறுகதையைப் பிரசுரிக்கிறோம்**

"றோட்டுக் கரையில் எண்டா பரவாயில்லையே தம்பி?"

"ஏன் அண்ணை, ஊருக்குள்ள உள் பக்கமாய் வேற ஏதும் பார்க்க ஏலாதே?"

"முருகேசுவின்ரை பேத்தி வீடு கிடக்கு. அதெண்டா ஆகப் பெரிய வீடு. ஆனா அவை ஒருத்தரும் உங்கையில்லை. ஒரு கிழவிமட்டும் தான் இருக்கு. கதைச்சுப் பார்க்கலாம்" என்றார் சண்முகம்.

"அப்ப வாறியளே அதைப் போய்ப் பார்த்து முடிச்சிட்டு வருவம்" இனியவன் கேட்டான்.

★★★

ஆறடி உயர மதில். இரண்டு பெரிய இரும்புக் கேற்றுக்கள். அதன் அருகில் ஒரு சிறிய நடைபாதைக் கேற், கேற்றிலிருந்து வீட்டு வாசல் வரை இருமருங்கும் வாடிக் கொண்டிருந்த குரோட்டன் செடிகள், அதற்குப் பின்னால் வரிசையாக நடப்பட்டிருந்த செவ்விளநீர்த் தென்னைகள், கிணற்றடியிலேயே பெரியதொரு நீர்த் தொட்டி, விசாலமான பெரிய காணியில் உயர்ந்த மாமரங்களும், தென்னை மரங்களும் நிழல் தரும் சோலையாக.

வீட்டின் முன் விறாந்தை, சுமார் இருபதடி நீளம் இருக்கும். அதை விடப் பெரிய ஹோல், தனியான குசினி, கழிப்பறையுடன் கூடிய படுக்கை வசதி கொண்ட பல அறைகள். இந்த வீட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் கூர்ந்து கவனித்த இனியவன், இது நோயாளர் தங்குவதற்கு அருமையான இடம் என எண்ணிக்கொண்டான்.

"இந்த வீடு உங்கடை தானே அம்மா'' என்றான் இனியவன், சுமார் ஏழுபது வயது மதிக்கத்தக்க நரையுடன் கூடிய தலையும் ஆரோக்கியமான உடற்கட்டும் கொண்ட அந்தப் பெண்மணியை நோக்கி.

"ஓமோம்... என்ன விசயம்... என்ன வேணும்"

"இந்த வீடு கொஞ்ச நாளைக்கு நாங்கள் பாவிக்க வேண்டியிருக்குது. அது தான் கேட்டனான்"

"என்ன தம்பி, என்ன சொல்லுறாய்?"

"நீங்கள் மட்டும்தானே. இந்த வீட்டில தனியக் குடியிருக்கிறனியள்"

இதுக்கு என்ன பதிலைச் சொல்லலாம் என யோசனை செலுத்தியவள்,

"தம்பி! இந்த வீடு நான் சீதனம் குடுத்திட்டன். மருமோனின்ர தமையனவை உங்க உடுவிலில் இருக்கினம். வாற திங்கட்கிழமைக்குப் பிறகு அவையும் இங்க வந்திருக்கப் போகினம். அவர் வந்து நேற்றுத்தான் வீட்டைக் கழுவிப் போட்டுத், தொட்டிக்கும் தண்ணி நிரப்பி விட்டுப் போனவர்" அவள் நீட்டி முழக்கினாள்.

"இந்த வீட்டைப் பற்றி இப்ப கதைக்கிறது என்டால் ஆரோட கதைக்க வேணும்'' இனியவன் குரலில் சூடு.

(தொடர்ச்சி 30-ம் பக்கம்)

www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

# இதுதான் சிங்கள தேசத்தின் வரலாற்று இயல்பா ?



கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம் என்று இலங்கைத் தீவில் இறைமையுள்ள மூன்று அரசுகள் இருந்த காலம். அப்போது கோட்டை இராச்சியத்தை புவனேகபாகு என்ற சிங்கள மன்னன் ஆண்டு வந்தான். இலங்கைத்தீவின் கரையோரப் பகுதிகள் சிலவற்றில் போர்த்துக்கேயரின் பிடி இறுகத் தொடங்கிய நேரம்.

புவனேகபாகுவின் கோட்டை அரசுக்குள் பிரச்சினைகள் எழுந்தன. தனது உடன்பிறந்த சகோதரர்களுடன் புவனேகபாகு சண்டையிட்டுக் கொண்டிருந்தான். இந்தவேளையில் தனது ஆட்சி அதிகாரத்தைத் திடப்படுத்திக்கொள்வதற்காக, போர்த்துக்கேயரின் உதவியைப் புவனேகபாகு நாடினான். கோட்டைத் தலைநகருக்கு போர்த்துக்கேய படை வந்தது. புவனேகபாகுவிற்கு உதவிபுரிந்து அவனது சகோதரர்களைத் தோற்கடித்தது.

கதை அத்துடன் முடியவில்லை. கோட்டை இராசதானியின் அரசுரிமை, புவனேகபாகுவிற்குப் பின்னர் போர்த்துக்கேயருக்கே சென்றடைய வேண்டும் என்று, புவனேகபாகுவின் கையாலேயே போர்த்துக்கேயர் உயில் - அதாவது மரண சாசனம் - எழுதுவித்தார்கள்.

இர்வாறுதான் சிங்களவர்களின் கோட்டை இராச்சியம் அந்நியரிடம் பறிபோனது. இனி, கண்டி இராச்சியத்தின் கதைக்கு வருவோம்.

போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம் முடிவடைந்த பின், பிரித்தானியர் காலம் வந்தது. அப்போது, கண்டி இராச்சியத்தைத் தவிர இலங்கைத் தீவின் அனைத்துப் பகுதிகளையும் பிரித்தானியர் ஆக்கிரமித்து வைத்திருந்த காலம். ககண்டியைக் கைப்பற்ற முயன்று பிரித்தானியர் தோற்ற நேரம். அந்த நேரத்தில், கண்டி மன்னனான சிறீவிக்கிரம ராஜசிங்கனுக்கும் கண்டிப் பிரதானிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் வெடித்தன.

கண்டி மன்னனுக்கு எதிராகச் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டிய கண்டிப் பிரதானிகள், பிரித்தானியப் படையின் உதவியை நாடினர்.






தமிழீழத்தில் நடந்த மேதினத்தின் போது, சந்திரிகாவின் பொய்முகத் தோற்றங்களை வெளிப்படுத்தும் சில காட்சிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பிரித்தானியர் உடன்பட்டனர். கண்டிப் பிரதானிகள் துணையுடன், நுழையக் கடினமான கண்டி இராச்சியத்திற்குள் இலகுவாக நுழைந்த பிரித்தானியப் படைகள், கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றின. தமக்குத்தான் ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்று கனவு கண்டுகொண்டிருந்த கண்டிப் பிரதானிகளுக்கு, பலத்த ஏமாற்றம் கிடைத்தது. ஏற்கனவே கைப்பற்றி வைத்திருந்த பகுதியுடன் கண்டி இராசதானியையும் இணைத்து, தீவின் முழு ஆட்சி அதிகாரத்தையும் பிரித்தானியர் தமது கைகளில் எடுத்துக்கொண்டனர்.

இவ்வாறுதான், சிங்களவர்களின் கண்டி இராச்சியம் அந்நியரிடம் பறிபோனது. அந்நியப் படைகளை உதவிக்கு அழைக்க முயன்று தமது இராச்சியங்களைப் பறிகொடுத்தது தான், சிங்கள தேசத்தின் வரலாறு.

அடுத்ததாக, இந்தியப் படைகளை அழைத்த ஜே. ஆர். அரசின் செயலைப் பார்ப்போம்.

தமிழரின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் ண்ணத்துடன், 1987ம் ஆண்டு, சிறீலங்கா "மன்னர்" ஜே. ஆர். ஜெயவர்த்தனா, இந்தியப் படைகளை இலங்கைத் தீவிற்கு அழைத்தார்.

இந்தியப் படை தமிழர் படையுடன் பொருதியது; 8000க்கும் மேற்பட்ட தமிழ் மக்களை இஇந்தியப் படை கொன்றது.

ஆனால், இந்தியப் படையை அழைத்ததால் வேகங்கொண்ட ஜே. வி. பி. கிளர்ச்சியால். சுமார் 60,000 சிங்களவர்கள் தங்களைத் தாங்களே கொன்றுதள்ளினர்.

அந்நியப் (இந்திய) படையை அழைத்தவர்கள் இழந்தது 60,000 மக்களை; அதை எதிர்த்துப் போராடியவர்கள் இழந்தது 8,000 மமக்களை.

அதுமட்டுமல்ல, இந்தியப் படைகளை போரில் தோல்வியுறச் செய்த தமிழர் படை, இறுதியில், இந்தியப் படைகளை இலங்கை மண்ணைவிட்டு வெளியேற்றியது. அதாவது, முன்னைய வரலாற்றைப் போல, இலங்கைத்தீவில் அந்நியர் ஆட்சி நடைபெறாமல் போய்விட்டது. அதற்குப் பிரதான காரணம் - சிங்களவர் தேசமல்ல; தமிழர் படையே ஆகும்.

அந்நியரின் குடைக்குள் இளைப்பாற முன்று தன்னிடம் இருந்த குடையையும் இழந்த வரலாற்றை, கண்டிப் பிரதானிகள் வழித் தோன்றலான சந்திரிகா பண்டாரநாடக்கா குமாரணத்துங்கா தெரிந்துகொள்வது, சிங்கள தேசத்திற்கு நல்லது அல்லவா!

இத்தகைய உணர்த்தல் ஒன்றை, 1990ம் ஆண்டு ஜே. வி. பி. சார்புப் பத்திரிகையான 'கினிபுற' (தீப்பொறி) நினைவூட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



**இத்தாலியில் முதற்தடவையாக திலீபன் தமிழ் பாடசாலை மாணவர்களின் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அந்நிகழ்வுகளில் சில காட்சிகளையே இப்புகைப்படங்களில் காண்கிறீர்கள்.**



www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

"மருமோன்ரை தமையன் உடுவிலிலை தான் இருக்கிறார். அவரோடை தான் கதைக்க வேணும்"

"சரி அவரின்ரை விலாசத்தை தாருங்கோ"

"நாடு இவ்வளவு கஸ்டப்பட்டு சனமெல்லாம் எந்தளவுக்கு வேதனைப் படுகுது. இவையள் கொஞ்சப் பேர் ஒரு நோவரியமும் இல்லாமல் இருந்து கொண்டு என்ன பாடு படுத்துகினம்." புறுபுறுத்தான் இனியவன்.

சண்முகம் அவனது ஆதங்கத்தைப் புரிந்து கொண்டார்.

"கனகசபையரை எனக்குத் தெரியும். அந்தாள் நல்ல மனுசன் கேட்டால் தரும் எண்டுதான் நினைக்கிறன். எனக்கு அவரை ஓரளவுக்குத் தெரியும்" எனக் கூறினார் சண்முகம்.

சண்முகமும், இனியவனும், உடுவிலில் கனகசபையின் வீடு தேடிப் பிடிக்கவே இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் செலவிட வேண்டியிருந்தது. உடுவில், டச் றோட்டில் உள்ளமைந்ததொரு பகுதியில், நவீன பங்களா என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒரு நல்ல வசதியான வீட்டில் குடியிருந்தார் கனகசபை.

சண்முகத்தைக் கண்டதும் "ஏது இந்தப்பக்கம் திரும்பியிட்டியள்?" என்ன விசேஷம், கனகசபை கேட்டார்.

"இவை தபியவை உங்களிட்டை ஒரு அலுவலாய் வந்தவை. அது தான் கூட்டியந்தனான்" இது சண்முகம்.

"என்ன தம்பி, என்னவேணும்" என ஆரம்பித்தவர் போன கிழமை பலாலியில நடந்த சண்டையில காய பட்டு பிறகு தவறிப் போன லெப். காண்டீபன் தெரியுமோ? அவர் எனக்கு ஒரு முறையில் மருமோன். என்ரை ஒண்ட விட்ட அக்காட மகன். மற்றது இப்ப ஏரியா வேலை பார்க்கிற பரந்தாமன் தெரியுமோ.. அவர் என்கொரு பெறாமகன் எனக் கூறிக் கொண்டு போனவர், "சரி தம்பி நீர் வந்த விசயம் என்ன அதைச் சொல்லுமன்" எனக் கூறிமுடித்தார்.

"அப்ப நீங்கள் எங்கட ஆள் தானே, உங்களுக்குச் சொன்னா விளங்கும் தானே அண்ணை. உரும்பிராயில் உங்கட மாமியார் இருக்கிற வீடு எங்களுக்குக் கொஞ்ச நாளைக்கு தேவைப்படுகுது. அதுதான் வந்தனான்..." இனியவன் கூறிமுடிக்கும் முதலே, அவரது முகத்தில் ஒருவித இருள் படிந்தது.

"அது என்ர வீடில்ல, தம்பியிட சீதன வீடு. மாமி அங்க இருக்கிறா. நாங்கள் கூப்பிட்டாலும் அவ இஞ்சை வந்து இருக்கமாட்டா" எனத் தொடர்ந்து இழுத்தார் கனகசபை.

"அண்ணை. காலமை நாங்கள் அங்க போனனாங்கள். அவ நீங்களும் அங்க இருக்க வரப் போறதாகச் சொன்னவா. அது தான்" இனியவன் கூறி முடிப்பதற்கு இடையில் குறுக்கிட்டார் கனகசபை.

"ஓம் தம்பி. நான் மஸ்கன்ஸ் கம்பெனியில தானே வேல. இவருக்கும் தெரியும் தானே" எனச் சண்முகத்தைச் சுட்டிக்காட்டியவர் "இங்கையிருந்து போய்வரக் கஷ்டம். அதோட இதுவும் வாடகை வீடு தானே, அது தான் வாற கிழமை தொடக்கம் அங்க போய் இருக்கலாமெண்டு இருக்கிறன்" என்றார்.

"அப்ப நல்லதாய் போச்சு அண்ணை. உங்களுக்கு றோட்டுக் கரையில நல்ல வசதியான வீடு. உரும்பிராயிலேயே இருக்கு. எடுத்துத் தாறம். வாடகையும் வேண்டாம். நீங்களும் மாமியாரையும் கூப்பிட்டு வைச்சிருக்கலாம்" இனியவன் கூறினான்.

"எந்த வீட்டைத் தம்பி சொல்லுறீர்?" இடைமறித்தார் கனகசபை.

"அண்ணை உங்களுக்கு தெரியும் தானே. தாமரவல்லித் தோட்டக்காரர் கிருஷ்ணபிள்ளை வீடு. பலாலி றோட்டில நல்ல வசதியான வீடு" எனச் சண்முகம் கூறத் தொடங்கியதும்,

"அது அவை சகோதரங்கள் கன பேருக்கு பங்காயெல்லோ கிடக்கு" என்றார் கனகசபை.

"பங்கோ என்னவோ தெரியாது அண்ணை. ஆனா அவை ஒருத்தரும் இப்ப ஊரில இல்ல. சும்மா கிடக்கிற வீட்டைப் பாவிச்சால் என்ன? குறைஞ்சே போகும்" சண்முகம் கூறினார்.

"அது சரி அதுல நீங்கள் இருக்கலாம் தானே தம்பி" இது கனகசபை.

"அண்ணை அது றோட்டுக் கரை. எங்கட பாவிப்புக்கு சரி வராது அதுதான் யோசிக்கிறம்" என்றான் இனியவன்.

"தம்பி எனக்குப் பங்குக் கிணறு, மற்றவையளோட சோலி சுறட்டு அது இதெல்லாம் சரி வராது. என்னைக் கொஞ்சம் நிம்மதியாய் இருக்க விடுங்கோ" என்றார் கனகசபை.

"போனகிழமை தான் மண்மீட்பு நிதியெண்டு பத்தாயிரம் போய் கட்டினது. அதுக்கிடையில் வீடும் வேணுமாமே" வீட்டுக்கு உள்ளேயிருந்து ஒரு உரத்த குரல் எழுந்தது.

"சண்முகண்ணை இனிக் கதைச்சுப் பிரயோசனமில்லை. எழும்புங்கோ. இந்த மண்ணில இவ்வளவு பெரிய போராட்டம் நடக்கேக்கை அதன் துன்ப துயரங்களில் பங்கேற்காத எவரும் இதன் வளங்களை அனுபவிக்கக் கூடாது"

"வெளிநாட்டில் வசிப்பவர்களின் சொத்துக்கள் அனைத்தும் தேசிய விடுதலைக்குப் பயன்படுத்தப்படும் எனப் பிரகடனம் செய்யும்படி இயக்கத் தலைமையிடம் கேட்க வேண்டும்" என முணுமுணுத்தபடி இனியவன் எழும்பிப் போய் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான்.

★★★

உரும்பிராயில் தனிமையான, அமைதியான அந்த வீட்டின் வராந்தாக்களில் காயம்பட்ட போராளிகள் சிலர் ஆறுதலாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

"எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம், தமிழீழ மண்ணை மீட்டெடுக்க ஓடிப் போகிறோம்"

என்ற பாடல் வரிகள் காற்றில் கலந்து மிதந்து கொண்டிருந்தன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கேள்வி-பதில்

**☒ இனக்கலவரத்தைச் சாட்டாக வைத்து ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பியோடி வந்து அகதி அந்தஸ்த்துக்கோரி, அதன் பின் சந்தர்ப்பவசமாக அந்நாட்டுக் குடியுரிமையும் பெற்ற பின் நாம் இந்நாட்டுக் குடி மக்கள் எங்களிடம் தமிழ்த்தேசியப் பாதுகாப்பு நிதி கேட்டு வரரேண்டாம், மீறி வந்தால் பொலிஸில் புகார் கொடுத்து விடுவோம் என நிதி சேகரிப்பவர்களை விரட்டும் சில ஈழத்தமிழரை எப்படியாகக் கணிப்பீர்கள்? இவர்கள் உண்மையிலேயே தமிழீழம் திரும்பவேமாட்டார்களா? இவர்கள் தமிழீழம் திரும்ப வேண்டி வந்தால் இவர்களுக்கு எப்படியான வரவேற்பு இருக்கும்? இவர்களைத் தமிழீழம் மன்னிக்குமா?**

**திருமதி. செல்வம், பிரான்ஸ்.**

✎ வெளிநாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களின் அரசியல் அந்த்ஸ்து என்ன? வதிவிட உரிமை அல்லது அகதி அந்தஸ்து பெற்றவர்களாக பெரும்பாலானோர் உள்ளனர். சொற்பமானோர் அந்நாடுகளின் குடியுரிமை பெற்றுள்ளனர். குடியுரிமை பெற்றவர்கள் குடியேறிய அல்லது அந்நிய (immigrant or alien) சிறுபான்மை என்ற வகைக்குள் அடங்குகின்றனர். தமிழர் குடிபுகுந்த நாடுகள் அனைத்தும் நடைமுறையில் தேசிய அரசுகளாகவே (nation state) உள்ளன. பிரதான தேசிய இனத்தைத் தவிந்த ஏனைய குடியேறிய சிறுபான்மை இனங்கள் எந்த நேரத்திலும் வெளியேற்றப்படும் அபாயம் உண்டு.

உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பு என்ற உயிர் வாழ்தலுக்கான விடயங்களில் வெளிநாடுகளில் ஓரளவு உத்தரவாதம் உண்டு. கல்வி, மொழி, நாகரிகம், பண்பாட்டு விழுமியங்களைப் பேணுதல், எமது தனித்த தேசிய அடையாளங்களை நிலைநிறுத்தல், முன்னேற்றம், நிரந்தரம், ஆன்மீக வளர்ச்சி, சந்ததியின் தொடர்ச்சி போன்ற விடயங்களைப் பார்த்தோமென்றால், இவற்றிற்கு உத்தரவாதம் இல்லை. இவை காலகதியில் மந்தமடையலாம்; இறுதியில் அழிந்து விடலாம்.

தமிழீழத் தேசியப் பாதுகாப்பு அல்லது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் என்றால் என்ன? ஒரு தேசிய இனத்தின் அடிப்படையான ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்கான போராட்டமே அதுவாகும். அதாவது ஒரு தேசிய இனம் தனது அடையாளங்களைப் பேணியவாறு, அன்றாட சுகமான வாழ்விற்கும் மேலாக நிரந்தர சமாதானத்திற்கும், பூரண பாதுகாப்பிற்கும், சந்ததியின் வளர்ச்சிக்குமான அடித்தளங்களை இடுதல் என்பதாகும். ஒரு தேசிய இனம் இவ் உன்னதத்தை அடைதலையே தேசிய விடுதலை என்கிறோம். எனவே ஒவ்வொரு தமிழ் மகனும், பூரண சுதந்திரமில்லாத தனது புகலிட அரசியல் அந்தஸ்தை உணர்ந்து கொண்டானேயாகில், அவன் நடக்கின்ற விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்வதைத்தவிர அவனுக்கு வேறு வழியில்லை என்பதைக் காண்பான். இதனை உணராத அப்பாவிகளையும் தமிழீழம் மன்னிக்கும். ஆனால் மரியாதை அளிக்காது.

**☒ இன்று தமிழீழத்தில் ஓரளவுக்காவது சாதியம் ஒழிக்கப்பட்டாலும், வெளிநாடுகளில் வாழும் நம்மவர் மத்தியில் இன்னமும் சாதிப் பேச்சு, சாதிவெறி சிறிது கூட ஒழியவில்லையே. இவர்களுக்கு மட்டும் என்ன விதிவிலக்கா, ஐரோப்பிய நாடுகளிலும் சாதி வெறியை ஒழிக்கவே முடியாதா? இது நடைமுறையில் சாத்தியமாகாத ஒன்று என்றே நான் நினைக்கின்றேன். உங்கள் பதில் என்ன என்பதை அறியத் தாருங்கள்.**

✎ விடுதலைப் போராட்டம் நடைபெறும் தமிழீழத்தில் சாதிய இறுக்கம் தளர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. முன்னேற்றம் அடைந்த மேற்கு நாடுகளில் வாழும் எம் மக்களிடத்தில் இது அதிகரித்துள்ளது. சாதிய அமைப்பானது விடுதலையடையாத, முன்னேற்றம் அடையாத சமூகத்தில் காணப்படும், ஒரு பகுதி இன்னொரு பகுதியைச் சுரண்டுவதற்கான வழிமுறைதான். வெளிநாடுகளில், சாதிய அமைப்பு முறையை எமது மக்கள் இறுக்கிப் பிடிப்பதானது இரண்டு விடயங்களை எடுத்துக் காட்டுகின்றது.

ஒன்று, வாழும் நாட்டின் பிரதான தேசியப் பண்பாட்டு ஓட்டத்தில் நாம் கலக்காது எமது தனித்துவங்களைப் பேண விரும்புகின்றோம் என்பதை இது காட்டுகிறது. இரண்டாவது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற வரலாற்று ஓட்டத்திலும் நாம் கலந்து கொள்ளவில்லை என்பதனையும் இது காட்டுகின்றது. ஆகவே நாம் இரண்டும் கெட்டான் நிலையில் நிற்கிறோம். இது ஒன்றுக்கும் உதவாத மந்த நிலை. ஆகவே சாதிய நீரோட்டம் எது? ஒடுக்குமுறை உட்பட்ட அனைத்து ஒடுக்கு முறைகளும் நீங்குவதற்கான சரியான பாதை எது? எமது விடுதலைக்கான தளம் எது என்பதை நாம் இப்போதே தெளிவாகத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

**☒ தமிழீழத்தில் விடுதலைப் புலிகளால் கைதாகியுள்ள தேசத்துரோகிகளின் விசாரனை முடிந்த பின் அவர்கள் ஜெயிலில் அடைக்கப்படுவார்களா? அல்லது அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுமா? மரண தண்டனை என்றால் அதற்கான காரணத்தைக் கூறவும்.**

**வசந்தன், பாரிஸ்.**

✎ தமிழீழத்தில் தேசத்திரோகிகள் என்று சந்தேகத்தில் கைதாகிறவர்கள் தீர விசாரிக்கப்படுகிறார்கள். எமது தேசத்தையோ, தேச விடுதலைப் போராட்டத்தையோ எதிரியுடன் கூட்டுச் சேர்ந்து காட்டிக் கொடுத்தவர்கள், போராட்டத்தின் பின்னடைவுக்கோ, தேசத்தின் பாதுகாப்புக்கோ குந்தகமாக இருந்தவர்கள், பொது மக்களினதோ, போராட்டத் தலைவர்களினதோ, போராளிகளிநதோ மரணங்களுக்குக் காரணமாக இருந்தவர்கள் என ஐயம் திரிபற நிரூபிக்கப்பட்டவர்களே தேசத் துரோகிகள் எனப்படுகிறார்கள். இவை அதி உயர் தண்டனைக்கு உரிய குற்றங்களாகும். இத் தண்டனை வழங்கப்படாமல் இருப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. அத்தகு குற்றத்தைச் செய்யாமல் விடுவதே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழத்தில் புதுவையுடன் சில நிமிடங்கள்

**தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்களை நேரில் சந்தித்ததில் மகிழ்ச்சி. மிகவும் சுறுசுறுப்பானவர். மிகக் குறைந்த காலத்திற்குள் பல பணிகளைச் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர். காலந்தாழ்த்தாது குறிப்பிட்ட நேரத்திற்கு வருவார். ஒரு பணி முடிந்தவுடன் அடுத்த ஒரு செயல்திட்டத்திற்கு புறப்பட்டு விடுவார். அதனால், அவரை இரண்டு தடவை சந்திப்பதற்கு முயற்சித்தும் முடியாமல், மூன்றாவது தடவையில்தான் கைகூடியது. அவரை நேரில் பார்க்கையில், ஒளியிழை நாடாப் பிரதிகளில் பார்க்கும் தோற்றத்திற்கும் அவரது வயதிற்கும் இடையில் நிறைய வித்தியாசம் உண்டு. தினம் வெற்றிலை போட்டு சிவந்துவிட்ட வாய், குழந்தைப் பார்வை, மிக இளகிய மனம், கலைஞனை கலைஞனாகவே மதிக்கும் தன்மை, ஒரே நேரத்தில் பலதை அவதானிக்கும் தன்மை, ஆழம் நிறைந்த கருத்துக்களை தனக்கே உரித்தான பாணியில் பேசும் தன்மை இப்படியாக, அவருடன் பழகும் எல்லோரையும் கவர்ந்துவிடுகிறார். அரசியல் பற்றியோ, இலக்கியம் பற்றியோ எந்தக் கேள்விக்கும் பதில் அவரது நாக்கு நுனியிலேயே இருக்கும். தேசியத் தலைவர் மீது அவர் கொண்டிருக்கும் அன்புக்கும், மதிப்புக்கும் அளவேயில்லை. அதில் ஒரு புனிதத்துவத்தையே காணமுடிந்தது. என்னுடன் கதைத்துக்கொண்ட அந்த சில நிமிடங்களின் பின்பு இரவு 11 மணியிருக்கும், அடுத்த ஒரு பணிக்குப் போவதற்காக தன்னை தயார் செய்துகொண்டிருந்தார். ஓய்வு இல்லாமல் எப்படி இவ்வளவு சுறுசுறுப்பாக, அன்பாக, சந்தோசமாக இருக்கமுடிகிறது என்று கேட்டபொழுது "எமது தேசியத் தலைவரின் வழி நடத்தலில் வந்தவை. நான் மட்டுமல்ல, தமிழீழத்தில் உள்ள ஒவ்வொரு பொறுப்பாளர்களுமே அப்படித்தான்" என்றார். தனக்கே உரித்தான அந்த புன்சிரிப்புடன் அவருடன் கலந்துகொண்ட அந்த நிமிடங்களை இங்கு நேர்காணலாகத் தருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

**தமிழீழத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

தமிழீழத்தில் இருந்து புலம் பெயர்ந்தவர்களை மூன்று நிலைகளாகப் பார்க்கலாம். முதலாவது நிலையிலே புலம் பெயர்ந்தவர்கள் தமது அடிப்படைப் பொருண்மிய மேம்பாட்டுக் காரணமாக, அல்லது மேற்படிப்பு காரணமாக மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, மொறீசியஸ் தீவுகள் போன்ற நாடுகளிற்கு என புலம் பெயர்ந்தவர்கள். இக்காலப் பகுதியில் புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வசதி படைத்த குடும்பத்தில் உள்ளவர்கள், அரசியல் செல்வாக்கு உடையவர்கள், சமூக மேம்பாட்டில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். இரண்டாவது நிலைப்பாட்டில் புலம்பெயர்ந்தவர்கள் தமிழ் மண்ணில், தமிழீழ மக்களுக்கெதிரான இராணுவ பயங்கரவாதம் அதிகரித்தபொழுது, இராணுவ தேடுதல்களிற்குள் மறைந்து வாழவேண்டிய சூழலில் புலம் பெயர்ந்தவர்களும், தமிழீழப் போராட்டம் தலைதூக்கி தமிழ் மண்ணுக்கான தற்கொடை உணர்வு முன்னெழுந்தபொழுது மாற்றுக் கருத்துக்களுடன் வெளியேறியவர்களும், இத்தகைய சூழ்நிலைகளை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு வெளியேறியவர்களும் அடங்குவர். மூன்றாவது நிலையில் தமிழீழத்தின் போராட்ட சூழலில் வாழ முடியாது தமது உடைமைகளை இழந்த நிலையில் தமிழீழத் தாயக மண்ணிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள். தாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில், நாம் தமிழீழ மக்கள், எமது தாய்மண் தமிழீழம் என்ற தேசியத்துவத்தையும் மறந்துவிடக்கூடாது. அத்துடன் எமது மண்ணின் விடிவிற்காக பங்களிக்கவேண்டும். எதிரியின் தமிழின அழிப்புகளை வெளிநாடுகளிலுள்ள அரசியல், சமூகப் பொதுநல தொடர்பு நிறுவனங்களிற்கு எடுத்து விளக்கி, எமது பாரம்பரியம், நாம் ஒரு தேசிய இனம் என மலர்ந்து வரும் தமிழீழத்திற்கு அங்கீகாரத்தைப் பெறவேண்டியது புலம்பெயர்ந்த மக்களின் கடமையாகும். எரித்திரிய நாட்டில் போராட்ட காலத்தில் அந்நாட்டிலிருந்து 40 சதவீதமான மக்கள் புலம் பெயர்ந்தனர். அவர்கள் தாம் இடம்புகுந்த நாடுகளில் எரித்திரிய நாட்டு மக்களின் விடுதலையை எடுத்துக்கூறி அதன் அங்கீகாரத்தை வலியுறுத்தியதுடன் தமது நாட்டின் விடுதலைக்காக ஒருமித்துப் பங்களித்தனர். இதுபோன்ற பணியை புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களும் செய்யவேண்டும்.

தமிழீழ தாயக மண்ணிலிருந்த புலம்பெயர்ந்து எமது மண்ணின் விடுதலையில் பங்குகொள்ளாது எதிரிக்கு வலையில் சிக்கி எமது மண்ணின் விடுதலையை மறந்தவர்களையே நான் எனது கவிதைகள் சிலவற்றின் மூலம் வருத்தியுள்ளேன். நான் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் அனைவரையும் எனது கவிதையூடாக வஞ்சித்து விட்டதாக அவர்கள் எண்ணிவிடக்கூடாது. மலர்ந்துகொண்டிருக்கும் தமிழீழம் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்கும் சேர்த்துத்தான்.

**தமிழீழப் போராட்டம் அனைத்துலக கவனத்திற்கு உட்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் தமிழீழத்தில் வாழும் முற்போக்கு எழுத்தாளர்களின் நிலைப்பாடு பற்றி உங்கள் கருத்து என்ன?**

அவர்களும் தமிழீழ மண் மீட்கப்பட வேண்டும் என்ற உணர்ச்சியில், இந்தப் போராட்ட சூழலில் அனைத்தையும் தாங்கி எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது வர்க்கப் போராட்டத்திற்குள் இருந்துகொண்டு தமிழீழம் மலரவேண்டும், தமிழ் இனம் அழிந்துவிடக்கூடாது என்ற உணர்வில் எம்முடன் நிற்கிறார்கள். எமது

www.tamileelamarchive.com

மண் மீட்புக்கான தியாகத்தை மதிக்கிறார்கள். நாமும் சோசலிசத் தமிழீழம் ஒன்றையே கட்டி எழுப்பு கின்றோம். அவர்கள் எழுதிய சமூக ஏற்றத் தாழ்வுகள், வேறுபாடுகளை நீக்கிய முற்போக்கு கருத்துக்களை எம்மிடம் காணும்பொழுதும் அவை நடைமுறையில் இயல்பாக செயல்படுவதைக் கண்டும் ஆதரிக் கிறார்கள். காலத்தின் வெளிப்பாட் டுக்கு அமைய இவர்களில் சிலர் முழுமையாக தம்மையே இனங் காட்டி எழுதியுள்ளனர்.

**தமிழீழத்திலிருந்து புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள், கலைஞர்களின் படைப்புக்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

எழுத்தாளன், கலைஞன் என்ப வர்கள் தாம் வாழ்ந்த காலத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி போன்றவர்கள். அவர்கள் தமிழீழ மண், தமிழீழ மக்களின் இன்றைய உண்மை நிலைகளை எடுத்துக் காட்ட வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் படைப்பாளிகள் தாம் புலம் பெயர்ந்த காலங்களில் இருந்த தமிழீழத்தின் நிலைமையை வைத்துக்கொண்டு இன்றைய தமிழீழத்தை கற்பனையில் வைத்து படைப்புக்களை உருவாக்கிவிடக் கூடாது. இன்று தமிழீழ மக்களின் மனநிலையில், அரசியலில், கலை பண்பாடுகளில் எவ்வளவோ மாற்றங்கள் உண்டு. புதியன புகுதல், பழையன கழிதல் என்பன தாராளமாக இடம்பெற்றுள்ளது. இந்த உண்மை நிலையை வந்து, பார்த்து சமூகத்தோடு ஒன்றிய இலக்கியங்களையே படைக்க வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் புகுந்துகொண்ட நாட்டில் அந்த மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் உண்மை நிலையைப் பற்றி எழுதவேண்டும். அவற்றை வெளிநாடுகளில் மட்டு மல்ல தமிழீழத்தில் உள்ள சஞ்சி கைகளிற்கும் அனுப்பவேண்டும். நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு ஐரோப்பிய நாடுகளில் நாடகம், நடனங்கள் உருவாக்கப் படுகின்றன. அவற்றின் தரத்துக்கு எமது படைப்புக்களைப் புலம் பெயர்ந்த நாடுகளில் கொண்டு வருவதுடன் அவற்றினூடாகத் தமிழீழச் மக்களின் விடுதலை உணர்வை வெளிநாட்டவர்களிற்கு எடுத்துக்காட்டவேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் கலை ஞர்களால் வெளிநாடுகளில் தயா ரிக்கப்படும் திரைப்படங்கள் கூட, நாட்டின் உண்மை நிலைமையை எடுத்துக்காட்டுவதாகவும், தமிழீழத் தின் போராட்ட காலத்திற்கு ஏற்ற கருவை உடையனவாக இருத்தல் வேண்டும். அது இன்றைய காலத் தின் தேவை. தமிழீழக் கலைஞர்க ளால் தயாரிக்கப்படும் ஆக்கங்கள்,

## 'வெட்டிரும்புச் சுப்பர்' விழாவில் இன்று பட்டிமன்றம்

'கோத்திவயல் அம்மன்' கொடியேறி
இன்று பத்தாம் திருவிழா -
பகலிரவு இரு பொழுதும்
'வெட்டிரும்புச் சுப்பர்' விழா உபயம்
இரவுக்கு
'பட்டி மன்றம்' என்று பத்திரிகையில் விளம்பரம்
'நரை விழுந்தால்... இருவரிலே யாரழகு?
திரைகடலைத் தாண்டிய சீதையா?
அல்லது
கரையாத கற்புடையாள் கண்ணகியா?'
இது தலைப்பு.
'நாவரசர் நல்லதம்பி' நடுவர்
ஒரு பக்கம்
'காப்பியத் திலகம் கனகசபை' தலைமையிலும்
மறு பக்கம்
'வாக்கிய கலாநிதி வடிவேலர்' தலைமையிலும்
பேசிடுவர்
சீதையணிக்கு மூன்று பேர் வாதிடுவர்
கண்ணகிக்காய் வாதிடவும்
மூவர் வருகின்றார்
பிறகென்ன
'அறிவுத் திலகங்கள்' அனல் மூட்ட
செந்தமிழ்த் தீ
பொறிபறந்து அந்தப் புழுதி வயல் தீப்பிடிக்கும்
சீதைக்கு என்ன நிறச்சேலை அழகென்றும்
வாதிடுவர்
கண்ணகியின் காற்சிலம்பு செய்த கடைப்
பேரதையும் சொல்லிப் பேசிடுவர்
பகிடியெல்லாம்
விடுவர் நடுவர்
விடியும் வரை கேட்டாலும்
அலுக்காது
அப்படியோ 'அறிவுக்கடல்' அமிர்தம்?
வசந்த மண்டபத்து வாசலிலே
'வடிவழகி'
இருந்தபடி கேட்டு இன்புறுவாள்,
வீதியெல்லாம்
குவிந்து ஊர்ச்சனங்கள் குதூகலிப்பர்
செந்தில் - கவுண்டமணி திரைப்படத்தைப்
போலயிது
சந்தோசமான சமாச்சாரம்
இம் மண்ணில்
போர் நடந்தாலென்ன? 'புலி'யிறந்தால் நமக்கென்ன?
வேரறுந்தாலென்ன?
வீடிழந்து மக்களெல்லாம்
ஆவி கலங்கி அலைந்தாலும் நமக்கென்ன?
காவியமே பெரிது
கண்ணகியே கற்பரசி
சீதையவள் தானே திருச்செல்வி
மேடையிலே
வாதிடலே எமக்குரிய வரலாற்றுக் கடமை
ஆதலினால்
கட்டாயம் பட்டிமன்றம் காணல் புண்ணியமாம்
எட்டு மணிக்கே எழுந்தருள்வீர் ஜெகத்தீரே!

- புதுவை இரத்தினதுரை

www.tamileelamarchive.com
தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழீழ ஆவணக் காப்பகம்

## கட்டிட நிர்மாணத்தில் உள்ளூர் மூலப்பொருள் பயன்பாடு

முற்றிலும் உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, மாதிரிக் கட்டிட அமைப்பொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினர் நல்லூர் காட்சியகத்தில் அமைத்திருந்தனர்.

மிகவும் அழகுற அமைக்கப்பட்ட அக்கட்டிடம் உள்ளூர் சுண்ணாம்பினாலும், செங்கற்களினாலும் கட்டப்பட்டதுடன் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஓட்டினால் வேயப்பட்டுள்ளதுடன் அவற்றின் கதவுகள், யன்னல்கள் என்பன மிகவும் கவர்ச்சிகரமான முறையில் வன்னிப்பகுதியில் உற்பத்தியாகும் பிரம்பினால் ஆக்கப்பட்டிருந்தன.

உள்ளூர் கட்டுமானப் பொருட்களை பயன்படுத்தி கட்டப்பட்ட இக் கட்டிட அமைப்பை பெருமளவு மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்

இனி வரும் காலங்களில் உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி கட்டிடங்கள் அமைக்கும் முயற்சிகளில் மக்கள் ஆர்வம் காட்டத் தொடங்கும் வண்ணமாய் இக்கண்காட்சி அமைந்திருந்தது.

---

தமிழீழக் கலைஞர்களது முத்திரையைப் புலப்படுத்தல் வேண்டும்.

**● சங்ககால இலக்கியம், சங்க மருவிய காலம், பல்லவர்கால இலக்கியங்கள் என்ற வரிசையில் 22-ம் நூற்றாண்டின் பிற்பகுதி தமிழீழப் போராட்ட இலக்கிய காலமாக அமையும் என்ற கருத்துப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர்கால இலக்கியங்களில் நாட்டின் ஆளுமையை, நாட்டின் வீரத்தை தனிமனிதன் இலக்கியமாகவே எழுதியுள்ளனர். மன்னனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஆட்சிக்கால மன்னனின் வீரமும், சிறப்புக்களும் போற்றப்படும் தனிமனித இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. ஆனால், தலைவர் பிரபாகரன் காலம் அப்படியல்ல. மண்ணுக்கு விலை கொடுத்த அனைவரும் போற்றப்படவேண்டும் என்பதே அவரின் விருப்பம். தான் வாழ்ந்த காலத்தின் போராட்ட வரலாற்றில் தமிழீழ மண்ணுக்காக அர்ப்பணித்தவர்கள் அனைவரும் போற்றப்படவேண்டும். அவர்களின் தியாகங்கள் எழுதப்படவேண்டும். அவர்களின் ஆளுமை, அவர்களின் செயல்பாடுகள் கலைவடிவங்களாக ஆக்கப்படவேண்டும் என்பதே அவரது கருத்தாகும்.

தமிழீழப் போராட்டத்தில் தமக்கிருக்கும் ஆர்வத்தையும் மண்மீட்புப் போரில் தமக்கிருக்கும் ஆவேசத்தையுமே ஒவ்வொரு போராளியும் வெளிக்காட்டுகிறான். ஆனால், அந்தப் போராளிகளிடம் மறைந்திருக்கும் திறமைகளை, ஆளுமைகளை எமது தலைவர் எப்படியோ கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்து விடுகிறார். அவற்றிற்கு ஆர்வம் கொடுத்து வளர்த்துவிடுகிறார். போராளிகளும் நல்ல படைப்புக்களைப் படைக்கிறார்கள். உதாரணமாக மலரவன் என்ற போராளியிடமிருந்து "போர் உலா" என்ற இலக்கியம் பிறந்தது. கஸ்தூரி, வானதி போன்றவர்களின் படைப்புக்கள். இத்தகைய இலக்கியங்களைப் பார்க்கும் பொழுதுதான் இவ்வளவு ஆளுமை அந்தப் போராளிகளிடம் இருந்திருக்கிறதே, இவர்களையா நாம் இழந்துவிட்டோம் என எண்ணத் தோன்றுகிறது. போராளி என்பவன் சமூகத்தை நேசிப்பன். தன் இனத்திற்கு ஏற்பட்ட அழிவைக் கண்டு அந்த இனத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பவன். குறிப்பாகச் சொல்லப் போனால், இவர்கள் தமிழீழத்தை தன் அளவில் அறிந்துவிட்டார்கள். இவர்களின் வர்ணனையில் போராட்ட காலத்துள் வேரூன்றிய தன்மை தெரிகிறது. அவர்களின் ஆளுமை அதற்கு மெருகேற்றுகிறது. மாவோசேதுங், சேகுவாரா, பிரபாகரன் ஆகியோரின் கருத்தும் அத்தகையதே. தமிழீழ மண்ணிற்கு விலைகொடுத்த அனைவரது திறமைகளையும் வெளிக்கொணரவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் விருப்பத்திற்கு அமைய "வளையாமண்" என்ற குறிப்பேடு வெளிவர இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் தமிழீழப் போராட்டம் இலக்கிய முக்கியத்துவம் பெறும் என்பது தெளிவு.

**● தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஐரோப்பிய நாட்டுக் கிளைகளின் செயற்பாடுகள், படைப்புக்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

அவர்களின் செயற்பாடுகள் எமக்கு திருப்திகரமானதாகவே இருக்கிறது. அவர்களின் படைப்புகள் சுயமானதாகவும், தரமானதாகவும் இருக்கின்றன. நாடகத்துறையில் வெளிநாட்டில் நல்ல தொழில் நுட்பங்கள் உண்டு. அவற்றை நாமும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டும். தமிழீழத்தின் உண்மை நிலைகளை தமிழீழ மக்களிற்கு மட்டுமன்றி ஐரோப்பிய மக்களுக்கும் எடுத்துக்காட்ட வேண்டும். ஐரோப்பிய நாடக அறிஞர்களுடன் இணைந்து எங்கள் படைப்புகளும் தயாரிக்கப்படவேண்டும்.

**● தமிழீழ கலை பண்பாட்டுப் பொறுப்பாளராக இருக்கிறீர்கள். இந்தப் பாரிய பொறுப்பு பணிகளின் மத்தியிலும் தொடர்ந்து பல கவிதைகளை எழுதுகிறீர்களே, எவ்வாறு முடிகிறது?**

எனக்கு கொடுக்கப்பட்டுள்ள பணி கடினமானதும் பொறுப்பு வாய்ந்ததுமாகும். அவற்றின் மத்தியிலும் நான் கவிதைகளை படைக்கிறேன் என்றால் அதற்கு எனது துணைவியார்தான் காரணம். நான் எழுதும் கவிதைகளைத் தொகுப்பது, பிரதிபண்ணுவது, என்னை எழுதத் தூண்டுவது, அது மட்டுமல்ல, எனது கருத்திலும் ஒருமித்தவர். என் இலட்சியத்திற்கு என்னுடன் வருபவர். அவரின் பணியும் இடம்பெறுகிறது. எனது முந்திய கவிதைகள் சிலவற்றில் இது பற்றிக் கூறியிருக்கிறேன். இன்று என் மனைவியையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கும்போது (சிரித்துக்கொண்டே) இது முகத்துதியாகிவிடுமோ என்று தோன்றுகிறது. எந்த ஒரு இலக்கிய படைப்பாளிக்கும் அவரின் ஆக்கங்கள் உருவாகுவதில் துணைவியாரின் பங்கும் உண்டு. அது இல்லையெனில் அவரின் ஆக்கங்கள் படைப்புக்கள் உருவாகுவதும், அவை துரிதமடைவதும் கடினம்.

★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# தமிழ் அச்சுப்புனைவின் இன்றைய நிலை

**கணணியில் தமிழ் மொழிப் பிரயோகம் எந்த நிலையில் இன்று உள்ளது என்பதையும், எவ்வாறான வாய்ப்புக்கள் உள்ளன என்பதையும், 'கணணியில் தமிழ்' என்ற இத் தொடர் கட்டுரை ஆராய முற்படுகிறது. தமிழ் மொழியில் கணணியானது வெளியீட்டுத் துறையினூடாகவே அறிமுகமாகின்றது. எனவே தமிழ் அச்சுப்புனைவு பற்றிய விடயங்களைத் தொட்டுச்செல்வதாக முதலாவது பகுதி அமைகிறது.**

**பேச்சும் எழுத்தும் மொழியின் இரு வடிவங்கள்**

பேச்சுக்கு 'இனிமை' போல், எழுத்துக்கு 'அழகு' அணியாக அமைகிறது. புதிதாய் ஒரு மொழியைச் செவிவழியாய்க் கேட்கும் ஒரு மனிதன் அதன் இனிமையால் கவரப்படுதலைப் போல அதன் அழகான எழுத்துக்களைப் பார்க்கின்ற பொழுதும் அம் மொழியின் பால் கவரப்படுகின்றான்.

எழுத்துக்களைக் கையால் அழகுற எழுதும் கலை அழகெழுத்தியல் (Calligraphy) எனப்படும். அச்சுக்களால் எழுதும் கலை அச்சியல் (Typography) எனப்படும்.

எழுத்துக்கள் சிறப்பாக அமைந்தாலே மனிதத் தொடர்பாடல் வளர்ச்சியடையும். மனிதனின் வாசிக்கும் ஆற்றல் இலகுவாக்கப்படும்.

அச்சு எழுத்துக்களைப் புனையும் அச்சுப்புனைவு (Type Design) அச்சியலின் அடிப்படையாகும். எழுத்துக்கள் எவ்வாறு புனையப்பட்டால் இலகுவாக அடையாளம் காணப்படும் தன்மையைக் (Legibility) கொண்டனவாக அமையும் என்பதையும், எழுத்துக்களின் வாசிக்கப்படும் திறனை (Readability) வேகப்படுத்தலாம் என்பதையும் பற்றிய விடயங்கள் அச்சுப் புனைவில் முக்கியமானவையாகின்றன.

எழுத்து கட்புலனோடு தொடர்புடையது. கட்புலன் பற்றிய அறிவும் எழுத்துக்களின் புனைவுக்கு அவசியமாகின்றது.

வாசித்தல் என்னும் பழக்கம் மனோதத்துவவியல் அறிஞர்களால் (Perceptual psychologists) ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கண்டறிந்துள்ள விடயங்களும் எழுத்துப் புனைவுக்கு அவசியமாகின்றன.

இதேபோல மொழியியல் ஆய்வுகளும் எழுத்துக்களின் தொகையிலும் அமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தத் தூண்டலாம்.




ஒரு மொழி எவ்வாறு கணணியில் பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் அம்மொழி எவ்வாறு கணணியில் பயன்படுத்தப்படும் போது இலகுவாக அமையலாம் என்பதையும் தீர்மானிக்கும் இயற்கை மொழிகளைக் கணணியில் பயன்படுத்தும் முறைகள் பற்றிய கணணி அறிவியலும் (Natural Language Processing in Computers) முக்கியமானதாகிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற பொழுது மரபு அச்சுப்புனைவு தொடக்கம் கணணி அறிவியல் வரை பல துறைகள் சார்ந்த அறிவினை வேண்டி நிற்பதாக நவீன அச்சுப்புனைவு உள்ளது.

ஆய்வுசார் அறிவு மாத்திரம் சிறந்த அச்சுக்களை உருவாக்கப் போதுமானதாகாது. எழுத்துக்களின் கலைத்தன்மை மிகவும் முக்கியமானது. சிறந்த அச்சுக்களை ஒரு கலைஞனால் மாத்திரமே உருவாக்கமுடியும் என்பதே அச்சியல் வரலாறு கண்ட பட்டறிவாக உள்ளது.

ஆங்கிலத்தில் எட்டுவிதமான அச்சுவடிவுகளை (fonts) கொண்ட ஓர் அச்சுமுகக் குடும்பத்தை (Type-face family) கணணிகளுக்காகத் தயாரிப்பதற்கு ஐம்பதாயிரம் அமெரிக்க டாலர்கள் வரை செலவிட வேண்டியுள்ளதாகக் கணிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு வேண்டிய காலம் பல மாதங்களிலிருந்து பல வருடங்கள் வரை நீடிப்பதாகவும் உள்ளது.

ஒப்பீட்டளவில் தமிழில் ஆங்கிலத்தை விடவும் எழுத்துக்கள் எண்ணிக்கையில் அதிகம். எனவே ஆங்கிலத்தில் காணப்படுவதைப் போன்ற தரமான எழுத்துக்களைத் தமிழிலும் தயாரிப்பதற்குக் கூடிய காலமும் பொருட் செலவும் தேவைப்படும்.

ஆங்கிலத்தில் அச்சுமுகங்கள் ஆயிரக்கணக்கான விதங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கணணிகளில் மாத்திரம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விதமான அச்சுமுகங்கள் உபயோகத்திலுள்ளன. மேற்கு நாடுகளின் அச்சகங்களில் சாதாரணமாக இருநூறுக்கும் மேற்பட்ட அச்சுமுகங்களைக் காணமுடிகிறது. இவற்றில் Helvetica, Palatino, Times ஆகியவற்றைக் கணணிகளை உபயோகிக்கும் அனைவரும் இன்று அறிந்தவர்களாக இருக்கிறார்கள்.

தமிழிலோ விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய அச்சுமுகங்களே காணப்படுகின்றன.

இன்று, கணணிகளில் புதிய தமிழ் அச்சுமுகங்கள் சில உருவாக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றில் பெரும்பாலானவை அச்சுப்புனைவின் முக்கிய அம்சங்களைப் புறக்கணித்து அமைக்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன. தமிழில் காணப்படும் தரமான மரபு அச்சுக்கள் கூட கணணிகளுக்கான மீள் புனைவின் போது புண்படுத்

www.tamileelamarchive.com

தப்பட்டுள்ளன. இந்நிலைக்குக் காரணம் அச்சியல் பற்றிய அறிவு வறுமையே ஆகும்.

ஆங்கிலத்தில் போல மிகுந்த பொருட் செலவில் தமிழிலும் கணணிக்கான அச்சுக்களைத் தயாரிப்பதற்கு அச்சுப்புனைவினை மேற்கொள்ளும் உலகின் முன்னோடி நிறுவனங்களில் யாதேனும் முன்வருமா என்பது ஐயமே. ககூநூச் பட்சிக் போன்ற உலகளாவிய நிறுவனங்கள் ஆங்காங்கே சில முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் பெரும் பொருட் செலவில் தரமான அச்சுக்களைப் புனைவது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு புனைவுகளை வெளிக்கொணர்வதற்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

தனியாட் கணணியில் Fontographer, Font Studio அல்லது Ikarus M போன்ற கணணி நிகழ்ச்சித் தொகுப்புக்களைக் (Program-mes) கொண்டு எழுத்துக்களைத் தயாரிப்போரில் மாத்திரமே தமிழ் அச்சுக்களின் எதிர்காலம் தங்கியிருப்பதாகத் தெரிகிறது. இதனை உணர்ந்தவர்களாக, துறைசார் அறிவினைப் பெறுவதன் மூலம் தரமான தமிழ் அச்சுக்களைப் புனைவதற்கு தமிழ் அச்சுப்புனைவாளர்கள் முயற்சி செய்யவேண்டிய தேவை உள்ளது.

அச்சியல் ஒரு பரந்த துறையாகும். ஆனால், தமிழில் இது அச்சகத்தோடு நின்றுவிடும் கலையாகவே இருக்கிறது. மரபு அச்சியலில் உலோகத்திலான அச்சுவார்த்தலை (punch cutting) மேற்கொள்ளும் உலோக வேலையாளரே அச்சுப் புனைவாளராகவும் (Type designer) காணப்படும் இந்நிலை மேற்குலக அச்சியலோட்டு ஒப்பிடுகையில் முன்னூறு ஆண்டுகள் பின்தங்கியதாகும். இந்தக் காலப்பகுதியில் மேற்குலக அச்சியலில் எவ்வாறான மாற்றங்கள் நடந்தேறியுள்ளன என்பதையும், அச்சுக்களின் பன்முகப்பட்ட கலைத்தன்மையையும், அவற்றின் வகையீடுகளையும் நோக்குகின்றபோது நாம் முன்னேற்றவேண்டியுள்ள தமிழ் அச்சியலின் கனபரிமாணம் நன்கு புலனாகும்

கணணிகள் அச்சியற்றலுக்கு மட்டுமன்றி பல துறைகளிலும் பயன்ப ஆகவே கணணிகளில் தமிழ் மொழியை இலகுவாகவும் திறமையாகவும் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் அமைத்துக் கொள்ளவேண்டியது முக்கியமானதாகிறது. எனவே, தமிழ் மொழியைக் கணணியில் இலக பிரயோகிக்கக்கூடிய முறைகளைக் கண்டறிந்து அறிமுகப்படுத்துவதில் அச்சியற்றுறைசார்ந்தோரின் பங்கு கணிசமானது.

தமிழ் எழுத்துக்களைக் கணணியில் ஒழுங்குபடுத்தியுள்ள மொழிக் குறியீட்டு ஒழுங்குகள் (character encodings) பல விதங்களாக உள்ளன. இதனால் ஒரு கணணியில் எழுதிய ஒரு விடயத்தை இன்னொரு கணணியில் வாசிக்க இயலாமையும் ஒரு கணணியிலே ஓர் அச்சுமுகத்தைப் பயன்படுத்தி எழுதிய ஒரு விடயத்தை இன்னோர் அச்சுமுகத்திற்கு மாற்ற இயலாமையுமான நிலைமைகள் பெருமளவில் காணப்படுகின்றன. இவ்விடயத்தில் ஒரு சீர்மானம் (standard) எட்டப்படல் வேண்டும்.

தமிழில் தற்போதைய பயன்பாட்டில் தட்டச்சு இயந்திர விசைப்பலகை அமைப்பு (Type-

ஒரு புத்தகத்தின் அச்சுத் தரத்தை உயர்த்த மூல காரணமாக இருப்பது, அதற்கு உபயோகிக்கும் அச்செழுத்தின் வடிவமும், தன்மையும், தவிர அதைச் சாதுர்யமாகக் கையாளும் முறையும்தான். அச்செழுத்து வடிவங்கள் (Type-face) சம்பந்தமாக ஆராய்ந்து விவரிக்கும் "டைபோகிராபி" (Typography) என்ற பகுதி, அச்சுப் பொறியியலில் மிக முக்கியமான ஒரு பகுதி. ஆங்கிலப் புத்தகங்களின் அச்சுத் தரம் இன்று மிக உயர்ந்த நிலையில் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் உலோகத்தில் வார்க்கும் அச்செழுத்தைக் கண்டுபிடித்த 15-ம் நூற்றாண்டு முதற்கொண்டே அந்நாட்டவர்கள் ஆங்கில அச்செழுத்தின் வடிவத்திலும், அமைப்பிலும் (Type face and Type design) மிக்க அக்கறை கொண்டு அதைப் பேணி வளர்த்தார்கள். இதற்கு ஆங்கில எழுத்துக்களின் எளிய அமைப்பும், குறைவான எண்ணிக்கையும் சாதகமாக இருந்தாலும், முதலிலிருந்தே இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டதால்தான், அச்செழுத்தின் வடிவங்கள் வளர்ச்சி அடைந்து என்று கூறலாம். இருபத்தாறு எழுத்துக்களை மட்டுமே வைத்துக்கொண்டு, இது வரை, ஆயிரக்கணக்கான எழுத்து வடிவங்களை ஏற்படுத்தி ஒரு இந்திரஜால வித்தையையே செய்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். மேலும், அவைகளை உபயோகிப்பதிலும் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு கையாண்டு, அவைகளின் பயனை ஆராய்ந்து, புத்தகத்தின் அச்சுத் தரத்தை உயர்த்த சில அழுத்தமான வழிமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்

"கடந்த ஐந்நூறு ஆண்டுகளில் புதிய அச்சு இயந்திரங்கள், அச்சுக் கோர்க்கும் இயந்திரங்கள், புதிய அச்சியல் முறைகள் கண்டுபிடிக்கும் போதெல்லாம், கூடவே இவைகளுக்குத் தக்கவாறு அச்செழுத்து வடிவங்களிலும் தேவையான மாறுதல்களைச் செய்வதுடன் புதிய வடிவங்களையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இன்றும் தொடர் முயற்சியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பகுதியை ஒரு அரிய கலையாகவும், விஞ்ஞான ரீதியிலும் வளர்த்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. இப்பகுதி தமிழ் அச்செழுத்துக்களைப் பொறுத்த வரை, இதுவரை அதிக கவனம் செலுத்தப்படாத, இனி தாமதியாது கவனம் செலுத்தப்படவேண்டிய ஒரு பகுதியாகும்."

---

**"வரும் பத்தாண்டுகளில் தமிழ் புத்தக வெளியீடு" என்ற தலைப்பில் 1977-ம் ஆண்டு சென்னையில் தமிழ் புத்தக வெளியீட்டுத்துறை பற்றி Nationl Book Trust நடாத்திய கருத்தரங்கொன்றில் வி. எஸ். கிருஸ்ணமூர்த்தி - முன்னாள் முதல்வர், பிராந்திய அச்சுக்கலைப் பயிற்சிப் பள்ளி, சென்னை; வந்துபோகும் விரிவுரையாளர், பாரதீய வித்யா பவன், Institute of Mass Communications, சென்னை.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


writer keyboard layout) ஒன்று உள்ளது. அதில் விசைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள முறையானது விரைவான அச்சியலிற்கு உகந்த தாக அமையவில்லை. கணணிக ளில் சிலர் இதைப் பின்பற்றுகின் றனர். வேறு சிலர் புதிய சில முறைகளை அறிமுகப்படுத்தியுள் ளனர். அனைத்து முறைகளும் பல பின்னடைவுகளைத் தம்மகத்தே கொண்டவையாகவே காணப்படு கின்றன. எதைச் சீர்மானப்படுத் துவது என்பது பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது. ஆனால் இதுபற்றி விவாதமே இதுவரை எழுந்ததாகத் தெரியவில்லை. எதனை, எவ்வாறு சீர்மானப்படுத் துவது என்ற சிக்கலுக்கு முன்ன தாக யார் சீர்மானப்படுத்துவது என்பது குறித்த தெளிவான பார்வையும் அவசியமாகிறது.

தனியாட் கணணிகளில் அச்சுப் புனைவினை மேற்கொள்வோரின் கைகளிலேயே தமிழ் அச்சியலின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை உணர்ந்துகொள்ளும் வேளை அச்சுக்களை வாங்கிப் பயன்படுத் துவோரின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டவேண்டிய அவசியம் எழுகின்றது. கணணிகளுக்கான தமிழ் எழுத்துக்களைத் 'திருட்டுத்த னமாக' பிரதிசெய்து கொள்ளும் பழக்கம் பரவலாகக் காணப்படு கின்றது. Software piracy எனப்படும் திருட்டுத்தனமான கணணி எழுத் துக்களைப் பிரதிசெய்யும் செயற் பாடு அச்சுப்புனைவாளர்களின் முயற்சியைக் கடுமையாகப் பாதிக் கிறது என்பதை உணராதவர்களா கவே பலர் காணப்படுகின்றனர். அச்சுப்புனைவு பற்றிய அறிவையும் அனுபவத்தையும் பெற்று தனது கலைத்திறமையூடாக ஒரு புதிய அச்சுப்புனைவை ஒரு கலைஞன் உருவாக்குவதென்பது கணணிகளுக் கான தமிழ் அச்சுப் புனைவினை மேற்கொள்ளும் அச்சுப்புனைவா ளன் போதிய பொருளாதார வருவாயை பெற்றுக்கொள்ளமுடி யாத நிலையில் புதிய புதிய அச்சுப் புனைவுகளை தொடர்ச்சி யாக வெளிக்கொணர முடியாதவ னாகிவிடுகிறான்.

கணணியில் தமிழ் அச்சுப்புனை வினை மேற்கொள்ளும் அச்சுப்பு னைவாளர்கள் தமிழ் மொழியின் கணணிப் பிரயோகத்தில் தாம் வகிக்கும் முக்கிய பங்கினை உணர்ந்துகொள்வதோடு மரபு அச்சியல் தொடக்கம் கணணிக ளில் இயற்கை மொழியை பயன் படுத்துதல் பற்றிய கணணி விஞ் ஞானத் துறை வரை பல்துறை சார்ந்த அறிவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதேவேளை தமிழ் அச்சுக்களைப் பயன்படுத் தும் நாம் ஒவ்வொருவரும் கண ணியில் தமிழ் மொழியின் பிரயோ கத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றியும் சிந்திக்கத் தொடங்கிடவேண்டும்.

கணணியில் நாம் பயன்படுத் தும் பல்வேறுபட்ட தமிழ் விசைப் பலகை முறைகளின் பின்னடை வுகள் என்ன, தமிழ் எழுத்துக்க ளைக் கணணியில் ஒழுங்குபடுத்தி யுள்ள பல்வேறு மொழிக்குறியீட்டு ஒழுங்குகளினால் ஏற்பட்டுள்ள தொடர்பாடற் சிக்கல்களை எவ் வாறு தீர்க்கலாம் என்பன குறித்து கணணியில் தமிழ் மொழிப் பிர யோகம் பற்றிய விடயங்களில் ஈடுபாடு கொண்டவர்கள் சிந்தித் திட வேண்டும்.

**பிற்குறிப்பு:**

1. புதிய சொற்பதம்

2 Steve Byers, The Developement of Type technology: The Electronic Type Catalog, International Typeface Corporation (ITC) 1992.

3. தனியாட் கணணி என்ற சொற்பதம் Personal Computer என்ற ஆங்கிலச் சொற்பதத்தின் தமிழாக்க மாக தமிழீழத்தில் இருந்து வெளி வரும் உலக உலா சஞ்சிகையின் தட்டுரைகளில் பயன்படுத்தப்படு கிறது. இக்கட்டுரையில் தனியாட் கணணி என்பது சகலவிதமான தனியாட் கணணிகளையும் குறிப் பதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. PC என்பது ஒருவகைக் கணணி யைக் (IBM compatible) குறிப்பிடும் பொருளில் வழக்கில் இருப்பதால் Micro computer என்னும் சொல்லை பொருத்தமான ஆங்கிலச் சொல் லாகக் கொள்ளலாம்.



அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்ற உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் 5வது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட மக்கள்






www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

# முல்லை மாவட்டத்தில் விலங்கு வேளாண்மைத்துறை அபிவிருத்தி

**கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள் பண்ணையாளர்களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் சேவை நிலையங்களை மாவட்ட மடங்கிலும் அமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

**ச. ந. சந்திரசேகரன்**

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் போர்த்திறனிலும் சரி கலைபண்பாட்டுத்துறையிலும் சரி சமூக பொருண்மியத்துறையிலும் சரி தன்னகத்தே பெரும் வரலாற்றுப் பெருமை கொண்ட பிரதேசமாகவும் கடின உழைப்பாளிகளை கொண்ட பிரதேசமாகவும் விளங்கும் முல்லை மாவட்டம் விவசாயம், விலங்கு வேளாண்மை ஆகிய இரு துறைகளையும் தனது இரு கண்கள்போல் கொண்டுள்ளது. இங்குள்ள மக்களின் வருவாயைப் பெருக்கும் துறையாகக் காணப்படுகிற இவ்விரு துறைகளையும் அம்மாவட்ட மக்கள் தமது கடின உழைப்பால் மேம்படுத்தி வந்தனர். ஆனால் சிறீலங்கா அரசின் இனவாத அரசியல் போக்கின் காரணமாகவும் இந்திய வல்லாதிக்க போர் நடவடிக்கை காரணமாகவும் இப்பகுதி மக்களின் பொருளாதாரம் சிதைவடைந்தன.

இந்த வகையில், விலங்கு வேளாண்மைத் துறையைப் பொறுத்தளவில், மிகவும் மேம்பாடான நிலையில் காணப்பட்ட தமிழீழத்தின் இதயப் பகுதியாக விளங்கும் மணலாற்றைக் கைப்பற்றுவதற்காக இந்திய, சிங்களப் படைகள் நடத்திய தொடர்ச்சியான ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளால் அப்பகுதி சிதைவடைந்தது. இதனால் இங்கு காணப்பட்ட விலங்கு வேளாண்மைத் துறையில் முக்கியம் பெறும் நல்லின காளை இனங்களான கிளாரி (காங்கேயன்) இன இழுவை மாடுகளும், நல்லின பசுக்கள், சூர்த்தி இன எருமை மாடுகள் ஆகியன கவனிப்பார் அற்று சிதறி ஓடின. மிதிவெடிகளில் அகப்பட்டு ஊனமுற்றன அத்துடன் கால் நடை உரிமையாளர்களும் பண்ணையாளர்களும் இடம் பெயர்ந்ததுடன் தம்முடன் இழுத்துச் சென்ற எஞ்சிய கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், மருத்துவ ஆலோசனை பெறல் என்பவற்றில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினர். மேலும் போக்குவரத்துச் சீரின்மையால் ஏற்பட்ட பால் மற்றும் விலங்கு வேளாண்மைத்துறை உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் பிரச்சனை போன்ற நிலைகளினாலும் வேறு பல காரணிகளாலும் மாவட்டதில் விலங்கு வேளாண்மைத்துறை மிகவும் பாதிப்படைந்தது இந்நிலையில் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் இவ்வாறான பொருண்மிய சமூகப் பின்னடைவுகளை நிவர்த்திசெய்யும் முகமாக மாவட்டத்தின் இத்துறையைப் புரனமைத்து எழுச்சியூட்டும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இதனடிப்படையில் நல்லின கால் நடைகளை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டதுடன் இருக்கின்ற கால்நடைகளை சிறந்தமுறையில் பராமரிக்கவென மணலாற்றுக் கோட்டத்திலும் முள்ளியவலையிலும் கால் நடை சுகாதாரசேவை நிலையங்கள் அமைத்து அங்கு அத்துறைசார் பயிற்சியாளர்களை நியமித்து அங்குள்ள பண்ணையாளர்களுக்கு இலவச ஆலோசனை வழங்கி கால் நடை வளர்ப்பை ஊக்குவித்து வருவதோடல்லாமல் தடுப்பூசி போடல், சிறு சிகிச்சை வழங்கல் என்பனவும் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் கால்நடை சுகாதார திணைக்களங்களூடாக கால் நடைகளுக்கு தேவையான மருந்துகள் பண்ணையாளர்களுக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் சேவை நிலையங்களை மாவட்ட மடங்கிலும் அமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் பண்ணையாளர்களிடையே மிக நீண்டகாலமாகக் காணப்பட்ட சந்தைப்படுத்தல் பிரச்சனையை நிவர்த்திசெய்யும் முகமாக குமுழமுனையில் நெய் உற்பத்தி நிலையம் திறக்கப்பட்டு அங்கு பால் கொள்வனவு இடம் பெற்று வருவதுடன் நெய் நீக்கிய பால் சுவையூட்டப்பட்டு பிற

## முல்லை மாவட்டத்தில் நெய் உற்பத்தி

**முல்லை மாவட்டத்தில் குமுழமுனை, ஒட்டுசுட்டான், ஆகிய இடங்களில் நெய் உற்பத்தி செய்யும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.**

**வன்னி பெருநிலப்பரப்பில் கிடைக்கும் பாலை உச்சப்பயன் பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கத்தில் பால் சந்தைப்படுத்தல், பதனிடல், சிந்துபால் வெல்ல உற்பத்தி போன்ற பல்வேறு திட்டங்களில் ஒன்றாகவே இந் நெய் உற்பத்தித்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.**

**பொதுமக்களிடமிருந்து ஒரு லீற்றர் பால் ஏழு ரூபா விலையில் கொள்வனவு செய்யப்பட்டு ஆடைபிரி கருவி மூலம் ஆடை பிரிக்கப்பட்டு, ஆடை நீக்கிய பால் தகுந்த முறையில் போத்தலில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் ஆடை உருவாக்கப்பட்டு நெய்யாக்கப்படுகிறது. இந்நடவடிக்கையின் மூலம் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. அத்தோடு அங்கு நிலவும் வேலை வாய்ப்பின்மை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டும் வருகிறது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படும் பால் குறைவான இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் இத்திட்ட விரிவாக முயற்சியாக மேச்சற்கரை திட்டங்கள் நல்லின புல் வளர்ப்புகள் என்பன செயற்படுத்தப்படுகின்றன. இதற்கென முல்லைமாவட்டம் பேராற்றுக்கரையில் மேற்கொள்ளப்பட்ட படீட்சார்த்த புல் வளர்ப்பு திட்டம் பெருவெற்றி அடைந்ததைத் தொடர்ந்து நல்லின புல் வகைகளான, நேப்பியர், கினீடி என்பன பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு அவற்றைப் பெருக்குவதுடன் குளக்கரைகள், நீரேந்து, பிரதேசங்கள் வாய்க்கால் கரைகள் ஆகிய பொது இடங்களிலும் இப்புல் வளர்ப்பு சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்தினூடாக பன்றி, முயல், மாடப்புறா, சிறிய இன கோழி, ஆடு, குதிரை, வான்கோழி ஆகிய அருகிவரும் இனங்களை வளர்த்து இனவிருத்தி செய்வதோடு பொது மக்களையும் இக் கால்நடை வளர்ப்பில் ஊக்குவிப்பதற்காக கோழிக்குஞ்சு வினியோகங்கள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறாக நல்லின கால்நடைகளை அழிவிலிருந்து கட்டுப்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இறைச்சிப் பரிசோதனை முறைகள், திட்டமிட்ட விலங்கு வேளாண்மைத்துறை மேம்பாட்டிற்கான கால்நடைகளுக்கு இலக்கமிடல் திட்டங்கள், நோய் தடுப்பிற்கான விரைவான நடவடிக்கைகள், மேச்சற் தரைத்திட்ட விரிவாக்கம் என்பவற்றுடன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைத்தல் மூலமான சேவைகள் மூலம் முல்லை மாவட்டம் விலங்கு வேளாண்மைத் துறையில் பாரியதொரு வளர்ச்சிப் பாதையில்சென்றுகொண்டிருப்பதுடன் எமது தமிழீழ தேசத்தின் தற்சார்புப் பொருண்மிய வளர்ச்சிக்கு மாவட்டமும் இத்துறையும் பாரிய பங்கை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

*நன்றி: ஆதாரம்*


# புதிய ரக எண்ணெய் விதையிலிருந்து எரிபொருள் சக்தி உருவாக்கல்

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது (TEEDOR) நீண்டகால நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்களையும் தற்போதுள்ள போர்ச்சூழலில் சுய தேவையினைப் பூர்த்தி செய்யக் கூடிய குறுகிய காலத் திட்டங்களையும் உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றது.

சிறீலங்கா இனவாத அரசு எமது தேசத்தின் மீது பொருளாதாரத் தடையினை ஏற்படுத்தி எமது மக்களின் அன்றாட வாழ்க்கையை ஜீவமரணப் போராட்டமாக்கியுள்ளது.

இப் பொருளாதாரத் தடையினை உடைத்து இத் தற்காப்புப் பொருண்மியத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக ஒரு வகை எண்ணெய் விதை (RAPE SEED) இலிருந்து எரிபொருள் / சக்தி உருவாக்கும் ஆய்வினை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இவ் விதையினை (RAPE SEED) பயிரிடும் / பயன்படுத்தும் வெளிநாடுகளில், பயிரிடுவதற்கான மண்வகை, பயிரிடப்படும் முறை, விதையின் உறங்கு நிலை போன்ற தகவல்கள் திரட்டப்படுகின்றன. அத்தோடு இவ் விதையிலிருந்து எரிபொருளை / சக்தியைப் பெறும் வழிமுறைகள் (Processing) தொடர்பாக:

விசேட அனுபவமுள்ளவர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

எமது தேசம் எமது சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம்.

தொடர்புகட்கு: **TEEDOR**

P.O.Box 6795,
London E6 1SB, U.K.
Tel: 0956 314370 V 0181 -503 4294
Fax: 0181 - 470 8593.


## தமிழீழ நிர்வாகசபைப் பொறுப்பாளர் டொமினிக் அவர்களின் உரையிலிருந்து..

**எமது போராட்ட காலத்திலேயே, சகல துறைகளிலும் சமாந்திரமாக முன்னேறிச் செல்ல வேண்டியிருக்கிறது. இம்முன்னேற்றத்திற்கு சிறீலங்கா அரசின் இறுக்கமான பொருளாதாரக் கட்டுப்பாட்டினால் மந்த நிலையடைந்துள்ள எமது பொருளாதாரமும், மூலவளப்பயன்பாடும், மானுட மூலவளமும், முகாமைத்துவ நிர்வாக நடைமுறைகளும் மீண்டும் புத்துயிர் கொடுக்கப்பட்டு மரபுசார்ந்த தொழில்நுட்பத்திற்கு மீண்டும் செல்லாது பொருத்தமான தொழில் நுட்பங்களோடு வலுப்பெறக் கூடிய பொருளாதாரக் கட்டமைப்பொன்றை கட்டியெழுப்ப வேண்டிய அவசியமும் அவசரமும் எழுந்துள்ளது. இதற்கு இங்குள்ள பொறியியலாளர்கள், பொருளியியலாளர்கள், சமூகவியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிர்வாகிகள் தங்களை இக் கைங்கரியத்தில் ஆளாக்கிக் கொள்ளவேண்டிய அர்ப்பணிப்புத் தேவையாக உள்ளது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வைத்தமும் வர்த்தமும்

பிரம்மஞானி

இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. இரண்டாவது தடவையாக, உலகத்து மனிதர்கள், தமக்குள் பெரும் போர்செய்து, பெருமளவு இரத்தம் சிந்தி, தமக்குத் தாமே பேரழிவை ஏற்படுத்தி, அந்தப் பெரும் சிதைவுகளிலிருந்து ஒரு புதிய உலக ஒழுங்கைக் காட்டினார்கள். பூமியை ஆளுவதற்கு ஆசைகொண்ட நாசிச அரக்கன் களத்தில் மடிந்து போனான். அவனது புதைகுழியிலிருந்து இரு பெரும் வல்லாதிக்கப் பூதங்கள் பிறப்பு எடுத்தன. புதிய உலகமைப்பு இந்தப் பூதங்களின் கையில் வீழ்ந்தது. இந்த இருபெரும் வல்லாண்மை சக்திகள் மத்தியில் பிடுங்குப்பட்டு, இரண்டாகப் பிளவு கண்டது ஐரோப்பியக் கண்டம்.

கிழக்கு ஐரோப்பாவை ரஷ்ய கம்யூனிசம் விழுங்கிக்கொண்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக மாறியது மேற்கு ஐரோப்பா. உலகத்தை உலுப்பிய உலக யுத்தம் முடிந்த போதும் ஐரோப்பிய மனிதனின் அடிமை வாழ்வு முடியவில்லை. அவன் ஒரு சிறையிலிருந்து மீட்கப்பட்டு இன்னொரு சிறைக்குள் தள்ளப்பட்டான்.

யுத்தம் முடிந்த காலகட்டத்தில், அன்றைய அரசியல் சூழ்நிலையை இப்படித்தான் எடைப்போட்டார் சாத்தர். ஐரோப்பிய கண்டத்திற்குள் அவரது பார்வை அன்று முடங்கிக் கிடந்தது.

ஐரோப்பிய மனிதனை வரலாறு இன்னும் விடுதலை செய்யவில்லை. அவனைச் சூழ, நாலாபுறமும் ஆதிக்கச் சுவர்கள் எழுந்து நின்றன. அதன் நடுவே, நகரமுடியாதபடி, அவன் விலங்கிடப்பட்டுக் கிடந்தான். முதலாளியமும் கம்யூனிசமும் ஐரோப்பிய பாட்டாளியை அடிமைகொண்டு நின்றன. முதலாளியம் மனிதத்துவத்திற்கு விரோதமானது. அது மானிடத்தின் இரத்தத்தைக் குடித்து வளர்கிறது. மனித படைப்பாக்க சக்தியை பண்டமாக்கி, பணமாக்கி வாழ்கிறது. மனிதத்தின் சாரத்தை பொருளுலகில் புதைத்துவிடுகிறது. கம்யூனிசம் என்ற உன்னத எண்ணக்கரு, ரஷ்ய மண்ணில் வேதாள வடிவம் எடுத்திருக்கிறது. மார்க்சின் சமத்துவ தத்துவம், ஸ்டாலினிச சர்வாதிகாரமாக பிறழ்ச்சி கண்டிருக்கிறது. அது மனித சுதந்திரங்களை ஏப்பம்விட்டு வருகிறது. ரஷ்ய கம்யூனிசத்தையும், அமெரிக்க முதலாளித்துவத்தையும் கடுமையாகச் சாடினார் சாத்தர்.

ஒரு புதிய ஐரோப்பாவை சாத்தர் கனவு கண்டார். ஆதிக்க சக்திகளின் அதிகாரப் பிடியிலிருந்து ஐரோப்பிய சமூகம் விடுதலை பெறவேண்டும். ஒரு சுதந்திரமான, சமத்துவமான, உண்மையான சோசலிச சமூகமாக ஐரோப்பா மாறவேண்டும். ஒரு புதிய வரலாற்றுப் பாதையில், புதிய யுகத்தை நோக்கி ஐரோப்பிய மனிதன் முன்னேறிச்செல்ல வேண்டும். இப்படியான ஒரு இலட்சியக் கனவு கண்டார் சாத்தர். உலகப்போர் ஓய்வுகண்ட அன்றைய காலகட்டத்தில், சாத்தரின் அரசியல் ஈடுபாடும் எழுத்தும் இந்த இலட்சியத்தின் அடிப்படையில் அமைந்தது.

தனது புதிய பார்வைக்கு களம் அமைக்க விரும்பிய சாத்தர் நவயுகம் (Les Temps Modernes) என்ற பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அத்துடன் ‘சர்வதேச புரட்சிகர சனநாயக மக்கள் சபை’ என்ற அரசியல் இயக்கத்தையும் ஆரம்பித்தார். சாத்தரின் அரசியல் இயக்கம், கருத்து முரண்பாடு காரணமாக, சொற்ப ஆயுசுடன் முடிந்துவிட்டது. அவரது அரசியல் ஈடுபாட்டிற்கு எழுத்தாற்றல் மட்டும் எஞ்சி நின்றது. புதிய சோசலிசப் பாதையை வேண்டி நின்ற அவரது அரசியற் தத்துவார்த்த எழுத்துக்கள் மரபு வாதத்தில் மூழ்கிக்கிடந்த பிரெஞ்சு கம்யூனிச இயக்கத்திற்கு சினத்தை மூட்டியது.

மிகவும் பலம் வாய்ந்த அரசியற்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கட்சியாக, பாட்டாளி வர்க்கத்தின் ஏக பிரதிநிதியாக, பரந்து வளர்ந்து நின்ற பிரெஞ்சுக் கம்யூனிச இயக்கம் சாத்தரை சித்தாந்த விரோதியாகக் கண்டது. மனிதத்துவத்திற்கு முதன்மை கொடுத்த சாத்திரின் சோசலிச தரிசனத்தை 'அபத்தவாதம்' என்றும் 'பிற்போக்குவாதம்' என்றும் கிண்டல் செய்தது. சாத்தரும் பதிலுக்கு சொல் அம்புகளை ஏவினார். சோவியத் கம்யூனிசத்தின் கைப்பொம்மைகள் என பிரெஞ்சு கம்யூனிஸ்டுக்களை சாடினார். சுதந்திரமாகச் சிந்திக்க மறுக்கும் சித்தாந்தக் குருடர்கள் என கம்யூனிச புத்திஜீவிகளைக் கண்டித்தார். முரண்பாடு முற்றியது. பிரெஞ்சு கம்யூனிச அறிவு ஜீவிகள் மட்டுமன்றி ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய சித்தாந்தவாதிகளும் சாத்தருக்கு எதிராக அணி சேர்ந்தனர். தனி ஒருவனாக நின்று, முழுக்கம்யூனிச உலகத்துடனும் கருத்துப்போர் நடாத்தினார் சாத்தர். நாற்பதுகளின் நடுப்பகுதியில் தொடங்கிய இந்தக் கருத்துப் போர் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் வரை நீடித்தது. இந்தக் காலகட்டத்தில், அரசியற் தத்துவார்த்தக் கட்டுரைகள் மட்டுமன்றி, அரசியல் ஈடுபாட்டை வலியுறுத்தும் நாவல்களையும் படைத்து, நாடகங்களையும் மேடையேற்றினார்.

மரபுவாத கம்யூனிஸ்டுகளுடன் முரண்பட்டு நின்றபோதும், மார்க்சிய சிந்தனையின் மையக்கருத்துக்களை சாத்தர் ஏற்றுக்கொண்டார். கார்ள் மார்க்சின் வரலாற்றுப் பொருளியம் அவரை ஆழமாகப் பற்றிக்கொண்டது.

மார்க்சிய வரலாற்றியல் மானிடத்தின் உண்மைக் கதையைச் சொல்லுகிறது. மனித குலத்தின் சமூக வரலாற்றிற்கு உண்மை விளக்கத்தைக் கொடுக்கிறது. மனிதனை மையமாகக் கொண்டு மனித வரலாற்றைத் தரிசிக்க முனைகிறது. மனித உழைப்பிலிருந்து, அந்த உறவுகளின் பிணைப்பால் பிறக்கும் பொருளிய வாழ்விலிருந்து மனிதனின் கதையைச் சொல்லுகிறது. மனிதனின் இருண்ட வரலாற்றுக் குகைக்குள் வெளிச்சத்தைக் காட்டினார் மார்க்ஸ். அந்த வெளிச்சத்தில், கற்பித நிழல்கள் கலைந்து போக, மனிதனின் நிஜ உருவம், அவனது உண்மையான வரலாற்று முகம் தெரிந்தது. இந்த வகையில் வரலாற்றுப் பொருளியம் ஒரு புதுமையான கண்டுபிடிப்பு. இந்தத் தத்துவம் மனித சமூக வரலாற்று மெய்யுண்மையை புலப்படுத்தி நிற்கிறது என்றார் சாத்தர். மார்க்சின் மகத்துவம் இது மட்டுமல்ல. அநீதிகள் நிறைந்த மனித உலகத்தை அவர் மாற்ற விரும்பினார். புதியதொரு சமூக ஒழுங்கிற்கு வழிகாட்டினார். மார்க்ஸின் புதுமையான கருத்துலகம் வேறு; அந்தக் கருத்துக்களைப் பிரதிசெய்து கட்டப்பட்டிருக்கும் கம்யூனிச உலகம் வேறு. இந்தக் கம்யூனிச உலகம் மனிதத்துவத்திற்கு சமாதிகட்டிவிட்டது என்றார் சாத்தர்.

கம்யூனிச உலகம் மனிதத்துவத்தை இழந்து நிற்கிறது. தனி மனித நிதர்சனத்தை மறுதலித்து நிற்கிறது. மனிதனின் அக நிலை வாழ்வை அங்கீகரிக்க மறுக்கிறது. இந்த அடிப்படையான குறைபாடு காரணமாகவே இன்று கம்யூனிச உலகம் மனித முகமற்ற குரூபியாக மாறியிருக்கிறது.

மனிதன் பற்றிய புரட்சிகரமான பார்வையில் சோசலிச முகம் நிர்மாணிக்கப்படவேண்டும். மனிதத்துவத்தை மேம்பாடு செய்வதே சோசலிசத்தின் உண்மையான இலட்சியமாக அமையவேண்டும். இந்தக் கருத்தை மையமாகக் கொண்டு 1946-ல் பொருளியமும் புரட்சியும் (MATERIALISM AND REVOLUTION) என்ற நூலை வெளியிட்டார் சாத்தர். இந்தப் படைப்பில் மனிதாபிமான சோசலிசத்தை அவர் வலியுறுத்தினார்.

ஒரு புதிய மனிதனை, சுதந்திரமான மனிதனை உருவாக்கம் செய்வதே சோசலிசப் புரட்சியின் குறிக்கோளாக இருக்கவேண்டும். பாட்டாளி வர்க்க விடுதலை என்ற வரையறைக்குள் சோசலிசத்தின் எல்லைக்கோடுகளை நிர்ணயிக்கக்கூடாது. வர்க்க முரண்பாடுகள் நீங்கிய சமூகத்தில், சகல மனிதர்களும் சமத்துவமாக, சுதந்திரமாக வாழவேண்டும். சகல மனித உறவுகளும் ஒத்திசைவாக அமையவேண்டும். அதிகார உறவுகள் அற்றுப் போகவேண்டும். ஒருவனது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் மற்றவன் மதிக்கவேண்டும். தனி மனிதனது அகவாழ்வும், ஆற்றலும், ஆளுமையும் தளைத்தோங்க வழி செய்யவேண்டும். சோசலிசப் புரட்சியானது இந்தக் குறிக்கோள்களைக் கொண்டதாக அமையுமானால், ஒரு உன்னதமான சமத்துவ சமூகம் உருவாகும். அது மனிதத்துவத்தை மேம்பாடு செய்யும் என எழுதினார் சாத்தர்.

மனிதத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, மனிதாபிமான தர்மத்தை வேண்டி, சாத்தர் வலியுறுத்திய சோசலிசத் தத்துவத்தை கம்யூனிச உலகம் நிராகரித்தது. முதலாளிய அறநெறியை (BOURGEOIS ETHIC) பிரதிபலிக்கும் இருப்பிய கற்பனாவாதக் கருத்துக்களை 'விஞ்ஞான சோசலிச சிந்தனையில்' திணிக்க முயல்கிறார்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எனப் பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி சாத்தரைக் கண்டித்தது.

இருப்பிய தத்துவத்தின் அடிப் படைகளைப் புரியாது, அதனைப் பிற்போக்குவாதம் என்றும் அகவய மான கருத்தியக் கோட்பாடு என்றும் (SUBJECTIVE IDEALISM) கம்யூனிஸ்ட்டுகள் சித்தரிக்க முனை வது சிறுபிள்ளைத்தனமானது என் றார் சாத்தர். இந்த விமர்சனங்க ளுக்கு விளக்கம் அளிக்கும் வகை யில் இருப்பியமும் மனிதத்துவமும் (EXISTENTIALISM AND HUMANISM) என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு, 1946-ல் சிறு நூலாக வெளிவந்தது.




இந்தச் சிறிய நூலில் இருப்பிய தத்துவத்தின் அடிப்படைக் கோட் பாடுகளை விளக்க முனைகிறார் சாத்தர்.

இருத்தலிருந்துதான் ஒருவனது வாழ்வு தொடங்குகிறது. முதலில் மனிதன் இருப்புக் கொள்கிறான். அந்த இருப்பு நிலையிலிருந்து சுய விழிப்புக் கொள்கிறான். உலகத்தை அறிகிறான். உலகத்தோடு உறவு கொள்கிறான். அந்த உலகானுபவத் திலிருந்து தன்னைத்தானே உரு வாக்கிக் கொள்கிறான். மனிதமாக, மனித அகமாக, சுயமாக, ஆளுமை யாக, 'நானாக' உருவாக்கம் பெறும் மனித இயல்பை மனிதனே படைக் கிறான். இருப்பே எல்லாவற்றுக்கும் முன்நிலையானது; அடிப்படை யானது. இருப்பிலிருந்துதான் மனித இயல்பு தோன்றுகிறது. இதுதான் இருப்பியத்தின் அடிப்படைத் தத்து வம் என்கிறார் சாத்தர்.

மனிதர்களுக்குப் பொதுவான பண்பு எதுவுமில்லை. தெய்வமோ, விதியோ, மனிதனுக்கு அப்பாலான மறுவுலக சக்திகளோ, மனிதனைப் படைக்கவில்லை. மனிதனே தனது சித்தத்தால், செயலால், தன்னைத் தானே படைத்துக்கொள்கிறான்.

தனிமனிதன் என்பவன் சமூகப் பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் செல்லும் நிலையற்ற நீர்க்குமிழி அல்ல. அன்றி அவன் ஒரு உணர் வற்ற, உயிரற்ற, அசைவற்ற சடப் பொருளுமல்ல. மனிதன் என்பவன் வாழ்வுலகின் பேருண்மை. இருப்பி யக்கத்தின் மையம். அவன் சுய உணர்வுடன் சீவிப்பவன்; சிந்திப்ப வன். சுயமாக முடிவுகள் எடுப்ப வன். விருப்புக்கேற்ற தெரிவுகளைச் செய்பவன். எதிர்காலத்தை நெறிப் படுத்தி வாழ்பவன். பொறுப்புணர் வுள்ளவன். தனக்குக் கிட்டிய வாய்ப்புக்களைக் கொண்டு, தனது சித்தத்திற்கு ஏற்றவாறு தன்னை உருவாக்கிக் கொள்பவன். அவனது ஒட்டுமொத்தமான செயற்பாடு களே அவனது தனித்துவத்தையும், சுயத்தையும், வாழ்நிலையையும் நிர்ணயித்துவிடுகிறது. தனிமனிதனா னவன் மானிடத்தின் பொதுப்படி மம். அந்தத் தனிமனிதன் தன்னை உருவாக்கம் செய்யும்போது மானி டமும் உருவாக்கம் பெறுகிறது.

பொருளியத்திற்கு முதன்மை கொடுத்து மனிதனது அகவயமான வாழ்வை மார்க்சீயம் புறக்கணிப் பது தவறு என்கிறார் சாத்தர். மனிதன் அகநிலையில் வாழ்பவன். மனித உறவுகளுக்கு எல்லாம் அகநிலைதான் ஆதாரம். எனக்கும் மற்றவனுக்கும் ஏற்படும் உறவு அகவயமானது. அகநிலையில்தான் மற்றவனை தெரிந்துகொள்கிறேன். அகநிலை உறவுகளே மனித உற வாக, சமூக உறவாக, கூட்டுறவாக பரிணமிக்கிறது. அகநிலையில் தான் தனிமனிதன் ஒருவன் சமூக உலகில் சங்கமித்துக்கொள்கிறான். "மனித உலகத்தைத் தவிர, வேறு உலகம் எதுவுமில்லை. அந்த மனித உலகம் அகவயமானது" என்கிறார் சாத்தர்.

மனிதன் தனக்காக வாழாமல், தன் நலனுக்காக வாழாமல், தனக்கு அப்பால், தனது சுயத்திற்கு அப்பால், மற்றவர்களுக்காக, மற்ற வர்களின் நலனுக்காக, மானிடத் தின் நல்வாழ்விற்காக, தன்னை அர்ப்பணித்து வாழும் மாண்பினை மனிதத்துவம் என்கிறார் சாத்தர். தன்னை விஞ்சி வாழ்பவன், சுயத் தின் எல்லைகளைக் கடந்து மற்ற வர்களுக்காக வாழ்பவன், மானி டத்தின் உயர்ச்சிக்காக வாழ்பவன், உண்மையான மனிதனாக வாழ்கி றான். மனிதத்துவம் அவனிடம் நிறைவுபெறுகிறது. இதுதான் இருப் பியம் வேண்டிநிற்கும் மனிதாபிமா னம் என்கிறார் சாத்தர்.

மனிதத்துவத்திற்கு முதன்மை கொடுத்த சாத்தரின் இருப்பியத்தை பிரஞ்சு கம்யூனிச உலகம் ஜீர ணிக்க மறுத்தது. இருப்பியத்தில் இழையோடும் தனிமனித தரிசனம் மார்க்சிய சமூகவியலுக்கு முரணா னதென கம்யூனிஸ்டுகள் வாதிட்ட னர். இந்த அடிப்படை முரண்பாடு காரணமாக, பிரஞ்சு கம்யூனிசக் கட்சியில் இணைந்து செயற்பட சாத்தர் மறுத்தார்.

சோசலிசப் புரட்சிவாதி என்ற ரீதியிலும் அரசியல் ஈடுபாடுடைய இலக்கியவாதி என்ற ரீதியிலும், ஒடுக்கப்படும் மக்களுடன், பாட் டாளி வர்க்கத்துடன் அணிசேர்ந்து நிற்க சாத்தர் ஆவல் கொண்டார். அந்த மக்களுக்காக எழுதவும், குரல் கொடுக்கவும் விரும்பினார். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு முட்டுக்கட்டையாக நின்றது. இது பற்றி சாத்தர் குறிப்பிடும்பொழுது "நாம் எந்த மக்களுக்காக குரல் கொடுக்க விரும்புகிறோமா அந்த மக்கள், எம் நாட்டு மக்கள் ஒரு இரும்புத் திரையால் எம்மிலிருந்து பிரிந்து நிற்கிறார்கள். எமது எண் ணங்கள், நாம் சொல்ல விரும்பும் கருத்துக்கள் அவர்களை எட்டப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


போவதில்லை. தொழிலாளவர்க்கத்தின் பெரும் பகுதி ஒரு கட்சிய மைப்பிற்குள் கட்டுண்டு கிடக்கிறது. ஒரு பிரச்சார வலைக்குள் சிக்குப்பட்டு கிடக்கிறது. கதவுகளும், சன்னல்களும் இல்லாத ஒரு மூடப்பட்ட சமூகமாக இந்த வர்க்கம் வாழ்கிறது. இவர்களை அணுகுவதற்கு ஒரேயொரு வழியுண்டு. ஒரு ஒடுங்கிய பாதையுண்டு. அதுதான் கம்யூனிஸ்ட் கட்சி" என்று எழுதினார்.

இந்தக் கம்யூனிஸ்ட் கட்சி பழமையில் புதைந்து கிடக்கிறது. மரபுவாத சித்தாந்தத்தில் மூழ்கிக் கிடக்கிறது. தவிர்க்கமுடியாத வரலாற்று விதிகளில் நம்பிக்கை வைத்திருக்கிறது. பொருளிய நிர்ணய சக்திகளை ஏற்றுக்கொள்கிறது. சுய சிந்தனைக்கு வரம்புகளை விதிக்கிறது. மனிதாபிமான அரசியலை மறுக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, சோவியத் சர்வாதிகாரத்திற்கு முண்டு கொடுக்கிறது. அதன் அழுத்தத்திற்குப் பணிந்து பொம்மலாட்டம் ஆடுகிறது. இப்படியான ஒரு கட்சியில் இணைந்து கொண்டு இலக்கியக் கலையில் ஈடுபடமுடியாது என்ற முடிவுக்கு வந்தார் சாத்தர்.

அன்றைய காலப்பகுதியில், ஸ்டாலினிச ஆட்சியை எதிர்த்த 'தலைமறைவு எழுத்துக்கள்' ரஷ்ய பாதாள உலகிலிருந்து ஐரோப்பாவுக்கு கடத்திவரப்பட்டது. இரும்புச் சுவர்களுக்குப் பின்னால் மௌனமாகிப் போன மனிதர்களின் பெருமூச்சுக்கள் வெளியுலகிற்கு கேட்கத் தொடங்கியது. கம்யூனிசத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நின்ற சாத்தருக்கு புதிய ஏவுகணைகள் கிடைத்தன.

ஸ்டாலினிச ரஷ்யா ஒரு நரக உலகம். இரகசியப் பொலிஸ் பேய்கள் ஆட்சிபுரியும் இராட்சியம். அங்கு, இரவோடு இரவாக மனிதர்கள் இல்லாமல் போகிறார்கள். புதைகுழிகளின் இருளுக்குள் மனித சுதந்திரங்கள் மௌனித்து விடுகின்றன. தனிமனித அடையாளங்கள், தடயங்களெதுவுமின்றி அழிக்கப்படுகிறது. சர்ச்சைக்குரிய கருத்துக்கள் சமாதிக் கற்களுக்குள் முடங்கிவிடுகின்றன. நகரத்துச் சிறைகள் நிரம்பி வழிய, பாலைவன பனிமண்டலங்கள் கூட்டு விவசாயச் சிறைக்கூடங்களாக மாற்றப்படுகின்றன. சைபீரிய பனிமண்டலம் ஒரு பிரமாண்டமான வதைமுகாம். இங்கு உயிரோடு உறைந்துபோன மனிதர்களை எண்ணிக்கையில் சொல்லமுடியாது. தெளிவோடு சிந்தித்தவர்கள் பைத்தியக்கார விடுதிகளில் தள்ளப்படுகிறார்கள். அங்கு அவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் நடக்கிறது. அதிர்ச்சியால் தெளிவு பெறாதவர்களுக்கு மூளைய அறுவைச் சிகிச்சையும் நடக்கிறது.

ரஷ்ய கம்யூனிசத்தின் அசிங்கமான முகத்தை அம்பலப்படுத்தினார் சாத்தர். அந்த அதர்ம ஆட்சிக்கு முண்டுகொடுத்து நின்ற ஐரோப்பிய கம்யூனிஸ்டுகளையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். சாத்தரின் குற்றப்பத்திரிகை கம்யூனிஸ்டுகளுக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியது. சாத்தரை அவர்கள் மிகவும் கீழ்த்தரமாகத் தாக்கினர். வரலாற்றுக் குப்பைத்தொட்டியில் கிடந்தபடி 'குமட்டும் இலக்கியம்' படைப்பவர் என பிரஞ்சு கம்யூனிச புத்திஜீவி ஒருவர் ஆத்திரத்தைக் கொட்டினார். அமெரிக்க புலனாய்வுத்துறையின் முகவர் என்றும், 'முப்பது வெள்ளிக் காசுக்கு தன்மானத்தை விற்ற யூதாஸ்'







ஜேர்மனியில் தமிழ் மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட நிகழ்வில் சில காட்சிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வெறிபிடித்த மனிதர்களும் தாயகப் பயணிகளும்

- வாசன்

பொல்கொட வாவியின் கரைகளில்
நாணல்கள் நெரியும்
வாவிக்குள்ளிருந்தும் சூரியன் எழுவானா
இப்படி முகம் சிவந்து?
இன்னும் நம்பிக்கையோடு
ஒளிக்கீற்றுக்குள் தோய்ந்து
சிறக்கை விரிக்கிறது ஒரு சின்னப்பட்சி
கால்களில்
ஒட்டிய மண்ணின் துகள்களோடு
கனவுகளையும்
சில சின்னச் செய்திகளையும் கொண்டு
கிளாலியைக் கடந்த
தாயப் பயணிகள் மீது
வெறிபிடித்த மனிதர்கள்
நீர் சுரக்கும் விசர் நாய்களைப் போல.

***

கால்களை இறுகக் கட்டினார்கள்
கைகளை இறுகக் கட்டினார்கள்
பட்டினி போட்டார்கள்
பற்களை வேறாகவும்
தலைகளை வேறாகவும்
உடைகளை வேறாகவும் ஆக்கி
நீருள் அமுக்கி
கலையாகச் செய்ய
அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

***

ஓர் இரவில்
கொழும்புத் தலைநகரெங்கும்
திரியும் மனிதர்களின் தலையில்
கொம்புகள் முளைத்திருப்பதை
குழந்தைகளும் கண்டதாகச்
சொல்கிறார்கள்
இன்னும் அச்சத்துள்
மூழ்கி மூழ்கி
அவர்கள் பிணம் தின்னும்
பேயாய் அலைதல் கூடும்.
வாவிகளின் கரைகளில்
எங்கும் உள்ள அரச மரங்கள்
வேருடன் சாய்தல் நிகழும்
எந்தத் தரிசனமும்
அவர்க்கினி வாய்க்காது போக

***

வாவிகளில் மிதப்பது
தமிழர் சடலங்களல்ல.
சின்னக் கனவுகள்.
வாழ்தலுக்கான விருப்பங்கள்
அயலவர் என்கின்ற நினைப்பு.
தொலைவில் உள்ள
உறவுகளோடும் பேசத் துடிப்பதற்காக
இறுதியாய் இயங்கிய இதயங்கள்.

***

வாவிகளில் நீர் மொள்ள வந்த
சின்னப் பெண்ணின்
கண்களில் வழியும் நீர்துளி
அவளைச் சிலையாய்
வடித்து சிங்கள
தேசத்து தெருவெங்கும்
புதிதாய் நடுக.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


என்றும் பிரபல ரஷ்ய எழுத்தாளர் ஒருவர் சாத்தரைச் சாடினார். வாதப்பிரதிவாதங்கள் வலுத்தது. இந்தக் காலகட்டத்தில் கம்யூனிஸ உலகால் மிகவும் வெறுக்கப்பட்ட மனிதராக, எல்லா முனைகளிலிருந்தும் கண்டனக் குரல்களை சாத்தர் எதிர்கொண்டதாக சிமோன் டு போவா (SIMONE DE BEAUVOIR) சாத்தரின் வாழ்க்கைக் குறிப்பில் எழுதுகிறார்.

1948-ல் பாரிஸில் மேடையேறிய, சாத்தரின் அழுக்கான கரங்கள் (DIRTY HANDS) என்ற நாடகம் பிரஞ்சு அரசியல் உலகில் சூறாவளியைக் கிளப்பியது. இந்த நாடகம், வைதீக கம்யூனிஸ்ட்டுகளின் அரசியல் நடைமுறையை கடுமையாக விமர்சித்தது.

கதாநாயகன் ஹோடரர் ஒரு கண்ணியமான கம்யூனிஸ்ட். நேர்மையானவன். மக்கள் நேயமுடையவன். சமநீதி சமூகத்தை இலட்சியமாக வரித்துக்கொண்டவன். ஒரு எதார்த்தவாதி. மார்க்சிய அறிவு ஜீவி. சமூக உலகத்து முரண்களை ஆழமாக ஆய்வு செய்து, அறிவியல் அடிப்படையில் சமூகப் பிரச்சினைகளை அணுக விரும்புபவன். கட்சியில் மிகவும் பிரபல்யமானவன். கட்சித் தொண்டர்களால் பெரிதும் மதிக்கப்படுபவன்.

ஹோடரருக்கு எதிராக கட்சிக்குள் ஒரு அணி செயற்படுகிறது. லூயி, ஒல்க எனப்படும் இரு பாத்திரங்கள் இந்த அணியின் தலைவர்கள். இவர்கள் பழமைவாதிகள், மரபுவாதிகள், புதிய அணுகுமுறைகளை எதிர்ப்பவர்கள். சோவியத் கம்யூனிசத்தை வழிபடுபவர்கள். சோவியத்தின் கைப்பொம்மைகள். இவர்கள் கதாநாயகன் ஹோடரரை கொலை செய்யத் திட்டம் தீட்டுகின்றனர். கட்சியில் புதிதாக இணைந்திருந்த ஹூகோ எனப்படும் ஒரு இளைஞனை இந்தக் கொலைக்குத் தூண்டிவருகின்றனர்.

ஹூகோ இலட்சியமற்றவன். பொறுப்புணர்வற்றவன். ஒரு பணக்காரக் குடும்பத்தை பின்னணியாகக் கொண்டவன். தனக்கென ஒரு தனித்துவத்தைத் தேடி கட்சியில் இணைந்தவன். கொலைச் சதிக்கு சம்மதிக்கிறான்.

# வானிலும் புயலெழும்

உம் பாட்டனுக்குப் பாட்டன்
பட்டாப் போட்டது போல்
பயமின்றி உரிமையாய்
எமன் வாகன
எருமைப் புளுகையும்
மெய்யாக்கித் திரிந்தநீர் அன்றோ?

இனியெங்கள்
வானிலும் புயலெழும்
எதிரி வாயிலே மண்விழும்

படிக்கும் பள்ளிகள்
கடவுளர்
பள்ளி கொண்ட கோயில்கள்
வாழ் மனையெல்லாம்
பொடிந்திடக் குண்டு பொழிந்த நீர்
வெடித்திட
இனியெங்கள்.....

உயிரைப் பறித்து
உறவைப் பறித்து
கால்கை தறித்து
உள்ளமும் எரிய
வயிறும் எரிய
வலம் வந்த நீர்
எரிந்தே வீழ்ந்திட
இனியெங்கள்....

பச்சைக் குழந்தை சாகவும்
பயிர் நிலம் தீய்ந்து போகவும்
ஆடு மாடுகள் மாண்டு போகவும்
எப்படி எதிரியானது.....?
இனியெங்கள்......

பகைத்தலை நசுக்க
தடைகளைத் தாண்டி
எம் கால்கள் வழுக்க
உம் குண்டு மழை
தூவல் நிறுத்தி
இனியெங்கள்......

தரைப்படைத் தாத்தாக்கள்
தகறியோடுரந்து
தள்ளாடி விழுகையில்
வான் படை வந்து
கைத்தடி கொடுத்த
கதையெல்லாம் முடித்து
இனியெங்கள்.......

உரிமைக்கு
உறைபோட்டு மூடி
விடுதலைக்கு
விலங்கிட நினைத்தீர்;
வெட்கக்கேடு!
காலடி மண்ணே
கைநழுவிப் போகையில்
எல்லை காண வானத்தை நம்பியா
வல்லாட்சி செய்வது?
இனியெங்கள்...

எம் தோழமைப் பறவை திரிந்த
மண்ணும், மலரும், தீந்தமிழும்
மணந்து மிதந்த வானில்
உலுப்பிய புளியம் பழமாக
குண்டுகள் உதிர்த்த
எம்சாவின் தூதுவர்
சரித்திரம் முடித்து
இனியெங்கள்......

- சோலை. உலகன்




"முன்னோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது தாம் வாழ்ந்த வீட்டை விட்டுச் செல்லும் இவர்கள் உங்கள் உள்ளத்துள் எழுதும் சோகத்தை கவிதையாக எழுதி எரிமலையில் காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கட்சியில் முக்கியத்துவம் பெற கொலைச் செயலை ஒரு வாய்ப்பாகக் கருதுகிறான். கொலை நோக்குடன் கதாநாயகனை எதிர் கொள்ளுகிறான். தனது கொலையாளியென நன்கு தெரிந்தும் ஹோடரர் அவனை அன்புடன் அரவணைத்துக்கொள்கிறார். தன்னைப் பற்றிச் சொல்கிறார். தனது குறிக்கோள் பற்றிக் கூறுகிறார். கொலையாளியின் மனிதத்துவத்தை தொட்டுவிட முனைகிறார். ஆனால் அவனிடம் மனிதத்துவம் செத்துப்போய் கிடந்தது. ஈவிரக்கம் காட்டாது அவன் கதாநாயகனை கொலைசெய்து விடுகிறான்.




கொலை நடந்து முடிந்ததும், சதிகாரர்களின் கையாட்கள் வருகின்றார்கள். ஹூகோ மீது கொலைப் பழி சுமத்தி அவனைக் கைது செய்ய முயற்சிக்கிறார்கள். அப்பொழுது தான் அவனுக்கு வெளிச்சம் ஏற்பட்டது. சதியின் சூத்திரம் புரிந்தது. அழகான மனிதன் ஒருவனை அநியாயமாக அழித்துவிட்டதாக உணர்கிறான். இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை. தான் தேடியலைந்த தனித்துவத்தை அழித்துவிட முடிவுசெய்கிறான். தற்கொலை செய்து கொள்கிறான். ஹோடரரின் மறைவின் பின்னர், அவரைக் கொலை செய்யச் சதி செய்த கட்சித் தலைமை அவரைத் தியாகியாகப் போற்றியது. அந்தப் புகழஞ்சலிகள் அவரது வரலாற்றைப் புதைத்துவிடுகிறது.

மரபுவரை கம்யூனிசம் மனிதாபிமானத்தை கொலை செய்துவிட்டது என்பதுதான் நாடகத்தின் கருப்பொருள். சாத்தரின் தத்துவம், மிகவும் நுட்பமாக, உணர்வுபூர்வமாக கலைவடிவத்தில் சொல்லப்பட்டது. நாடகத்திற்கு ஒருபுறம் பெரும் வரவேற்பும், மறுபுறம் பெரும் கண்டனமும் கிடைத்தது. ஐரோப்பிய முதலாளித்துவப் பத்திரிகைகள் நாடகத்தைப் புகழ்ந்துரைத்தன. கம்யூனிஸ்டுகள் பகிஸ்கரித்தனர். பொலிஸ் பாதுகாப்புடன் 'அழுக்கான கரங்கள்' வெற்றிகரமாக மேடைகளில் ஏறியது.

1953-ம் ஆண்டு ஸ்டாலின் காலமானார். கம்யூனிச உலகம் மீது கவிந்திருந்த இருண்ட மேகம் அகன்றுவிட்டதாக சாத்தர் எண்ணினார். சர்வாதிகாரத்தின் இரும்புக்கரங்களிலிருந்து விடுபட்ட சோவியத் நாடு சனநாயக சோசலிச பாதையில் நடைபோடும் என அவர் நம்பினார். இந்தப் புதிய நம்பிக்கை அவரது சிந்தனையிலும் செயலிலும் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. கம்யூனிஸ்ட்டுக்களுக்கு நேசக்கரம் நீட்டினார். அவர்களும் அதைப் பற்றிக்கொண்டனர். கருத்துச் சமர்கள் முடிவுக்கு வந்தன. 1954-ல் சோவியத் யூனியன், சீனா உட்பட கம்யூனிச நாடுகளுக்கு ஒரு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டார் சாத்தர். தனித்துவமான, முற்போக்கான ஒரு மார்க்சிய சிந்தனையாளராக கம்யூனிச உலகம் சாத்தரை ஏற்றுக்கொண்டது. பிரஞ்சு கம்யூனிச இயக்கத்தின் நண்பராக, ஆதரவாளராக சாத்தர் செயற்பட்டார். உலகப் பிரபல்யம் பெற்ற ஒரு தத்துவாசிரியருடன் பிணக்குப்பட்டு நிற்காமல், அவரைத் தமது அணியில் இணைத்துக்கொண்டதையிட்டு கம்யூனிஸ்ட்டுகள் திருப்திகொண்டனர். ஆயினும் இந்த நட்புறவு நீண்ட காலம் நீடிக்கவில்லை. 1956-ல் சோவியத் யூனியன் ஹங்கேரி மீது படையெடுத்தது. ஹங்கேரிய எதிர்ப்பியக்கம் ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்டது. சாத்தரின் நம்பிக்கை இடிந்துபோயிற்று. அவர் சோவியத் யூனியனை வன்மையாகச் சாடினார். மனித குலத்திற்கு எதிரான மாபெரும் குற்றம் எனக் கண்டனக் குரல் எழுப்பினார். மௌனத்திற்குள் மனச்சாட்சியை புதைத்து நின்ற பிரஞ்சு கம்யூனிச இயக்கத்தையும் அவர் கண்டித்தார். கட்சியுடன் உறவுகளையும் துண்டித்தார். ஆயினும் அவர் மீண்டும் கருத்துப் போரைத் தொடங்கவில்லை. கம்யூனிச உலகம், வரலாற்றுப் பள்ளங்களில் விழுந்து, எழுந்து, நிமிர்ந்து நடக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பும் அவரிடம் இருக்கத்தான் செய்தது.

ஐம்பதுகளில் படைப்பிலக்கியத்துடன் நின்றுவிடாமல், மூன்றாம் உலகத்து மக்களுக்காகவும் குரல்கொடுத்தார் சாத்தர். பிரஞ்சு காலனித்துவத்திற்கு எதிராக நிகழ்ந்த வியட்னாமிய, அல்ஜீரிய விடுதலைப் போராட்டங்களையும் ஆதரித்தார். அல்ஜீரிய விடுதலை இயக்கத்திற்கு மறைமுகமாக உதவிகளைச் செய்தார். பிரஞ்சுக் காலனிய கொடுமைகளை அம்பலப்படுத்தினார். அல்ஜீரிய மக்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களையும் முன்னின்று நடத்தினார். இதனால் பிரெஞ்சு ஆட்சியாளர்கள் அவரைத் தேசவிரோதியாகக் கண்டனர். கொலை முயற்சிகளும் நடந்தன. பாரிஸிலுள்ள அவரது வாசஸ்தலம் குண்டுவெடிப்புகளுக்கும் இலக்காகியது. உலக சமாதான இயக்கத்திற்கு தலைமை தாங்கி நின்றதால் அவரைக் கைதுசெய்து சிறையில் தள்ளிவிட பிரஞ்சு அரசு துணியவில்லை.

மேற்குலக காலனித்துவத்திற்கு எதிராகப் போர்தொடுத்து நிற்கும் உலகப் புரட்சிகர இயக்கங்களை சாத்தர் ஆதரித்தார். மேற்குலக வல்லரசுகளை மட்டுமன்றி, மேற்குலக மக்களையும் 'காலனித்துவ சுரண்டல்காரர்கள்' என வர்ணித்தார். ஐரோப்பிய மனிதன் ஒவ்வொருவனதும் அந்தரங்க ஆன்மாவினுள் காலனித்துவ பிசாசு குடிகொண்டிருக்கிறது என அவர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எழுதியது ஐரோப்பியருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

பிராங்ஸ் பனன் எழுதிய 'பூமியின் இழிநிலைப்பட்டோர்' (WRETCHED OF THE EARTH) என்ற நூலுக்கு அவர் எழுதிய அறிமுகக் கட்டுரை மிகவும் பிரபல்யமானது. அதில், காலனித்துவத்தின் முக மூடியை கிழித்துக்காட்டினார்.

பூமியின் முகத்தை காலனித்துவம் சிதைத்துவிட்டிருக்கிறது. தேசங்களைப் பிரித்து, சமூகங்களை உடைத்து, பண்பாடுகளை சீர்குலைத்துவிட்டிருக்கிறது. ஒன்றுபட்டு வாழ்ந்த சுதேசிய மக்களை வர்க்கங்களாகப் பிளவுபடுத்தி, நீங்காத முரண்களைத் தோற்றுவித்திருக்கிறது. மேற்குலக மனிதர்கள் எல்லோருமே காலனித்துவத்தால் இலாபமடைந்திருக்கிறார்கள். இந்த வகையில், மேற்குலக மனிதர்கள் எல்லோருமே காலனித்துவவாதிகள். காலனித்துவம் புரிந்துவரும் பொல்லாத பாவங்களுக்கு எல்லோருமே பொறுப்பாளிகள். ஒடுக்கப்படும் மனிதர்களின் ஆத்திரமும், ஆவேசமும், ஆழமான வெறுப்புணர்வும் வன்முறைப் புயலாகக் கிளம்பும். ஐரோப்பியனுக்கு எதிராக வன்முறையைக் கையாண்டே அடக்கப்படுபவன் தனது மனிதத்துவத்தை நிலைநாட்டிக்கொள்வான். இது தவிர்க்கமுடியாத வரலாற்று நிர்ப்பந்தம். "முன்பு, கடந்த காலத்தில், நாம் வரலாறு படைத்தோம். இனி எமக்காக வரலாறு படைக்கப் படும்." என்று எழுதினார் சாத்தர்.

*1964*-ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு சாத்தருக்கு கிட்டியது. அந்தப் பரிசை ஏற்றுக் கொள்ள அவர் மறுத்தார். மேற்குலகத்தின் நலனைப் பேணும் ஒரு முதலாளிய நிறுவனத்திடமிருந்து 'கலாச்சாரப் பிரமுகர்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்ள தாம் விரும்பவில்லை என அவர் பகிரங்கமாக அறிவித்தார். "அல்ஜீரிய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னராக அல்ஜீரியப் போராட்டத்தில் நான் தீவிரமாக ஈடுபட்ட காலத்தில் இந்தப் பரிசு எனக்கு வழங்கப்பட்டிருந்தால் நான் அதை ஏற்றுக்கொண்டிருப்பேன். அது எனக்குக் கிடைத்த தனிப்பட்ட மதிப்பாக அல்லாமல், அல்ஜீரிய சுதந்திரப் போராளிகளுக்கு கிடைத்த கௌரவமாக அதனைக் கருதியிருப்பேன்." என்று குறிப்பிட்டார் சாத்தர்.

**(அடுத்த இதழில், சாத்தரின் தனி மனித சமூகத்துவமும் மார்க்சியமும் என்ற பொருள் பற்றி எழுதுகிறார் பிரம்மஞானி)**

# பாக்கியம் மாமியும் பரமேசுவரியும்



பாக்கி: ஆர் மேனை உது... பரமேசுவே... துலையாலையே வாறாய்?

பரமேசு: எங்கடை வேலுப்பிள்ளைச் சாத்திரியையிட்டைப் போட்டு வாறனணை... வெய்யில் நல்லா எரிச்சுப்போட்டுது...!

பாக்கி: வேலுப்பிள்ளைச் சாத்திரியாரிட்டையோ? ஏன் மேனை அங்கை...? ம்...

பரமேசு: என்ர மூத்தவளின்ரை குறிப்புப் பாத்தனான்...

பாக்கி: ஆ... ஆ... என்னவாம்?

பரமேசு: இந்தப் பங்குனிக்குள்ளை... அனுப்பட்டாம்... நல்ல காலமாம்...

பாக்கி: எங்கையடி மேனை அனுப்பப் போறாய்...?

பரமேசு: என்னணை தெரியாத மாதிரிக் கேக்கிறாய்.... அவளுக்கெல்லே பிரான்சிலை சம்பந்தம் சரிவந்திருக்கு...

பாக்கி: ஒரு காலத்திலை எங்கடை நாட்டிலை இருந்து அரிசி மூட்டை, பொயிலைச் சிப்பம், பாக்குமூட்டை எண்டு சீமைக்கு அனுப்பி பொருள் தேடினம்... இண்டைக்கு பெத்த பொம்பிளைப் பிள்ளையளை வெக்கமில்லாம ஏத்தி ஏத்தி அனுப்புறம்...

பரமேசு: எணை மாமி... ஏனணை அழுகிறாய்... நானிப்ப என்ன சொல்லிப்போட்டன்?

பாக்கி: இல்லையடி மேனை... பெத்த உங்களுக்கே பிள்ளையளின்ர அருமை தெரியேல்லை... அதுகள் சீமைக்குப் போய் படுறபாடுகளை பேப்பர் வழியவும், றேடியோவிலையும் கேக்க எனக்கு வயித்தப் பத்தி எரியுதடி...

பரமேசு: நீ என்னணை மாமி சொல்லுறாய்?

பாக்கி: குரங்குகள் குட்டியளை வயித்திலை காவுதுகள்... ஏன் கங்காறுவோ என்னவோவாம் அது வயித்துப் பையிலை குட்டியளைக் காவுதாம்... அந்த மிருகங்களுக்கு இருக்கிற உணர்வுகூட உங்களுக்கில்லையடி மேனை... டாம்பீகத்துக்காண்டி பிடிச்சுப் பிடிச்சு அனுப்பிறியளே...

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



" தனிமை ~ ஓவியத்தின் தலைப்பு

ஓவியம் ~ மகா"

www.tamileelamarchive.com